புதுமை

476

ஆசிரியர் : கோசல்ராம்

PUTHUMAI ஜூலை 1. 25 காசு 1958



இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட் மதராஸ்.1.

தொழிற்சாலை : சங்கர்நகர், திருநெல்வேலி ஜில்லா

சங்கர் இன்ஸ்டிடியூட் ஆப் பாலிடெக்னிக்

(ஆல் இந்தியா டெக்னிகல் எடுகேஷன் கவுன்ஸிலால் அங்கீரிக்கப்பட்டது)

தாழையூத்து : : திருநெல்வேலி ஜில்லா.

★

கீழ்க்கண்ட 3-வருட டிப்ளமா கோர்ஸுகளில் இப் பாலிடெக்னிக் பயிற்சி தரும்.

1. மெக்கானிகல் என்ஜினியரிங் (L. M. E.),
2. எலக்ட்ரிகல் என்ஜினியரிங் (L. E. E.),
3. ஸிவில் என்ஜினியரிங் (L. C. E.).

எஸ். எஸ். எல். ஸி. யை காம்போஸிட் கணிதம் அல்லது பைப்ரிபிகேடட் திட்டத்தின் கீழ் என்ஜினியரிங் எடுத்து பாஸ் செய்து, யூனிவர்ஸிட்டி வகுப்புகளில் சேரத் தகுதி பெற்றவர்களின் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பதாரரின் வயது, ஜூலை முதல் தேதி 1958-ல் 15-ஆண்டுகளுக்குக் குறைவாகவோ அல்லது 20-ஆண்டுகளுக்கு மேலோ இருக்கக்கூடாது. ஷெட்யூல்டு ஜாதியினரின் விஷயத்தில், அதிகபட்ச வயது வரம்பு மூன்று ஆண்டுகள் அதிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திட்டப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்ப பாரத்தை, செகரட்டரி, தி இண்டியா ஸிமெண்ட்ஸ் எடுகேஷனல் டிரஸ்ட், C/o தி இண்டியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட், தபால் பெட்டி. நெ. 161, 11-12, ஸெகண்ட் லேன் பீச், சென்னை-1, என்ற விலாசத்தில் 50 ந. பைசா மதிப்புள்ள தபால் தலைகளை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்களைப் பெற கடைசி நாள் 15—7—1958.

செகரட்டரி,

தி இண்டியா ஸிமெண்ட்ஸ் எடுகேஷனல் டிரஸ்ட்.

THE LAKSHMI MILLS COMPANY LIMITED

PAPPANAICKENPALAYAM,

COIMBATORE.

Telephone : **18** & 818 Branch at **Kovilpatti** : Telephone : 18.
Telegrams : 'LAKSHMI' Telegrams: 'LAKSHMIMIL'

SPINDLAGE AT COIMBATORE—59,680 & LOOMS 200
KOVILPATTI — 51,120

★

SPINNERS OF :

Quality Cotton Yarn 20^s to 100^s Combed and Staple Fibre Yarn

★

Manufacturers of :

GREY LONGCLOTH AND MULLS

: MANAGING AGENTS :

G. KUPPUSWAMY NAIDU & CO.,

COIMBATORE.

புதுமை

ஆசிரியர் :
கோசல்ராம் எம்.எல்.சி.,

நிர்வாக ஆசிரியர் :
P. X. ரங்கசாமி B.A.,

பொருளடக்கம்

"மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்க ளாக்குவோம்"

மணி 1	ஜுலை 1958	ஓசை 12

			பக்கம்
அரசியல் :			
முட்டுக்கட்டை! (கார்ட்டூன்)		...	4
வேண்டாம், இனி வேலை நிறுத்தங்கள்!		...	5
பண்டாரா! பதில் சொல்லுங்கள்!		...	7
தூத்துக்குடியே சிந்திப்பாய்!		...	9
தொடர் கதைகள் :			
காமனை வென்ற கண்	சுகி	...	33
வள்ளியின் உள்ளம்	கு. ப. சேது அம்மாள்	...	67
கதைகள் :			
தெளிவு	திருச்சி வாசுதேவன்	...	19
மயக்கம் தெளிந்தது	நிலக்கோட்டை சங்கரசுப்பு	...	27
வாழ்க்கை தெளிந்தது	திருவிடைமருதூர் சேஷாத்திரி	...	49
கல்லடிக்குக் காசுகள்	த. சண்முக சுந்தர பாண்டியன்	...	57
பேட்டி :			
இசைக் குயில் பி. சுசிலா	ஆரெஸ்ஸஸ்	...	90
கட்டுரைகள் ;			
கடலில் மூழ்கி, நன்முத்தெடுப்போம்	வேல்முருகன்	...	11
சும்மா, சும்மா!	புதுமைச்சித்தன்	...	15
காதல் வினைத்தாள்!	இறைவன்	...	61
பாண்டியன் காத்த பதினாறு தூண்கள்	அழகரசன்	...	77
நவயுவதிகளும், நாகரீகமும்	ஜனககுமாரி	...	93
இயற்கை வைத்தியம்	என். எஸ். சுப்பையர்	...	95
கலைப் பகுதி :			
மாலையிட்ட மங்கை	ரசிகன்	...	83
செங்கோட்டை சிங்கம்	...	...	85
நாட்டியம்	ரஞ்சன் பி.ஏ.எம்.லிட்.,	...	88

'புதுமை'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

முட்டுக்கட்டை!

197695

புதுமை

வேண்டாம், இனி வேலை நிறுத்தங்கள்!

சென்ற ஆண்டு கோடையிலே நாடு 'ப்ளு' வியாதியால் துன்புற்றது; இந்த ஆண்டிலோ வேலை நிறுத்த வியாதியால் அவதிப்படுகிறோம்.

'ப்ளு' மனிதர்களைத் தாக்கி, சக்தியை நிலை குலையச் செய்தது; வேலை நிறுத்தங்களோ தேசியப் பொருளாதாரத்தை சிதைத்து வருகின்றன. நமது கருத்தில், டாடா தொழிலாளர் வேலை நிறுத்தம் முதல் பம்பாய் நகரசுத்தித் தொழிலாளர் வேலை நிறுத்தம் அடங்கலாக துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தம் வரை எல்லாமே தேசியப் பொருளாதாரத்தைச் சிதைப்பவைதான்.

வெள்ளையன் வெளியேறினான், காலியான தேன் கூடாக இந்தியாவை விட்டுவிட்டு; கூட்டிலே தேன் சேர்த்தாக வேண்டும்; நாட்டிலே பொருளாதார சுதந்திரம் சமைக்கவேண்டும். அதற்குத்தான் எத்தனை இடையூறுகள்!

இந்தியாவின் ஜனநாயக சோஷலிஸமா? அல்லது செஞ்சீனாவின் சர்வாதிகார கம்யூனிஸமா? ஆசிய நாடுகள் வறுமை போக்க எது நேர்மையான வழி? என்ற கேள்விக்கு விடைகாணும் சரித்திர முக்கியத்வம் வாய்ந்த சந்தர்ப்பத்தில் நாம் இன்று இருக்கிறோம்.

பாலைவனம் சோலைவனமாக, நாடு தொழில் மயமாக, உழவன் கூனல் நிமிர்ந்து ஏறு நடைபோட, வேலையின்மை வேரறுக்கப் பட, இந்தியா உயர நமது திட்டங்கள் நிறைவேற்றப் பட்டே ஆகவேண்டும்.

அதற்கு இடையூறாக வேலை நிறுத்தங்களை விளைவிப்பது விவேகமாகுமா?

வேலை நிறுத்தங்கள் விவேகமற்றவை என்று நாம் சொல்லும் பொழுது, வேலை நிறுத்தங்களின் விளைவுகளை மனதில் கொண்டு தான் சொல்லுகிறோமே தவிர தொழிலாளர்க் கோரிக்கைகள் தவறானவை என்ற அடிப்படையில் அல்ல.

துறைமுகத் தொழிலாளிக்கோ அல்லது டாடா உழைப்பாளிக்கோ துயரங்கள் எதுவும் இல்லை என்று சொல்

லும் கருத்துக் குருடர்கள் அல்ல நாம்.

அவர்களுக்குப் பல பிரச்னைகளில் நியாயம் வழங்க வேண்டியிருக்கிறது என்று பிரதமர் நேரு முதல் பொதுப்படையாக எல்லோரும் ஒத்துக் கொள்ளும் உண்மைதானே!

ஆனால்—அதற்காக வேலை நிறுத்தம் செய்வது—சட்டியின் வாய் சிறிதாக இருக்கிறது; அதன் வழியே அதிகம் சோறு எடுக்க முடியவில்லை என்பதற்காகச் சட்டியையே உடைப்பதைப் போன்றது.

தேசியப் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் அளவிலே-நமது ஏற்றுமதி பெருகித் திட்டங்களுக்கு அந்நியச் செலாவணி பெற வேண்டிய நிலையிலே, இறக்குமதி தடையின்றி நடந்து திட்டங்களுக்கு சாதனங்கள் பெற வேண்டிய நேரத்திலே, துறைமுகங்களைச் செயலற்றதாக முடக்குவது சரி, என்று எந்த தேச பக்தியுடையவனும் ஒப்புக் கொள்ள மாட்டான்.

இது வரை பொறுத்தவர்கள் இன்னும் ஒரு மாதம் நாட்டிற்காகப் பொறுத்துக் கொள்ளக் கூடாதா? இந்த இடத்திலே தான் துறைமுகத் தொழிலாளர்கள் தவறி விட்டார்கள். அந்தத் தவறுக்கு மூலகாரணம் அவர்கள் தலைவர்கள். தலைவர்கள் தவற்றால் பாமர மக்கள் துன்பப்பட்டார்கள்; துப்பாக்கிக் குண்டுகள் ஆறு உயிர்களைக் குடித்து விட்டன. இச்சாவுகள் பரிதாபத்திற்குரியவை; நமது ஆழ்ந்த அநுதாபங்களை அவ்வுயிர்களைப் பறிகொடுத்த குடும்பத்தாருக்குக்காணிக்கையாக்குகிறோம். துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற அன்று கூட்டத்தினர் காட்டிய பலாத்கார வெறி, ஒரு உயர்தர போலீஸ் அதிகாரியின் உயிருக்கு உலை வைக்கும் அளவிற்கு இருந்து இருக்கிறதென்று அறிகிறோம். இத்தகையவெறியைத் தலைவர்கள் வளர்ப்பது முறையா?

துறைமுக வேலை நிறுத்தம் ஏற்பட்டதால் அரசாங்கத்தார் பங்கும் உண்டு என்பதையும் நாம் உணர்கிறோம்.

தேசிய முக்யத்வம் வாய்ந்த இது போன்ற மாபெரும் பிரச்னைகளிலாவது மத்திய அரசாங்கம் சிவப்பு நாடாவைத்தளர்த்தி விரைவாக நகரக் கூடாதா?

துரிதமாகமத்திய அரசியலார் செயல்பட்டிருந்தால், துறைமுகத் தொழிலாளர்கள் பொறுமை எல்லை மீறுதபடி பார்த்துக் கொண்டிருக்கலாம்; இனியாவது பிரதமர்நேரு வரை விவகாரம் சென்று விட்டபடியால் நிர்வாக நத்தை, முயலாக மாறும் என்று எதிர்பார்க்கலாமா!

* * *

இந்த வேலை நிறுத்த வேதனைக்கு இடையே நாட்டிலே நகைச்சுவை விளைக்கும் நாடகம் ஒன்றும் நடை பெறுவதைக் காண்கிறோம்.

அது தான் கம்யூனிஸ்டுத் தோழர்களின் இரட்டைக்குரல், இருவேட நாடகம்!

ஒரு பக்கத்திலே ஐந்தாண்டுத் திட்டத்தை ஆதரித்து, எப்பாடு பட்டாயினும் அதை நிறைவேற்றியே தீர வேண்டுமென்று முழக்கமிடுகிறார்கள், 'இந்தப்

பூனையும் பால் குடிக்குமா?' என்ற பாணியில்!

மறுபக்கத்தில், எங்கெங்கே எல்லாம் வேலை நிறுத்தங்களைக் கிளப்ப முடியுமோ, அங்கு எல்லாம் ஒழுங்காகத் தலைமை தாங்கி அத்திருப்பணிகளை நடத்துகிறார்கள்!

'பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழன்'— இந்த வர்ணனை தோழர்களை விட வேறு யாருக்கு முற்றிலும் பொருந்தும்!

★

'தேசிய நலன் கருதி வேலை நிறுத்த ஆயுதத்தை உறையிலே போடுங்கள்' என்று தொழிலாளப் பெருமக்களை வேண்டுகிறோம்.

'வருமுன் காப்போர்களாக விளங்குக!' என்று அரசியலாரையும் கேட்டுக் கொள்கிறோம்.

பண்டாரா, பதில் சொல்லுங்கள்!

காட்டைத் திருத்தி நாடாக்கினார்கள்; மலைச் சரிவைப் பயிராக்கிச் செல்வம் கொழிக்கச் செய்தார்கள்; களர் நிலமெல்லாம் கழனி ஆக்கினார்கள்; தோட்டதை எல்லாம் பொன்னாக்கினார்கள். யார்? இன்று அடியும், உதையும் பட்டு நிலை குலைந்து நிற்கும் ஈழத் தமிழர்கள். எந்த நம்பிக்கையோடு? பொன்னாக்கிய நாட்டிலே பூரண உரிமையுடன் அமைதியாக வாழலாமென்று.

ஆனால் இன்று...?

தாய் மொழிப் பற்றுக் கொண்ட ஒரே காரணத்தால், தன்மான உணர்வுகொண்டதவற்றினால்சொல்லொணாத கொடுமைகளைச் சுமந்து நிற்கிறார்கள்.

உலக சமாதனத்திற்கு உறுதுணைவன் என்று பேசும் பண்டாரநாயகாவின் ஆட்சியிலாவது துயர் களையப்படும் என்றிருந்த நம்பிக்கை நசித்து பொன்னாக்கிய நாட்டில் பொலிவிழந்து நிற்கிறார்கள்.

சிறுபான்மையோர் உரிமையைச் சரிவரப்பேணும் பெருமனப்பான்மை பூணாத பெரும் பான்மையோர் நாயகத்தில் நீதிக்கும், நேர்மைக்கும் இடமில்லை என்று தெளிவாகிவிட்டது.

கொடுத்த வாக்குறுதி, நொடித்துவிடச் செய்தார்கள்; 'தமிழுக்கு சம உரிமை' என்ற ஒப்பந்தம் குப்பைக் கூடையிலே உறங்கியது. ஏட்டிலே எழுதியது, நாட்டின் சட்டமாக வில்லை.

பொறுத்துப் பொறுத்துப் பொறுமை இழந்து விட்ட தமிழர்கள் சத்யாக்கிரகம் தொடங்க, சத்தியாக்கிரகத்தின் விளைவாகப் பெரும்பான்மையோர் பலாத்காரம் பிரயோகிக்க, போலீஸும் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது போய் இராணுவம் வந்து அடிப்பவனை விட்டு விட்டு, அடிபட்டவனை அடிக்க நிலைமை வளர்ந்து, 'மோசமாகி விட்டது' என்று உலக அபிப்பிராயம் உதட்டைப் பிதுக்கும் அளவிற்குச் சென்று விட்டது.

செய்தித் தணிக்கை என்ற இரும்புத் திரையின் ஓட்டைகள் வழி கிடைத்த சில செய்திகளே நம்மை மிகவும் வேதனையுறச் செய்கின்றன. தேவனும்பிரிய, பிரியதர்சன அசோகச் சக்கரவர்த்தியின் ஆவி இச் செய்திகளைக் கேட்டுக் கண்ணீர் வடித்திருக்கும்.

'மகன் மஹேந்திரனையும், அருமை மகள் சங்கமித்திரையையும் அனுப்பி அன்பைப் பரப்பினேனே

அந்த நாட்டிலா இந்தக் கோரக் காட்சி' என்று மகா அசோகன் மனம் நொந்திருப்பார்.

புத்த பிரானின் பொன்னடி போற்றி, நன்னெறி வளர்த்து நாட்டிலே சாந்தி பரப்ப வேண்டிய பிட்சுக்கள் பலர் வெறியாட்டங்களில் "இயக்கும் சக்தி"யாக இருந்திருப்பதாகக் கேள்விப் படுகிறோம்.

காவியில் கறை படிந்து விட்டது, தர்மம் மாசுண்டு விட்டது, துறவறத்திற்கு இழுக்குத் தேடி விட்டார்கள், இந்த இலங்கைத் துறவிகள்.

அரசாங்கம் கண்ணியம் மறந்தது, வாக்குறுதிகளைக் காற்றிலே பறக்க விட்டது; துறவிகளே தூய்மையை இழந்தார்கள். பயிரையே மேயும் வேலியானார்கள்.

இலங்கை நிலைமை இவ்வாறு என்றால், இலங்கைத் தமிழர்களின் குறைகளுக்கு அனுதாபம் காட்ட வேண்டிய சென்னை மாநிலத்திலோ ஒன்றுமே நடக்காதது போலக் கண்ணை மூடிக்கொண்டிருக்கும் அரசாங்கம் ஒருபுறம், எரியும் வீட்டில் அகப்பட்டதைச் சுருட்டும் அரசியல் கோமாளிகளின் 'வட இலங்கை சேர்ந்த தமிழ்நாடு' என்ற அல்நாஷர் கனவு மறுபுறம். அரசியல் கடலிலே மூழ்கி விடும் நிலையிலே தத்தளிக்கும் இந்த அரசியல் வாதிகள், இலங்கைத் தமிழர் பிரச்னையைப்புணையாகக் கொண்டு உயிர் பிழைக்க முயற்சிக்கிறார்கள்; அவர்கள் செய்கை 100% சுயநல அடிப்படை கொண்டது என்பதை நியாய புத்தி படைத்த அனைவரும் ஒப்புக் கொள்வர்.

சென்னை மாநிலம் இவ்வாறு என்றால்—மத்திய அரசாங்கமோ உலகப் பிரச்னைகள் கண்ணோட்டத்திலே இருந்தாலும்-ஈழத் தமிழர் பிரச்னையைக் கடைக் கண்ணால்கூட நோக்காத கருணை உள்ளம் படைத்து நிற்கிறது.

இதுதான் இன்றைய ஈழத்தமிழரின் சோகக்கதை.

பழைய நாயகம் கண்ணை மூடிக் கொள்கிறது; இருக்கின்ற, ஏற்றுக் கொண்ட தாயகமோ எட்டி உதைக்கிறது.

பிரச்னைக்கு மருந்து தெளிவானது தான், குழப்ப வேண்டாம் என்று நினைத்தால்.

ஈழத் தமிழர்களுக்கு, நியாய அடிப்படை கொண்ட எந்த மக்கள் ஆட்சியிலும் உள்ளபடி, சிறு பான்மையினரை வாழவிடும் அடிப்படையில் சரிசம உரிமைகள் வேண்டும்.

அவர்கள் ஈழத் தமிழர்கள்; இந்திய நாட்டுத் தமிழர்களல்ல. அவர்கள் மொழிக்கு சம உரிமை வேண்டும்.

சென்னை மாநில அரசியலார் இதை டெல்லியிடம் வற்புறுத்திச் சொன்னால், டெல்லி அதைக் கொழும்புவிடம் கூறினால், இந்த விளைவு ஏற்படுவதும் கடினமல்ல. பிரதமர் நேரு, பண்டார நாயகாவிடம் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி முயன்றால்...? இன்னும் எளிதாகப் பரிகாரம் காணமுடியும்.

இதற்கிடையிலேயே இலங்கை கவர்னர் ஜெனரல் தமிழுக்கு சம உரிமை என்று வாக்குக் கொடுத்திருக்கிறார்.

பண்டார நாயகாவின் வாக்குறுதியைப் போல இதுவும் காற்றிலே பறக்காமலிருந்தால்...? அமைதி பிறக்கும்; நீடித்தும் நிற்கும்.

வாக்குறுதி காப்பாற்றப்படுமா? இதற்கு பண்டாரநாயகா தான் பதில் சொல்ல வேண்டும்!

தூத்துக்குடியே, சிந்திப்பாய்!

மக்கள் ஆட்சியிலே இடைத்தேர்தல்கள் மிக மிக முக்கியமானவை. பொதுத் தேர்தல்களுக்குப் பிறகு ஆளும் கட்சியினர் செய்த செயல்களையும், எதிர்க் கட்சியினர் நடவடிக்கைகளையும் உரைத்துப் பார்த்து மாற்றுச் சொல்லும் உரைகற்கள் அவை!

அண்மையிலே தூத்துக்குடி அத்தகைய ஓர் உரைக் கல்லாக மாறி இருக்கிறது, சென்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற அத்தொகுதி காங்கிரஸ் அங்கத்தினர் திரு பி.பி. எம்.டி. பொன்னுசாமிநாடார் அகாலமாகக் காலமான காரணத்தினால்,

காங்கிரஸ் தலைமை அந்த உபதேர்தலில் சிறந்த ஓர் ஊழியரை, மக்கள் தொண்டரை, காந்தீயவாதியை, தொழிலாளத் தலைவரை, தனது அபேட்சகராக நிறுத்தி, பெருமைக்குரிய செயல் ஒன்று செய்துள்ளது.

காங்கிரஸ் அபேட்சகரான திரு. ஏ. சாமுவேல் ஏழைகளின் பிரதிநிதி; சாதாரணத் தொழிலாளியாக, வாழ்ந்து அறுபது ஆண்டுகள் வாழ்க்கையின் அனுபவ முத்திரை தாங்கிநிற்பவர்; விடுதலைப்போராட்டத்தில் சொல்ல முடியாத துயர்களைச் சுமந்து நின்றவர்; சிறைச்சாலையை அறச்சாலையாகக் கொண்டவர்; இன்னும் அவரது வாழ்க்கைத் துணைவியார், ஓர் ஆலைத் தொழிலாளியாகப் பணிபுரிந்து வருகிறார்.

இத்தகைய மனிதரைத் தனது பிரதிநிதியாக, விடுதலை பெற்ற, வெள்ளையனை விரட்டிய, குடியரசு கண்ட, உரிமை வழங்கிய, அரசியல் சட்டம் ஆக்கிய, அமைதியான வாழ்வு அமைத்த, உலகப் பெருமதிப்பை நமக்குப் பெற்றுத் தந்த, வறுமை போக்க உழைத்து வரும் காங்கிரஸ் கட்சி நிறுத்தி இருக்கிறது.

கட்சி காங்கிரஸ்; அபேட்சகரோ நல்லவர்.

செக்கிழுத்த செம்மல் சிதம்பரத்தின் தூத்துக்குடிப் பெருமக்களே! நீங்கள் சிந்தித்துச் செயலாற்றுவீர்களாக!

நேயர்களுக்கு

வணக்கம். பல மாதங்களுக்குப் பிறகு இப்பொழுது சந்திக்கிறோம்.

இடையில் எவ்வளவோ நிகழ்ச்சிகள்; எத்தனையோ சம்பவங்கள்; தத்தித் தத்தி தளர்நடை, போட்டு ஒரு வயதை இத்தனைக்கும் இடையில் பூர்த்தி செய்கிறது உங்கள் 'புதுமை!'

பிறந்த நாளைப் பெரிதாகக் கொண்டாடுவது நமக்கு இயல்புதானே? அந்த அடிப்படையிலே தான், ஆகஸ்டு இதழை, நமது ஆண்டு மலராகச் சிறப்பாக வெளியிட முடிவு செய்திருக்கிறோம்.

'புதுமை' தனது பெயருக்கு ஏற்ப புதுமையாக இல்லை என்ற சில நேயர்கள் குறையைப் பெருமளவிற்குப் போக்கும் மலராக அது அமைய வேண்டும் என்று முயன்று வருகிறோம்.

அரசியல் தலைவர்களும், அமைச்சர் பெருமக்களும் தங்கள் கருத்துரைகளை வழங்க ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

சிறு கதை மன்னர்கள் 'சோமு', 'எல்லார்வி' போன்றவர்களின் இலட்சியப் படைப்புகள்; கற்பனைக் கடலில் முக்குளித்தெடுத்த கவிதை முத்துக்கள்; சிந்தையைத் தூண்டும் சீரிய கட்டுரைகள். எல்லாமாகச் சேர்ந்து மலரின் தரத்தை உயர்த்தப் போகின்றன.

கலை உலகின் மங்கா விளக்குகள், நமக்குப் பல இனிய செய்திகளைச் சொல்லப் போகிறார்கள்; பேட்டிகளும், கட்டுரைகளும் இடம் பெறுகின்றன.

விறு, விறுப்பான குறு நாவல் ஒன்றும், சித்திரக் கதையும், நமது இளம் கலைஞர்களின் புகைப் படங்களும், 'புதுமை' ஆண்டு மலரை நேயர்கள் நெடுநாள் நினைவில் நிறுத்தும் படியாகச் செய்யும்.

இத்தனைக் கருத்துப் படையல்களையும், மூவண்ண அட்டையும், எழில் முகப்பு ஓவியமும் தாங்கி அதிக பக்கங்களில், 'கம கம' என்ற நறு மணத்தோடு உங்கள் குழந்தை 'புதுமை' ஆகஸ்டு மாதம் முதல் நாள் வெளி வருகிறான்.

கரத்தில் தாங்கி, கருத்தில் சேர்த்து, அன்பு முத்தங்களை நீங்கள் சொரிவீர்கள் என்பதை நாங்கள் சொல்லத் தான் வேண்டுமா?

—ஆசிரியர்.

கடலில் மூழ்கி நன் முத்தெடுப்போம்

"வேல்முருகேசன்"

இயற்கையில் மறைந்திருக்கும் செல்வங்கள் பல. இச்செல்வங்களை அறிந்தெடுத்து ஆகும் வகையில் பயன் படுத்துதல் மாந்தரினத்தின் தொன்று தொட்ட பழக்கமாகும். இச்செல்வங்களுள் ஒன்ருகிய சிப்பி தரும் முத்து, அழகிற்கு அழகு செய்து அணியும் அணிகலனிற்கும் அழகு செய்கிறது. அழகிற்குமெருகு தரும் இவ்வணி மாந்தரினத்தின், குறிப்பாக பெண்பாலாரின், விரும்புதலுக்கும் மதிப்புகந்த பாதுகாத்தலுக்கும் உரிய, ஓர் உயரியப் பொருளாகிறது. "தான் கொன்ற புலியின் நகம் கொண்டு வருபவனே தன் மணுளன்" என்ற வீர மகள் தம் நோக்கம்போல, "ஆழ்கடல் இழிந்து இணைமுத்தம் கொண்டு வந்து இவளை ஏற்கட்டும்," என்று உறுதி பூண்ட நங்கையரை குறுந்தொகை, முத்தொள்ளாயிரம் முதலியநூல்கள் நமக்கு அறிமுகப்படுத்துகின்றன, எப்பொருள் ஈந்தும்-முத்தும் நித்திலமும் நற்பொருளெனக் காத்தோரை சிலப்பதிகாரம் உரைக்கின்றது. புலமை மிக்கார்தக்காரைப் புகழ்ந்து பாடுமிடத்து அன்னவரை முத்தோடு இணையிட்டு கூறியுள்ளனர்.

இவ்வகையான சிறப்புடை முத்து நம் தமிழ் நாட்டில் கொற்கைத்துறையிலே கிடைத்தது. விரியா புன்னை மரப்பூ மொட்டு விழுந்து பரந்து கிடப்பதுபோல, வெண் முத்துக்கள் கொற்கைக் கடலின் ஆழத்திலே பரந்து கிடந்தன. கொற்கையின் தலைவனை பாண்டிய மன்னன் இம்முத்தினுல் சிறப்புப் பெற்ருன். முத்துடைக் கொற்கைப் பாண்டியன் என்னும் சிறப்புப் பெயர் பெற்ருன். முத்துடைப்பாண்டிய நாட்டிலிருந்து வணிகர் பலர் பல நாட்டிற்கும் சென்று, முத்து-தந்து, தமிழும்-கலையும் பரப்பி, நம் தம்புகழை நிலை நாட்டி வந்தனர்-என்று பழந் தமிழ் நூல்களின் வாயிலாக நாம் அறிகிரோம். இக்கொற்கை நமது நாடே. இப்பாண்டியனும் நமது மூதாதையனே யல்லவா? இன்று பாண்டிய நாடு என்று கொடி பறக்க ஆட்சி கொள்ளும் நாடு ஒன்றில்லை. ஆயின் பாண்டியன் ஆட்சிகொண்ட நாடு உண்டு. உரிமை செலுத்திய உடமைகள் உண்டு. அவற்றை இன்று சென்னை அரசாங்கம் உரிமை செலுத்துகிறது; ஆளுகிறது.

கொற்கைத்துறையடுத்து கடலிலே முத்துண்டு; இத்துறையே இன்று தூத்துக்குடி என்று அழைக்கப்படுகிறது. தூத்துக்குடி முன்னைப் போலவே இன்றும் ஒரு வாணிபத்

தலமாக விளங்குவதோடு, முத்தும் சித்திலமும் எடுக்கும் ஒரு துறையாகவும் விளங்குகிறது.

தூத்துக்குடியில் இன்று முத்து மட்டுமல்ல, முத்தை தன்னகத்தே கொண்ட சிப்பியும் விற்கப்படுகிறது. முத்தும்,சிப்பியும் விற்கும் இடத்தை 'முத்துசிலாபத்துறை' என்று அழைக்கின்றனர். இம்முத்து சிலாபத்துறை வெள்ளைக் காமணங்களாலும், மின் விளக்குகளாலும் வனப்புறும்: முத்துக் கடை தெரு ஒரு புறம்; பேரம் பேசி சிப்பி விற்கும் சிறிய சந்தை ஒரு புறம், சிப்பிகள் மொத்தமாக ஏலமிடும் பந்தல் ஒருபுறம்; விந்தையான தோற்றமும், வியக்கத்தக்க அசைவும் கொண்ட கடல்உயிரினங்கள் காட்சிக் கூடம் ஒருபுறம், விசாரணை மன்றம் ஒருபுறம். களவும், பிளவும்—நடக்காத முறையில் காத்து வரும் தாணுக்காரர்கள் தங்கும் விடுதி ஒருபுறம், தபால் தந்தி நிலையம், மருத்துவ விடுதி சுகாதார கவனிப்பு நிலையம் ஆகியவை ஒரு புறம்; சிற்றுண்டி சாலைகள், பான வகைகள் விற்கும் கடைகள், மற்றொரு புறம்; இவ்வாருகக்காட்சி தருகிறது.

மாலை நேரம் மின்விளக்குகளின் ஒளியோடு ஒலிப்பெருக்கி யொன்று தன் இன்னிசையைப் பெருக்கி போட்டி போடுகிறது. இடை இடையே அன்றைய முத்தெடுக்கும் விபரங்கள் கொண்ட பட்டியல் ஒன்றையும் வெளியிடுகிறது. சிலாபத்துறையின் வெளியே விரைந்து வந்து வரிசையில் சேரும் வாகனங்களிலிருந்து வண்ண உடை உடுத்திய வாலிபரோடு வனிதையரும், சிற்ருடை சலசலக்க நடந்து வரும் சிறுவரோடு முதியோரும், மகிழ்ந்து உரையாடி வருகின்றனர். முத்து கண்டு வியக்கின்றனர். கடை மாறி கடை சென்று, காண்கின்றனர். இடைவிடாது முழக்கிக் கொண்டு நில்லாது ஓடிவரும்பொது வாகனங்களிலிருந்து அணிவகுத்து வரும் பாமரரும், பணமுடையோரும் அதுவும், இதுவும் கண்டு மகிழ்ந்து அங்காடிக்கடை அடைகின்றனர், சிப்பிகள் வாங்கி வழிவிட்டு அகன்று நின்று அறுத்துப்பார்க்கின்றனர். இவர்களிடையே கைத்தடியோடு நடமாடும் சிப்பாய்களையும்; சின்னஞ் சிறு குழந்தைகளிடம் அழுகையும், சிரிப்பும் வரவழைக்கும் விளையாட்டுச் சாமான்கள்கொண்ட மூங்கில் கழியேந்தி குறுக்கும் நெடுக்கும் திரிய வரும் 'குடுகுடு' என்ற தாளத்தோடு 'படபட' வென பாடி நிற்கும் குடுகுடுப்பை, கோடங்கி இவர்களையும் காணும் போது இங்கு ஒரு மாபெரும் திருவிழா நடக்கின்றதோ? என்று தான் தோன்றுகிறது.

இம் முத்துச் சிலாபத் துறையை இவ்வாருக விளங்கச் செய்வது சென்னை அரசாங்கத்தின் கீழ் தூத்துக் குடியிலுள்ள மீன் இலாக்கா நிலையமே. இலாகா முத்துச் சிலாபத்துறையில் மட்டுமல்ல. முத்தெடுக்கும் துறையிலும் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது என்பது அங்கு நடக்கும் நடைமுறைகளால் தெரிகிறது. முத்தெடுக்கும் பருவ காலமும், முத்து எடுக்கும் இடமும் அறிந்து பல்வேறு இடங்களிலுள்ள கடல் மூழ்கும் குளியாட்கள் என்பவருக்கு தெரியப்படுத்துகிறது. வேற்றிடங்களிலிருந்து வரும் அவர்கள் தங்க வசதியளிக்கிறது. அதிகாலையில் அதிகாரிகள் சிலர் இவர்களை தட்டி எழுப்பி, உற்சாக மூட்டி அன்று முத்து எடுப்பதற்கான இடமும், வகையும் குறித்த சீட்டுகள் கொடுக்கின்றனர். இவர்கள் பத்தோ, பதினைந்தோ பேர் இவர்களுக்கு உதவி புரியும் தோடைகள் என்பவரோடு கடல் நோக்கிச் செல்கின்றனர். காற்றும், கடலும் நேரில்லாத விடத்தில் நிலையத்தைச் சேர்ந்த மூன்று இயந்திரக்கப்பல்கள் படகுகளை இழுத்துச் செல்கிறது. துறையில் முத்துச் சிப்பிகள் இருக்கும் இடங்களை நங்கூரமிடப்பட்ட மூங்கில் கழியில் பறக்கும் கொடிகள் காட்டுகிறது. இவர்கள் தங்களுக்கு

அன்று தரப்பட்ட சீட்டின் நிறத்திற்கேற்ப பறக்கும் கொடிகளை அடுத்தவுடன், சிற்றாடை உடுத்தி காதில் எண்ணெய் தோய்த்த பஞ்சு

வைத்து வாயில்சுக்கும், மிளகுமிட்டு அரையில் வலைப்பை ஒன்றொடு கடல் மூழ்க ஆயத்தமாகின்றனர். தோடைகள் என்போர் அவருக்கான உதவியைச் செய்கின்றனர். குறிப்பிட்ட நேரத்தில் கப்பலிலிருந்து ஊதொலி கேட்டதும் கயிற்றோடிணைத்தகல்லைப் பற்றி கடலில் மூழ்குகின்றனர். ஆழ்கடலையடைந்து அங்கு பாறையில் பற்றி நிற்கும் சிப்பிகளை துழாவி எடுக்கின்றனர். சிப்பிகளால் அரையிலுள்ள பையைநிரப்பியபின் கையால் அழுத்தி மேல் வருகின்றனர்! இவர்களால் விடப்பட்ட கல்லை தோடைகள் என்போர் இழுத்து எடுத்து வைத்து காத்திருப்பார்; குளியாட்கள் சிப்பிகளை கொடுத்து விட்டு சின்நேரம் நின்று பின்னும் முயல்கின்றனர். தொள்ளாயிரப்பார் முதலிய 60க்கு மேற்பட்ட பார்களைக் கொண்ட இக்கடலில் அறுபது அடி தாழ்வே காண்கிறது. குளியாட்களுக்கு ஏதேனும் இன்னல் நேருமாயின்—கப்பலில் வைத்து முதலுதவி கொடுக்கப்படுகிறது.

கப்பலிலிருந்து இரண்டு மணி நேரங்களுக்குப் பின் மீண்டும் ஊதொலிகேட்கிறது அத்துடன் இவர்கள் தங்களுக்கு அன்று தரப்பட்ட சீட்டின் நிறத்திற்கேற்ப கொடி பறக்க விட்டிருக்கும். கப்பல்களில் தத்தம் படகுகளை இணைக்கின்றனர். வரும் வழியில், கப்பலில் வைத்து இவர்கள் குளித்தெடுத்தசிப்பிகளில் மூன்றில் இரண்டு பாகம் அரசாங்கத்திற்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது; மூன்றில் ஒன்றான அவர்தம் உடமைகளை கோணிகளிட்டு முத்திரையிடுகின்றனர். இவ்வாறு செய்வதினால் இவர்கள் சிப்பிகளைத் திறந்து பார்த்து ஏதேனும் முத்துக்கள் வெளிப் படையாக தென்படுமாயின் எடுத்து விட்டு விற்பது தடைபடுகிறது. இவர்கள் கரையை அடுத்ததும் அங்கு நிற்கும் சில அதிகாரிகள் முத்திரைகளைச் சோதித்து சந்தையில் அனுமதிக்கப் படுகின்ற

னர். அங்கு சிப்பிகளை அவரவர் விருப்பப்படி விற்கின்றனர்.

அரசாங்கத்திற்கான சிப்பிகள் கோட்டை அறைக்குக் கொண்டு வரப்பட்டு ஆயிரக் கணக்கில் தொகுப்புத் தொகுப்பாக ஏலம் விடுகின்றனர். வேற்று நாட்டிலிருந்து வந்திருக்கும் முத்து வியாபாரிகள் இச்சிப்பிகளை ஏலம் எடுக்கின்றனர். ஏலம் எடுத்த வியாபாரிகள், சிப்பியிலிருந்து முத்து எடுப்பதற்கான வசதிகள் செய்ய தனி விடுதிகட்டித் தந்திருக்கிறது அரசாங்கம். அங்குக் கட்டப்பட்டிருக்கும் தொட்டிகளில் சிப்பிகளை அழுக வைத்து அழுகிய நீரை மாற்றி அடியில் படியும் முத்துக்களை எடுக்கப் படுகின்றன. முத்துக்கள் அழுக வைக்கும் போது கெட்ட நாற்றம் எழுவதால், இவை போக்குவரத்துப் பாதைக்கு தொலைவிலேயே கட்டப் பட்டுள்ளன.

நிலையம் இத்தகைய ஒரு தொழில் துறையை ஆக்க இவை துடங்கு முன்னேயே வேண்டியது செய்கிறது. பருவகால ஆரம்பத்தில், அறுபதற்கு மேற்பட்ட பாறைகளில் இருந்து சிப்பிகள் எடுத்து வந்து சோதனை செய்கின்றது. முதிர்ச்சி அடைந்த சிற்பிகள் காணும் இடங்களை தற்போதைய துறையாகக் கொள்கிறது. முத்துச் சிப்பிகள் எடுக்கும் போதும், முதிர்ச்சியடையாத சிப்பிகள் கிடைக்குமாயின், அவற்றை தெரிந்தெடுத்து குறிப்பிட்ட கடல் நீர் நிலைகளில் இட ஒருவரை நியமித்திருக்கிறது.

இம் முத்துச்சிப்பி குறிப்பிட்ட வெப்பமும், வேதிப் பொருள்களின் கலப்பும் உடைய கடல் நீரில் காண்கின்றது. வரைந்த நீள் கோட்டின் நிற்கும் முக்கால் வட்ட வடிவ முடைய ஈரடைப்பான்களைக் கொண்ட இச்சிப்பி இதன் அடியில் காணும், பச்சை நிறமுடைய மயிரிழைகளால் பாறையைப் பற்றி நிருக்கும், போக்கிற்கும் விடாது நிற்கிறது. அடைப்பான்களை திறந்து நிற்கும் சிப்பியின் விசிறி மடிப்பு போன்ற உருப்புகளில் குறிப்பாக சில விடத்தும், பொதுவாக பல விடத்தும் ஏதேனும் வேற்றுப் பொருள், செல்லுமாயின் அவ்விடத்தில் ஓர் நீர் சுரப்பதால் அந்நீரே அப்பொருளைச் சுற்றி நின்று உறைந்து முத்தாகின்றது எனவும் தெரிவித்திருக்கின்றனர். இவ்வகையில் சிப்பியின் தரமறிந்து அதில் வேற்றுப் பொருள் வைத்து செயற்கை முத்து செய்விக்கும் துறையில் குருசடை தீவில் உள்ள உயிரியல் ஆராய்ச்சி நிலையம் முனைந்திருக்கிறது; ஆராய்ச்சியாளர்கள் சிப்பி காணுமிடங்களிலுள்ள கடல் நீரின் வேதிப் பொருட் கலப்பையும் அறிந்து வருகின்றனர். இச்சிப்பியைப் பற்றி ஆராய்ச்சி செய்த ஒருவர், முத்து தரும் வடிவமுடைய மற்றுமொரு சிப்பி தஞ்சை மாவட்டத்திலுள்ள அதிராம்பட்டணத்தை அடுத்துள்ள கடலில் உள்ளது எனவும் அதில் முத்து இருப்பதில்லை எனவும் தெளிவு தருகிறார்.

ஆராய்ச்சித் துறையில் முத்துகளை தரம் பிரிக்க, கண்ணாடி வில்லைகளும் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. முத்துக்கள் அதனதன் கன பரிமாணத்திற்கும், வடிவத்திற்கும் நிறத்திற்கும் ஏற்ப மதிப்பு பெறுகின்றன,

சற்றேறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் 1955ல் ஆரம்பமான முத்து சிலாபம் நான்கு வருட காலமாக தொடர்ந்து வருகிறது. மேலும் தொடர்ந்து நடக்கும் என்று நாம் நம்பலாம்.

சந்தா விகிதம்

தனிப்பிரதி 25 ந.பை.

6 மாதச் சந்தா ரூ. 1-50

வருடச் சந்தா ரூ. 3-00

சும்மா — சும்மா!

“புதுமைச் சித்தன்”

‘சும்மா’—இந்த பதத்தை நாம் நமது அன்றாட வாழ்க்கையில் அர்த்தமில்லாதது போல், சும்மா சும்மா (அடிக்கடி) பிரயோகித்தாலும், அது சமயசஞ்சிவியாய் உதவுகிறது. பிறவிக் கவிஞனின் செந்நாவிலுறையும் கலைமகளைப் போன்று நமது நாவில் உறைகிறது; பண்டிதர் முதல் பாமரர் வரை, சிறுவர் முதல் பெரியோர் வரை யாவரும் உபயோகிக்கத் தவறாத ஜீவனுள்ள ஜனரஞ்சகமான சொல், இந்தசும்மா! இதற்கு அகராதியில் என்ன பொருளிருந்தாலும், ‘சும்மா’ என்றால் ‘வெறுமனே’ என்றும், ‘சும்மா, சும்மா’, என்றால் ‘அடிக்கடி’ என்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப வளைந்து கொடுத்து இயங்குகிறது, இவ்வற்புதச் சொல்!

அடுத்த வீட்டு அண்ணாசாமி, “சார்” என்றபடி நமது வீட்டைத் தேடி வருவார்; “என்ன சார்? எங்கு வந்தீர்கள்?” என்று நாம் கேட்க, “சும்மா வந்தேன் சார்” என்றவனாய் திண்ணையில் அமர்வார். ‘சும்மா வந்தேன்’ என்றாரே அவர். உண்மையில், சும்மாவா—ஒரு நோக்கமும் இல்லாமலா வந்திருப்பார்? அன்றைய தினசரி செய்தித்தாளை, அதன் முதற்பக்கப் பெயரிலிருந்து ஆசிரியரும் அச்சிடுபவரும் என்பதுவரை, ஒரெழுத்தையும் விடாது படிக்க வந்திருப்பார்! ‘சும்மா’ என்றது ஏனென்று அவருக்கும் புரிவதில்லை; நமக்கும் புரிவதில்லை!

நமக்கு அவசரமாக ‘பத்தோ இருபதோ’ தேவை என்றால், நண்பரிடம் கைமாற்றாக கடன் கேட்க எண்ணி, அவர் முன் பிரசன்னமாவோம். “என்ன விசேஷம் சார்?” என்று நண்பர் கேட்க, “ஒன்றுமில்லை சும்மா வந்தேன், சார்” என்று, பல விஷயங்களைப் பற்றி அவருடைய ‘தொண தொணப்பை’ சகித்துக் கொண்டிருந்து விட்டு, “ஹி...ஹி...” என்று பல்லையிளித்தபடி (கடன் கேட்கும் பொழுது நாம் மேற்கொள்ளும் சேஷ்டை, பல்லிளிப்பு அல்லது தலையைச் சொறிதல்தானே!) “அவசரமாய் ஒரு பத்து ரூபாய் வேண்டும், சார்” என்போம். எடுத்த எடுப்பிலேயே பத்துரூபாய் தேவைப்படும் நமது நோக்கத்தை வெளியிட்டிருந்தால் நண்பர் மூர்ச்சித்து விடுவார்; மூர்ச்சை தெளிந்தெழுந்து, அவர்கூறும் பதில்நம்மை மூர்ச்சையடையச் செய்துவிடும்! இவைகளிலிருந்து நம்மைக் காத்து ரக்ஷிக்கும் சர்வசங்கட நிவாரணி, இந்த சும்மா!

மாலையில், காற்றாடவோ, பொழுது போக்கிற்காகவோ பூங்காவில் உலவிக் கொண்டிருக்கும் நம்மை நோக்கி எவராவது, “ஏது, சார் இவ்வளவு தூரம்?” என்ற வினாவை வீசினால் தயங்காமல் நாம் கூறும் பதில், “சும்மா இப்படி வந்தேன், சார்!” என்பதே! காற்றாடவோ, பொழுது போக்கிற்காகவோ, பூங்காவிற்கு வந்ததைக் கூறாமல், ‘சும்மா வந்தேன்,’ என்று ஏன் கூறினோமென்று நினைப்பது கூட இல்லை. அத்தனை சக்தியுடன் “சும்மா” நம்மை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது!

உண்மையில் சும்மா இருப்பதென்பது முடியாத காரியமே! நாம் சும்மா இருந்தாலும்—அதாவது திரேகம்செயலற்றுசலனமற்றிருந்தாலும், மனம் சும்மா இருப்பதில்லை! ஆசைச் சக்தியில் விழுந்து புரண்டு கொண்டிருக்கும்; ஏதாவது நினைவைப் பற்றி தொற்றிக் கொண்டிருக்கும்; அல்லது கடிவாளம்

இழந்த குதிரையாய் எங்காவது தொலைதூர சஞ்சாரம் செய்துக் கொண்டிருக்கும்!

'சும்மா இருப்பது' என்பதின் பரம விரோதிகள் சிறுவர்களென்பது முழு உண்மை! "டேய்...... **சும்மா** இருக்கிறயா? இல்லை, முதுகுத் தோலை உரிக்கட்டுமா?" என்று, நாம் அடிக்கடி சிம்மக் குரலில் முழங்க வேண்டியிருப்பதிலேயே, சும்மா இருக்க முடியாத சிறுவர்களின் நிலை புலனாகிறது. நமது வீட்டிற்கு வரும் விருந்தினர்களிடமாவது, நண்பர்களிடமாவது நமது பையனைப் பற்றிய விமர்சனமும் வர்ணனையும் நிகழ்த்தும்போது, "ஒரு நிமிஷம் சும்மா இருக்கமாட்டான்; துருதுருவென்று ஏதாவது விஷமம் செய்து கொண்டேதான் இருப்பான், சார்," என்று கூறத் தயங்குவதில்லை. சிறுவனைப் பற்றிய நமது விமர்சனத்தையும் வர்ணனையும் கேட்ட நண்பர் புன்னகை செய்வார்; அதாவது, அசட்டுச் சிரிப்பை உதிர்ப்பார். ஏன் தெரியுமா?...நமது வீட்டுப் பையன் ஒற்றை வாலாயிருந்தால், நண்பரின் பையன் இரட்டை வாலாயிருப்பான்!

முதுமையின் பூரண அனுக்கிரகத்திற்கு ஆளான பாட்டிகூட, 'ராமா-கோவிந்தா' என்று **சும்மா** இருப்பதில்லை; "வேண்டாம், வேண்டாம்" என்னும் போதே வீட்டு வேலைகள் ஏதேனும் செய்வாள்; அப்பளாம் போடுவாள்; பேரன் பேத்திகளை இழுத்து வைத்துக்கொண்டு கதை சொல்லுவாள்; வயதான காலத்தில் ஏன் பாட்டி சிரமப்படுகிறாய்? **சும்மா** இரேன்", என்றால் கேட்கமாட்டாள். பொக்கை வாய்ப் புன்னகை மலர்ச்சியுடன், "சும்மா இருந்து எனக்குப் பழக்கமில்லையடா!" என்பாள். சும்மா இருப்பதென்பது சாதாரண விஷயமா என்ன?

அடுத்த வீட்டு அலர்மேலு, பக்கத்துவீட்டு பங்கஜத்தின் காதுகளில் ஒரு விஷயத்தைப் போடுவாள்; பக்கத்து வீட்டுப் பங்கஜம் அதை கோடிவீட்டுக் கோமுவின் காதில் 'ரகஸ்யம்' என்ற முத்திரையுடன் போடுவாள்; கோடி வீட்டுக் கோமு சிரமத்தையும் பொருட்படுத்தாது நடந்து சென்று அந்த ரகஸ்யத்தை நான்காவது வீட்டு நாராயணியின் காதில் ஓதுவாள். இப்படியே அந்த ரகஸ்யம் தெரு முழுதறிந்த பகிரங்க ரகஸ்யமாய் பெட்ரோல் ஊற்றிய பெருந் தீயாக எரியும்; முட்டி மோதி முடிவில் அது ஒரு தெருச் சண்டையாக மாறும்! ஏன் இந்த வம்பும்தும்பும், சண்டைச் சச்சரவும்? இந்த ஸ்திரீ ரத்னங்கள் **சும்மா** இருந்தால் என்னவாம்? ஊர்க்கதை பேசாமல், பிறரைப் பற்றி வம்பளக்காமல் சும்மா இருப்பதென்பதுதான் பெண்களால் இயலாத காரியமாயிற்றே! சும்மா இருப்பதென்பது தான் எவ்வளவு கடினம் மகா கடினம்!

சும்மா இருக்க முடியாமல்தானே, 'அம்' என்னும் முன்னே ஐநூறும் அறுநூறும், 'இம்' என்னும் முன்னே எழுநூறுமாகப் பொழிந்து தள்ளினன், காளமேகம். "**சும்மா** இருந்தேனயின் இருந்தேன்; எழுந்தால் பெருங்காளமேகம் பிள்ளாய்!," என்று கர்ஜித்த அவன், 'சும்மா இருந்தேனயின் இருந்தே" என்றுனே தவிர, உண்மையில் அவன் சும்மாவே இருந்ததில்லை! தமிழ் முழக்கமும் கவிதைக் கர்ஜனையும் புரிந்து கொண்டுதான் இருந்தான்!

'சிந்தையை அடக்கி **சும்மா** இருத்தல் அரிது, அரிது காண்' பக்திப் புலவனின் புலம்பலில், 'சும்மா' இருக்க முடியாத நிலை தெளிவாகத் தெரிவதுடன் "சும்மா' இருப்பதென்பது மகா கடினமான தொரு சாதனை என்பதுவும் புலனாகிறது!

"**சும்மா** இருக்க முடியாமல் தானே, நீர் **சும்மா**வைப் பற்றி கட்டுரை வரையலானீர்?" என்று நீங்கள் கேட்பது என் காதில் விழவில்லையா, என்ன!

★

வீட்டிற்கும் தோட்டத்திற்கும்
வேண்டியமட்டும்
தண்ணீர் எடுக்க
ஒரு

டெமிங் "மார்வெல்"
வாட்டர் ஸிஸ்டம்

அமைத்துவிடுங்கள்.





இந்த பம்பு செட்டுகளைத் தற்போது உங்கள் வீட்டிலுள்ள கிணற்றிலும் அல்லது குழாய்க் கிணற்றிலும் சுலபமாய் அமைக்கலாம். நீளமான குழாய் மாட்டுவது, உயரத்தில் டாங்கிகள் கட்டுவது முதலியவை தேவையில்லை. அவை முழுவதும் தானாகவே ஆட்டோமாட்டிக் வேலை செய்வதுடன் வருஷக் கணக்கில் திருப்திகரமாக சேவை புரியும்.



குழாயைத் திறந்தால் தண்ணீர் கிடைக்கும்

டெமிங் "மார்வெல்"
வாட்டர் ஸிஸ்டம்

விசாரிக்குமிடம்:

ஈசன் இன்ஜினீயரிங் கம்பெனி லிட்.,
5-7, செகண்ட் லைன் பீச், மதருஸ்-1.

போன் : 203 தந்தி : "TRANSPORT"

சண்முகம் டிரான்ஸ்போர்ட்

பஸ் & லாரி சர்வீஸ்

அருப்புக்கோட்டை.



எங்களுடைய லாரிகள் கீழ்க்கண்ட ஊர்களுக்குத் தினசரி போய் வந்து கொண்டிருக்கின்றன.

1. அருப்புக்கோட்டை To ராஜபாளையம்
2. அருப்புக்கோட்டை To தூத்துக்குடி
3. விருதுநகர் To பெருநாழி
4. விருதுநகர் To கடலாடி (Via) முதுகுளத்தூர்
5. மதுரை To சாயல்குடி
6. மதுரை To அருப்புக்கோட்டை

பொது ஜனங்களும், வியாபாரிகளும் எங்களை ஆதரிக்குப்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

பிராஞ்சு: மதுரை

போன் : 512 தந்தி : "TRANSPORT"

தெளிவு

-திருச்சி வாசுதேவன்-

அவள் காதலித்தாள்; அவன் கலங்கினான்; கடைசியில் அந்தப் புகைப்படம் கருத்துக்களைத் தெளிவாக்கிற்று. எப்படி ?

தபால்காரரின் வருகையை வெகு ஆவலுடன் எதிர் நோக்கி இருந்தான் ரகுநாதன். பதினொரு மணிக்குக் கடிதம் ஒன்று வந்தது. உறையைக் கிழித்துப் பார்த்தான்.

அடைய வளைஞ்சான் வீதி,
ஸ்ரீரங்கம்.
..............58

அன்பார்ந்த ரகுநாதன் அவர்களுக்கு,

வணக்கம். என்னை முன்பின் அறியாதிருந்தும் தாங்கள் அன்று உதவி செய்ததை எண்ணுகையில் இன்னும் எனக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. இதனால் தாங்கள் என் வாழ்க்கையில் மறக்க முடியாதவராகி விட்டீர்கள். பரிசோதகரிடம் செலுத்திய தொகைக்காக இன்று மணியார்டர் செய்திருக்கிறேன். பெற்றுக் கொள்ளுங்கள்.

தங்களின் உதார குணத்தை என் தந்தை மிகவும் பாராட்டினார். தாங்கள் ஸ்ரீரங்கம் வர நேர்ந்தால், தவறாமல் இங்கு வந்து செல்லும்படி அன்போடு வேண்டிக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
நன்றி மறவாத,
நளினி.

வேலைக்கு உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ரகுநாதனுக்கு, இந்தக் கடிதம் அவ்வளவு உற்சாகம் அளிக்கவில்லை. ஆயினும் நளினியின் அழகு முகமும் அவன மனக் கண் முன்பு தோன்றியது. கூடவே அந்தச் சம்பவமும் நினைவுக்கு வந்தது

x x x

சில நாட்களுக்கு முன்பு ரகுநாதன் வேலை சம்பந்தமாய் ஸ்ரீரங்கத்திற்குச் சென்று விட்டு ரெயிலில் திரும்பிக் கொண்டிருந்தான். அவன் ஏறி இருந்த பெட்டியில் அவனைத் தவிர, கிழத் தம்பதிகளும், யுவதி ஒருத்தியுமே இருந்தனர்.

அப்பொழுது பெட்டியினுள் பிரவேசித்த டிக்கட் பரிசோதகர், கிழத்தம்பதிகளிடமும் ரகுநாதனிடமும் டிக்கெட்டுகளை வாங்கி, பரிசோதித்து விட்டு அந்த யுவதியை அணுகினார். அவள் தனது 'ஹேண்ட் பேக்'கைத் திறந்து பார்த்து விட்டுத் திடுக்கிட்டாள். முகத்தில் ஒரே ஏமாற்றம் படிந்தது.

பரிசோதகர் அவளை ஒரு கணம் ஏற இறங்கப் பார்த்தார். அவள் அணிந்திருந்த ஆடை அணிகளைக் கொண்டு அவளிடம் கட்டணத்தை வசூலித்து விடலாம் என்று அவர் எண்ணியிருக்க வேண்டும்! அந்த வண்டி விழுப்புரத்திலிருந்து புறப்பட்டதாகையால், அங்கிருந்து அவள் இறங்கவேண்டிய டவுண் ஸ்டேஷன் வரை கூடுதல் கட்டணம் விதித்து ரசீது எழுதிக் கொடுத்தார்.

யுவதி அதைப் பார்த்து விட்டு, தான் ஸ்ரீரங்கத்திலிருந்தே வருவ

தாகத் தெரிவித்தாள். ஆனால் பரிசோதகர் சட்டத்தை விளக்கிய பின்னர், ஒன்றும் கூறாமல் மீண்டும் பையைத் திறந்து பார்த்தாள் தையல். உடனே தனது கீழுதட்டைக் கடித்துக் கொண்டு சில கணங்கள் சிந்தித்தாள். பிறகு பரிசோதகரை நோக்கி, "மன்னிக்கவும். மணிப் பர்ஸையும் எடுக்காமல் வந்து விட்டேன். அதில்தான் பாஸும் இருப்பதாக நினைவு" என்றாள். அவளுடைய குரலில் ஒருவித அச்சம் தொனித்தது. அது அவளுடைய நெஞ்சின் படபடப்போ என்னவோ!

பரிசோதகரின் உதடுகள் விஷயத்தைப் புரிந்து கொண்டதுபோல் முறுவலிக்க முயன்றன. இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த ரகுநாதனுக்குத் தன்னையறியாமலே அந்த யுவதி மீது பரிவு ஏற்பட்டது. தனது பர்ஸை எடுத்துத் திறந்து கொண்டே, "ரசீதை இங்கே கொடுங்கள்" என்றான் பரிசோதகரிடம்.

அவனை ஏறிட்டு நோக்கிய யுவதி, "வேண்டாம்!" என்றாள் மெல்லிய குரலில். ஆனால் ரகுநாதன் வற்புறுத்தவே, பரிசோதகர் ரசீதை அவனிடம் கொடுத்து விட்டுப் பணத்தைப் பெற்றுக் கொண்டார்.

அப்பொழுது காவேரிப் பாலத்தில் ஏதோ 'ரிப்பேர்' நடந்து கொண்டிருந்ததால், ரெயில் மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது. ஜன்னல் வழியே தலையை நீட்டிக் கொண்டு, கீழே நீர் ஓடிக் கொண்டிருந்த அழகை ரசித்துக் கொண்டிருந்த ரகுநாதன், சட்டென நிமிர்ந்து எதிரே யிருந்த அந்த யுவதியை நோக்கினான். அதுவரையிலும் அவள் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள் போலும். அவன் அவளை நோக்கியதும், வெட்கத்துடன் தலை குனிந்தாள். பிறகு அவளுக்கு எப்படித் தெம்பு தோன்றியதோ தெரியவில்லை. "ரொம்பவும் நன்றி" என்றாள் ரகுநாதனிடம்.

ரகுநாதன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். ஆனால் வார்த்தைகள் குரலிலிருந்து வெளிவரத் தயங்கின. பிறகு "மனிதர்களுக்குள் சாதாரணமாய் இந்த சிறிய உதவி கூடச் செய்து கொள்ளா விட்டால்......" என்று வாக்கியத்தை முடிக்காமலேயே நிறுத்தினான்.

"பண விஷயத்தையா சிறிய உதவி என்கிறீர்கள்?" — அவள் மீட்டிய இந்தக் கேள்வி வீணையில், ஆச்சரிய இசை எழுந்தது. பதிலுக்கு ரகுநாதன் புன்முறுவல் செய்தான்.

வண்டி டவுண் ஸ்டேஷனில் நின்றது.

ரகுநாதனும், யுவதியும் இறங்கிப் பரஸ்பரம் விடைபெற்றுக் கொள்ளுகையில், அவனுடைய விலாசத்தைப் பெற்றுக் கொண்டாள் அவள். அப்பொழுது அவளுடைய கண்களில் வீசிய ஒளியின் பொருள் இன்னும் அவனுக்கு விளங்கவில்லை.

சிந்தனையிலிருந்து விடுபட்ட ரகுநாதன் அன்றே ஸ்ரீரங்கத்திற்குச் சென்று வரத் தீர்மானித்தான். நளினியின் தந்தை ஸ்ரீரங்கவாசியாய் இருப்பதால், தான் செய்து வரும் முயற்சிக்கு அவருடைய ஒத்தாசையும் கிடைக்கலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு.

2

தங்கள் வீட்டுக்கு வந்த ரகுநாதனைக் கண்ட நளினி புன்னகை தவழ "வாருங்கள்" என்று கை கூப்பி வரவேற்றாள்.

ரகுநாதனும் புன்முறுவலோடு கை கூப்பினான். "வந்து உட்காருங்கள்!" என்று அவள் கூறியதும் முன் ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்தான். அவன் முகத்திலிருந்த வேர்வைத் துளிகளைக் கண்ட நளினி, மின் விசிறியின் விசையைத் திருப்பி விட்டு அங்கி

ருந்த மற்றொரு சோபாவில் அமர்ந்தான். "இன்று தங்கள் கடிதமும், பணமும் கிடைத்தன; வந்தனம்!" என்று கூறிக் கொண்டே, கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டான் ரகுநாதன்.

நளினி அவனை ஓரக் கண்ணால் நோக்கியவண்ணம் "அன்று தாங்கள் உதவியதைவிட, இன்று நாம் சந்தித்திருப்பது மிகவும் அதிசயந்தான்!" என்றாள்.

அவளுடைய பேச்சு ஏதோ புதிர் போடுவது போலிருந்தது ரகுநாதனுக்கு. சில விநாடிகள் பேசாதிருந்த ரகுநாதன், தனது நெற்றியில் விழுந்த கேசத்தைத் தள்ளி விட்டுக் கொண்டே "உங்கள் தந்தையார்......" என்று தொடர்ந்த வாக்கியத்தை, "மில்லுக்குப் போயிருக்கிறார்கள்; வருகிற நேரம் தான்......" என்று முறுவலித்தாள் நளினி.

ரகுநாதன் மணிக்கட்டைத் திருப்பிக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி நாலு ஆகியிருந்தது. அவன் மனம் வேலை சம்பந்தமாகச் சுழன்று கொண்டிருந்ததால், "இப்பொழுது ஒருவரைச் சந்திக்க வேண்டும். வரும்பொழுது உங்கள் தந்தையைச் சந்திக்கிறேன்......" என்று கூறி விட்டு எழத் தொடங்கினான்.

"புறப்படப் போகிறீர்களா? சரிதான்...அவர் வருகிற வரை நீங்கள் இருந்துதான் ஆகவேண்டும்!" இவ்விதம் நளினி கரிசனமும், கண்டிப்புமாய்ச் சொன்ன வார்த்தைகள் பல வருஷங்கள் பழகியவர்களிடம் பேசுவதைப் போலிருந்தன.

இதுவும் ரகுநாதனுக்குப் புதிராய்த் தோன்றியது.

அப்பொழுது வீட்டு வாசலில் கார் ஒன்று வந்து நின்றது. திரும்பிப் பார்த்த ரகுநாதன், காரிலிருந்து இறங்கியவரைக் கண்டு, எழுந்து வணக்கம் தெரிவித்தான்.

வந்தவர் அவனுக்குப் பக்கத்திலிருந்த சோபாவில் அமர்ந்தார். அவனுக்கு மிகவும் ஆச்சரியமாய் இருந்தது. 'அம்புஜா ஆயில் மில்' முதலாளி அங்கு எதற்காக வந்தார்? என்று யோசித்துக் கொண்டிருக்கையில், "நான் சொன்னேனே இவர்தான் அப்பா......" என்றாள் நளினி.

"எப்பொழுது வந்தீர்கள்?" என்று கேட்டு விட்டு அவனிடமிருந்து பதிலைக்கூட எதிர்பாராமல், "தக்க சமயத்தில் நளினிக்கு உதவி செய்து கௌரவத்தைக் காப்பாற்றினீர்கள்" என்றார் நளினியின் தந்தை.

"இப்பொழுதுதான் வந்தேன். நேற்று முதல் தங்கள் கடிதத்தை எதிர்பார்த்தேன்; கிடைக்கவில்லையாதலால் பார்த்துப் போக வந்தேன்" என்றான் ரகுநாதன்.

நளினியின் விழிகளில் வியப்பு நீந்தியது. தந்தையை நோக்கி "இவரை முன்பே தெரியுமா, அப்பா?" என்று கேட்டாள்.

"மானேஜர் வேலைக்காக இவர் விண்ணப்பம் செய்திருந்தார். பேட்டிக்கு வந்தபொழுது இரண்டு நாளில் கடிதம் எழுதுவதாய்ச் சொன்னேன். அன்று மாலையே நெருங்கிய நண்பர் ஒருவர், வேறொருவரை அழைத்து வந்து சிபாரிசு செய்தார். அதைத் தட்ட முடியாதிருக்கிறது. இன்னும் முடிவு ஒன்றும் செய்யவில்லை" என்று விளக்கினார் அவர்.

ரகுநாதன் மௌனமாக இருந்தான். அவன் முகத்தில் களை மாறியிருந்தது. நளினி தன் தந்தை அறியாதபடி அவனை நோக்கினாள். அந்தப் பார்வை, தனக்குத் தேறுதல் கூறுவது போலிருந்ததால், முகத்தில் மலர்ச்சியை வருவித்துக் கொண்டான் அவன்.

ஒரு கணம் அங்கே அமைதி நிலவிற்று.

நளினியின் தந்தை, "மிஸ்டர் ரகுநாதன். இப்பொழுது அவசரமாகச் செல்லவேண்டும். ஒருமணி நேரத்தில் திரும்பி விடுவேன். பிறகு பேசுவோம்!" என்று கூறி விட்டுப் புறப்பட்டார்.

ரகுநாதன் பேசாதிருந்ததைக் கண்ட நளினி, "என்ன பலமாக யோசிக்கிறீர்கள்?" என்றாள்.

சிரித்தபடியே "ஒன்றுமில்லை" என்றான் அவன்.

"நீங்கள் கவலைப் படாதீர்கள். அப்பா என்பேச்சைத் தட்டவே மாட்டார்!" —நளினியின் இந்தச் சொற்கள் நிலாக் கதிர்கள் போல ரகுநாதனின் நெஞ்சுக்கு இன்பம் அளித்தன. சிறிது நேர நட்பிலேயே தன் மீது அவளுக்கு ஏற்பட்டிருக்கும் பரிவைக் கண்டு உள்ளூற வியந்தான் அவன். அப்பொழுது சமையல்காரன் கொண்டுவந்த சிற்றுண்டியைத் தானே பரிமாறினாள் ரகுநாதனுக்கு நளினி.

3

ஐந்தாறு நாட்களுக்குப் பின் ரகுநாதனுக்கு வேலை

உத்தரவு கிடைத்தது. நளினியின் தந்தை பேசிய தோரணையில், அவர் தம் நண்பரின் சிபாரிசைத் தட்ட முடியாத நிலையிலிருப்பதை அவன் தெரிந்து கொண்டு, தனக்கு வேலை கிடைக்காது என்றே முடிவு கட்டியிருந்தான். அதற்கு மாறாக உத்தரவு கிடைக்கவே, அவன் அடைந்த மகிழ்ச்சியைவிட ஆச்சரியமே அதிகம். தனக்கு வேலை கிடைத்ததற்குக் காரணம் நளினியின் பிடிவாதந் தான் என்பது, வேலையை ஒப்புக் கொண்ட பிறகே அவனுக்குத் தெரிய வந்தது.

4

ஒரு வாரம் ஓடிவிட்டது. அன்று சனிக்கிழமையாகையால், மாலை ஐந்து மணிக்கு மேலாகியும் ரகுநாதனின் பொறுப்புத் தீராதிருந்தது. அப்பொழுது டெலிபோன் மணி அடிக்கவே ரிஸீவரை எடுத்து "அம்புஜா ஆயில் மில்" என்றான்.

"யார், மானேஜர் ரகுநாதன் தானே ?..."

"ஆமாம் ......"

"நளினி பேசுகிறேன்......"

"என்ன விஷயம் ; அப்பா என்னை வரச் சொன்னாரா ?"

"கோட்டைக்குப் போயிருக்கிறார்...வர எட்டுமணி ஆகலாம்... உங்கள் ...வே...லை..."

"இன்னும் முடியவில்லை ; ஆறு மணிவரை இருக்கும்..."

"நாலைந்து நாட்களாக நீங்கள் வீட்டுப் பக்கமே வரவில்லையே..."

"அதிகமான வே...லை..."

"அதனால் மறந்து விட்டீர்களாக்கும்..."

"................"

"ஹல்லோ ! ஏன் பேசாதிருக்கிறீர்கள ?"

"எப்படி மறக்கமுடியும்? உங்கள் உதவி இல்லையென்றால்..."



"போனில் பேசும் பொழுது கூடவா இந்த முகஸ்துதிப் பல்லவி ?"

" மன்னியுங்கள். வேலை நிறையக் கிடக்கிறது. பிறகு பேசுவோம் ! "

" சரியாக ஆறு பத்துக்கு உங்களை எதிர் பார்த்துக் கொண்டிருப்பேன்... " —இப்படிப் பேசியதும் நளினி டக் கென்று ரிஸீவரை வைத்து விட்டதால் கேட்ட ஒலி ரகுநாதனின் உள்ளத்தை என்னவோ செய்தது.

அவனுக்கு மேலே வேலை ஒன்றும் ஓடவில்லை. நளினி தன்னிடம் அளவுக்கு மீறிய உரிமையும், அன்பும் கொண்டு பேசியது போல் அவனுக்குத் தோன்றியது. " முதலாளியின் வயது வந்த மகள் தன்னிடம் இம்மாதிரி போனில் பேசுவது யாருக்காவது தெரிந்தால் ? " — இவ்விதம் அவன் நினைவுச் சங்கிலி நீண்டு செல்கையில் ' டாண் ' என்ற ஒலி கேட்டது. சுவர்க் கடிகாரத்தை நோக்கினான். மணி ஐந்தரை. பர பர வென வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினான்.

5

ரகுநாதனின் வருகைக்காகக் காத்திருந்த நளினி மிகுந்த சோபையுடன் தென்பட்டாள். பொலிவு மிளிரும் அவளுடைய பொன்னிற மேனிக்கு மெருகிட்டுக் கொண்டிருந்தன, அணிந்திருந்த ஆடை, அணிகள். சூடியிருந்த மல்லிகையின் மணம் அந்த ஹால் முழுவதும் நிரம்பி வழிந்தது. ஆனால் அவளுடைய நெஞ்சிலே துயரம் பெருக்கெடுத்தது !

நேரம் செல்லச் செல்ல, ரகுநாதன் இன்றும் தன்னைச் சந்திக்காதிருந்து விடுவானோ என்ற ஏக்கம் அவளை வாட்டி வந்தது. அன்று ரெயிலில் சந்தித்தது முதல் ரகுநாதனின் அழகும், அகமும் அவளை வசீகரித்து விட்டன. அவன் வேலைக்கு வந்ததிலிருந்து ஏதேதோ சாக்குகள் வைத்துக் கொண்டு எத்தனையோ முறை அவனை வீட்டிற்கு வரச் செய்து அவனுடன் அளவளாவியிருக்கிறாள். அந்தச் சமயங்களிலெல்லாம் ரகுநாதனின் புலனடக்கம், பெருந்தன்மை முதலியவற்றைக் கண்டு அவள் மிகவும் ஆச்சரியமுற்றாள் என்பதை விட, அவனிடம் முழுதும் மனதைப் பறி கொடுத்து விட்டாள் என்பதே உண்மை.

அவள் எதிர்பார்த்ததற்குச் சற்றுத் தாமதித்தே ரகுநாதன் வந்தான். அவனை வரவேற்றுச் சோபாவில் அமரச் செய்ததும், அவன் கையிலிருந்த பையில் ஏதேதோ சாமான்கள் இருப்பதைக் கண்டு, " பிரயாணம் வெகு தூரமோ ! " என்றாள், வேடிக்கையாக.

" அப்படி யொன்றும் தூரமில்லை; குளித்தலை வரைதான் ! "

" என்ன விசேஷம் ? "

" வீடு கிடைத்து விட்டது. இன்றிரவு ஊருக்குப் போகிறேன். "

இதைக் கேட்டதும் நளினியின் பிறை நுதல் இலேசாய்ச் சுருங்கி விரிந்தது. ரகுநாதன் அதைக் கவனிக்காதது போல் ஒன்றும் பேசவில்லை. தன் வலக்கையிலிருந்த காகித உறையை மடியில் வைத்துக் கொண்டான்,

" போட்டோவா ? " என்று கேட்டபடியே அவனுடைய பார்வையுடன் தனது பார்வையை மோத விட்டாள் நளினி. அவளிடம் அந்த உறையை ரகுநாதன் நீட்டினான். வாங்கிக் கொள்ளும் போது தெரிந்தோ, தெரியாமலோ அவளுடைய விரல்கள் அவனுடைய விரல்களோடு உராய்ந்தன !

ரகுநாதன் திடுக்கிட்டான்.

அவள் அந்த உறையைப் பிரித்துப் பார்த்தாள். ' காபினட் ' அளவுள்ள அந்தப் போட்டோவில், அழகிய ஆண்குழந்தை யொன்று தன் கைகளை எதிரே நீட்டியவாறு, தவழும் பாவனையில் நின்று கொண்டிருந்தது.

ஆசை விளையாடும் விழியோடு அந்சப் படத்தை வெகுநேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு "யாருடைய குழந்தை ?" என்றாள் அவனை நோக்கி. அவளுடைய கன்னங்களில் இளஞ் செம்மை இழைந்திருந்தது.

ஏதோ நினைவில் லயித்திருந்த ரகுநாதன், "என் மகன்தான்" என்றான்.

நளினி மீண்டும் தன் பார்வையை அந்தப் படத்தில் பதித்தாள். ரகுநாதன் தலைகுனிந்தபடி ஏதோ யோசித்துக் கொண்டிருந்தான். எனவே அப்பொழுது தனது விழிக்கடையில் துளிர்த்திருந்த கண்ணீரை அவனறியா வண்ணம் துடைத்துக் கொண்டாள் நளினி.

ரகுநாதன் தலை நிமிர்ந்தான். சோகமே வடிவாய் அமர்ந்திருக்கும் நளினியைக் கண்டதும் அவனுக்கு என்னவோ போல் இருந்தது. "மனைவியை ஊரிலிருந்து அழைத்து வரவே இன்று செல்கிறேன் ; திங்கட்கிழமை காலை திரும்பி வருவோம்" என்றான்.

மின் வெட்டும் நேரத்திலேதான் நளினியின் முகத்தில் எவ்வளவு மாறுதல் !

ரகுநாதனைக் கடிந்து கொள்ளும் பாவனையில் "அண்ணியைப் பற்றி ஏன் இத்தனை நாள் ஒன்றும் சொல்லாமலிருந்தீர்கள் ?" என்று கேட்டுக் கொண்டே முறுவல் கமழும் தன் அதரங்களை அந்தப் படத்தில் ஒற்றினாள்.

அவளுடைய கேள்வியில் மட்டும் இன்றி, ரகுநாதனின் உள்ளத்திலும் அப்பொழுது தெளிவுத் தென்றல் வீசிற்று.



தயாரிப்பாளர் :

அரசினர் தீப்பெட்டி தொழிற்சாலை

பெரம்பூர், சென்னை.

வியாபார விஷயமாக விசாரிக்குமிடம் :

தொழில் & வர்த்தக டைரக்டர், சென்னை-5.

AT YOUR SERVICE

Grams: CORONATION

Phone: 54

THE CORONATION LITHO WORKS

DHARMAVILLA BUILDINGS

POST BOX NO. 2. SIVAKASI. (S. I.)

PIONEERS IN FINE ART LITHO & OFFSET PRINTING. CONTACT FOR PRINTING LABELS, CALANDERS, ADVERTISEMENT POSTERS etc. FOR ALL TRADES.

Distributors for: HOOGHLY INK Co, Private, Ltd.

போன்: 151 தந்தி: VESSELS

குறைந்த விலையில் சிறந்த பாத்திரங்கள்

எவர் சில்வர் பாத்திரம், எவர் சில்வர் தகடு,
பித்தளை, செம்புப் பாத்திரம், பித்தளை,
செம்புத் தகடுகள் உத்திரவாதத்
துடன் கிடைக்கும்.

பெ. சீ. சீ. சுந்தரம்மாள் அன் கோ.,

பாத்திர வியாபாரம்

28, வெங்கலக் கடைத் தெரு,

மதுரை.

மயக்கம் தெளிந்தது

-நிலக்கோட்டை சங்கரசுப்ப-

நடு நிசி. மணி பன்னிரண்டு இருக்கும். விளக்கு அணைக்கப்பட்டிருந்தும், எனக்குத் தூக்கம் வரவில்லை. அப்பொழுது தான் 'சிலு சிலு' வென காற்று வீசத் தொடங்கியது. எனது பெற்ரோரின் படங்களுக்குப் போடப்பட்டிருந்த மல்லிகை மலரின் மணம் அறையெங்கும் பரவியது. மல்லிகைச் சரத்தின் மணமும் கட்டிலில் விரித்திருந்த பஞ்சு மெத்தையின் மென்மையும், என் உடம்பை என்னவோ செய்தது.

முதல் பிரசவத்திற்காக என் மனைவி தன் தாய் வீடு சென்றிருந்தாள். பக்கத்திலே கிடந்த பட்டுத் தலையணையில் எனது கரங்கள் பட்டபோது, என் மனைவியின் மிருதுவான உடலைத் தொடுவது போன்ற ஒரு பிரமை. அவளுடன் அனுபவித்த 'இன்ப இரவு' எண்ணங்கள், என் மனதில் 'சடுகுடு' விளையாடின.

அன்று என் நண்பர்களுடன் திரைப்படம் காணச் சென்றிருந்தேன். அது ஓர் ஆங்கிலப் படம். அங்கங்கள் யாவும் வெளியில் தெரியும்படி நடித்த, குளிக்கும் அழகிகளின் தோற்றம், முத்தமிடும் காட்சிகள் முதலியன என் உள்ளத்தில் மறைந்து கிடந்த காம உணர்ச்சியை எழுப்பி விட்டன. பற்றுக் குறைக்கு படுக்கையின் மென்மை, தென்றலின் தண்மை, மலரின் மணம் இவை யாவும் என் காம இச்சையை ஆடவிட்டு வேடிக்கை பார்த்தன.

இந்நிலையில் பக்கத்தில் மனைவியில்லை. என்ன செய்வது? அவள் ஊருக்குப் போனதிலிருந்து வயிற்றுப் பசியைத் தீர்த்துக்கொள்ள ஒரு ஹோட்டலில் சாப்பிட்டு வந்தேன். அதுபோல உடற் பசியைத் தீர்த்துக் கொள்ள இன்று மட்டும் ஒரு விலைமகளின் வீட்டிற்குச் சென்ருலென்ன? இப்படியொரு எண்ணம் என் இதயத்தில் உதித்தது!

'ஒழுக்கம் என்பது போர்க்களம் போன்றது. அதில் வாழவேண்டுமெனில் ஓயாமல் மனதோடு போராட வேண்டியதிருக்கிறது' என்ருன் பிரஞ்சுப் பேரறிஞன் ருஸோ. அவனது கூற்றுக்கு ஒப்ப என் உள்ளத்தை நிலைக்களமாகக் கொண்டு, போர் முரசம் கொட்டியது ஒழுக்கம்; வெற்றிச் சங்கம் முழங்கியது உணர்ச்சி.

மறுகணம், இதுவரை நடந்தறியாத ஒரு தெருவை நோக்கி என் கால்கள் நடந்து கொண்டிருந்தன. பாதையில் சற்று தூரத்திற்கு ஒன்ருக மின்சார விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. நகரத்தின் இரைச்சல் அடங்கி விட்டபோதிலும், சற்று நேரத்திற்கு ஒருதரம் 'பிளசர் கார்' களும், 'ரிக்ஷா'க்களும் என்னைக் கடந்து போவதும் வருவதுமாக இருந்தன. நான்

வெல்வெட்டு மெத்தை கற்றுத் தராத பாடம்
மின்வெட்டும் நேரத்திலே, வீதி முனையிலே
விளங்கியது. அவன் மயக்கமும் தெளிந்தது!

நடைபாதையை விட்டு இறங்கி ரோடில் நடந்து கொண்டிருந்தேன்.

நாற்சந்தியின் மத்தியில், விளக்குத் தூணின் அடியில் ஒரு காவி ஆடை புடுத்திய வயோதிகத் துறவி யொருவர் ஏதோ வரட்டு வேதாந்தச் சொற்பொழிவை நிகழ்த்திக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றி தூங்கி வழிந்தவாறு ஒரு சிறு கூட்டம் நின்று கேட்க நாட்டமின்றி நடந்து கொண்டேயிருந்தேன்.

சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு வீட்டில், பட்டுமெத்தை தைக்கப் பட்டிருந்த 'சோபா' ஒன்றில் உட்கார்ந்திருந்தேன். அது ஒரு சிறிய அறை. காற்றோட்டமான சாளரங்களை வண்ணத்திரைகள் அலங்கரித்தன. நிர்வாண அழகிகளின் பல தோற்றங்களைக் கொண்ட படங்கள் சுவரில் மாட்டப் பட்டிருந்தன. ஒரு புறத்திலே புத்தம் புதிய கட்டில். அதன் மேற் சட்டத்திலிருந்து மெல்லிய திரைச் சீலை தொங்கிக் கொண்டிருந்தது. பக்கத்திலே வேலைப்பாடமைந்த நாற்காலிகள், பொம்மைகள் வைக்கப் பட்டிருந்தன. அதன் மத்தியில் போடப் பட்டிருந்த மேசையில் தின்பண்டங்கள், பழவர்க்கங்கள், பால் முதலியன வைக்கப் பட்டிருந்தன. சுவரை ஒட்டிய மேசையில் வாசனைத் தைலங்கள், 'பௌடர்கள்' போன்ற ஆடம்பரத் திற்குரிய பொருட்களும் பெரிய கண்ணாடியும் காட்சி யளித்தன. அறையெங்கும் வாசனை ஊதுபத்திகளின் நறுமணம்.

இவ்வளவுக்கும் மேலாக என் பக்கத்தில் நின்றிருந்த ஒரு பெண்ணை நோக்கிய போது கனவு உலகில் சஞ்சரிப்பது போன்று ஒரு மயக்கம். அந்தத் துடியிடையாளை ஒருமுறை ஏறிட்டு நோக்கினேன். அழகு கொப்புளிக்கும் செம்மேனி, மைதீட்டிய கண்கள், சாயம் பூசிய உதடுகள், வண்ணப்பொடி தேய்த்த கன்னங்கள், ரோஜா இதழைப் பழிக்கும் 'கட்டாவ் வாயில்', மார்பகங்கள் புடைத்துத் தெரியும் படி அணிந்த 'சோளி'க்கை 'ஜம்பர்' இவ்விதம், நாகரிகத்தின் உச்சக் கட்டத்தை அடைந்த ஒரு சில கல்லூரி மாணவிகளைப்போல கண்டவரும் கட்டழகியாகக் காட்சி யளித்தாள் அந்தச் சேல்விழியாள்.

என் அருகிலே உட்கார்ந்து, இனிக்கப் பேசி, தின் பண்டங்களை ஊட்டினாள். பாலைக் குடிக்கும்படி கேட்டுக் கொண்டாள். ஐயோ, இதற்காகவா இங்கு வந்தேன். இதற்கெல்லாம் எனக்கு நேரம் ஏது! பொறுமைதான் ஏது! வாட்டியது உடற்பசி; காட்டினேன் மஞ்சத்தை.

விளக்கை அணைத்து விட்டு என் அருகில் வந்தாள். உல்லாச உலகம் எனக்கே சொந்தம் என்ற ஆசையில் காமத்தீ கொழுந்துவிட்டு எரிய அவளைக் கட்டித்தழுவினேன். அதில் ஏற்பட்ட இன்பக் கதகதப்பு என் இதய தாபத்தை தறிகெட்டு ஓடும்படிச் செய்தது.

அதே நேரத்தில்.........! வெளியில் சந்தடி கேட்டது. மறுபடியும் 'ஸ்விச்சை' அழுத்தி விளக்கைப் போட்டாள், அந்த மையல் விழிக்காரி. இருவரும் வெளியில் வந்து பார்த்தோம்.

அங்கே!—சாலையின் நடுவில் ஓர் உருவம் விழுந்து கிடந்தது. அதைச் சூழ்ந்து சிலர் சந்தடி எழுப்பிக்கொண்டிருந்தனர். விரைந்து சென்று பார்த்தேன். சற்று முன்பு நாற்சந்தி விளக்குத் தூணின் அடியில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்த வேதாந்திதான் விழுந்து கிடந்தார்! எவனோ ஒரு திமிர்பிடித்தவன், வழியோடு போய்க்கொண்டிருந்த அந்த வயோதிகரை 'பிளசர் கார்'ரால் மோதிவிட்டுச் சென்று விட்டான். நல்ல வேளையாக அடி ஒன்றும் படவில்லை. எனக்கு எப்பொழுதுமே இரங்கும் சுபாவம். அவரது கையைப் பிடித்து தூக்கி விட்டேன். அப்பொழுது அவரது

பையிலிருந்து ஒரு புத்தகம் நழுவிக் கீழே விழுந்தது. குனிந்து அதை எடுத்து அவரிடம் கொடுக்கப் போனேன். 'அது என்ன புத்தகம்?' என்று ஆவலோடு புரட்டினேன். தெருவிளக்கின் வெளிச்சத்தில் அதிலிருந்த எழுத்துக்கள் நன்றாகத் தெரிந்தன. அதில் காணப் பட்ட எழுத்துக்கள் இதோ :—

" பொருட்பெண்டிர் பொய்மை
முயக்க மிருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று."

(பொருள் :—பொருளையே விரும்பும் பரத்தையரின் பொய்யான தழுவுதல், இருட்டறையில் தொடர்பு இல்லாத ஒரு பிணத்தைத் தழுவினது போலாகும்.)

இதுபோன்ற கருத்துக்களை பொதுமக்களிடம் எடுத்துக்கூறி, கிடைத்த பொருளைக்கொண்டு வயிறு வளர்த்துவரும் அந்தப் பிச்சைக்காரக் கிழவன் என்னிலும் எவ்வளவோ உயர்ந்தவன்—பண்புள்ளவன் என்பதை எடுத்துக் காட்டின அந்த எழுத்துக்கள், இல்லை வைரங்கள் !

என் 'பர்ஸி' லிருந்து பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அந்தப் புத்தகத்தில் வைத்துப் பெரியவரிடம் கொடுத்தேன். அவருக்கு எனது வணக்கத்தைச் செலுத்தியதோடு, வாசலில் நின்றிருந்த விலைமகளை நோக்கியும் ஒரு 'கும்பிடு' போட்டு விட்டு என் வீட்டை நோக்கி விரைந்தேன்.

❋

அனுமார்
முசு, முசுக்கை தைலம்.

ANUMAR ANJANAM DEPOT T M

குளுமை, கூந்தல் வளர்ச்சி, அழகு தருவது

நித்திரைக் குறைவு, கண் எரிவு, பித்த மயக்கம் போன்ற நித்திய உபத்திரவங்களை நிவாரணப்படுத்துவதில், சிறந்த ஔஷதத் தைலம். குணத்திற்கு உத்திரவாதம், எங்கும் கிடைக்கும். கேட்லாக் இலவசம்.

தாதுவிருத்திக்கு
அனுமார் சாலாமிஸ்ரி லேகியம்

தாது பலவீனம், நரம்பு தளர்ச்சி, இடுப்பு வலி, திரேக பலவீனம், நீங்கும். அபார விரிய விருத்தியுண்டாகும். இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தரும். பத்தியமில்லை. முழு விபரம் மருந்துடன் 1 சேர் விலை ரூ. 10-00; ½ சேர் ரூ. 5-50; ¼ சேர் ரூ. 3-00.

M. A. செபஸ்தியன் R.I.M.P.
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,
ஆறுமுகநேரி,
திருநெல்வேலி ஜில்லா-S. I.

Telegrams : 'PIONEER' Coimbatore.

Telephones : 160, 361.

THE COIMBATORE PIONEER MILLS LTD.,

P. B. NO. 4.

PEELAMEDU :: COIMBATORE.

FOUNDER PARTNERS:

Messrs. P. S. G. & SONS.

No. of Spindles 27,226

Manufacturing **60's, 80's and 100's** Combed Yarn

Staff Employed : 41.

Labourers Employed : 934.

—:0:—

'B' Mills, Perianaickenpalayam

No. of Ring Spindles ... 22,000

Manufacturing **20's to 40's** Yarn:

Staff Employed : 6.

Labourers Employed : 320.

Practical Training Being Given to :

DIPLOMA STUDENTS IN:

L.T.M., L.M.E., & L.E.E.,

நீடித்து உழைக்கும்

பாத்திரங்கள்

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணாடி சாமான்கள், பிங்கான், எனமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவிதமான சாமான்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

ச. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவினிங் பஜார், பீ. டீ. மதராஸ்.



S. SANTHOSA NADAR & SON

1/4. EVENING BAZAR . . . . P.T. MADRAS.

BAROO/-

கிளை ஆபீஸ்: 23, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3
37, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

காமனை வென்ற கண்

'சுகி'

அத்தியாயம் 16
தர்மத்திற்குத் தண்டனை

"நீ யென்ன பெண்ணு, பேயா? முன்பொரு சமயம் என்னைக் கொல்லக் கத்தியை எடுத்தாய். களைக்கொட்டினல் எதற்காக வாரியாரைக் கொல்ல ஓடுகிருய்?"

"அவன் ராமையாவின் கையாள்" என்று சீறினள் செண்பகம்.

பாண்டித்துரையின் சீற்றத்தைப் பார்த்தால், வாலறுபட்ட சிறுத்தையின் முகம் நினைவிற்கு வந்தது. மோட்டாருடைய கண்ணுடிச் சில்கள் இரண்டொன்று கீறிய ரத்தம், முகத்திலே செம்புள்ளி குத்திக் கொண்டிருந்தன. மனத்தின் எரிச்சலும், ரத்தம் பாயும் உடல் எரிச்சலும் ஒன்று கூடி கோபத்தணலாக நின்ருர் பாண்டித்துரை.

"அந்த மனிதன் என் அத்தானைப் பற்றி அவதூறு சொல்லலாமா? அவர் யாரோ, ஒரு லட்சுமிக்குட்டியாம், அவளைக் காதலிக்கிருராம். என்னிடம் எதைச் சொன்னலும் தாங்குவேன், என் அத்தான் கோழை என்ருே பரஸ்திரிகமனம் உள்ளவர் என்ருே சொன்னல்..?"

செண்பகத்தின் கண்கள், மோட்டாருக்குள் கிடந்த களைக்கொட்டின் மீது பதிந்தது. அதனை எடுக்கவும் துணிந்தாள். வாரியார் எண்ணெய் ஒழுகும் தலையோடு, பிழைத்தாற்போதுமென சாலைவழியே மரத்தோடு ஒண்டி ஒடுங்கி ஓடிவிட்டார்.

"சொன்னல் என்ன?"

"அத்தனையும் படுபாவி ராமையா செய்த சூழ்ச்சி. என்னையா ஏமாற்ற முடியும்? எவளையோ அழைத்து வந்து என் நெஞ்சு வெடித்துச் சாக வழி காட்டினன்; அத்தான் இன்னெருத்தியை கட்டினரா? கட்டுவாரா? சொன்னதைக் கேட்டு ரோசப்படுவேனும்; ராமையாவின் சூழ்ச்சி என்னிடமா பலிக்கும்? வந்து சொன்னவனுக்குப் பரிசுகொடுக்க வேண்டாமா? என் கையில் வகையாக மாட்டியிருந்தால், மல்லிகைப் பந்தலுக்கு உயிரோடு உரம் வைத்திருப்பேன்."

பேச்சிலே சூடு கொடுத்தது போன்று, சுட்டுப்பொசுக்குவது போன்று பார்த்தாள் செண்பகம்.

பாண்டித்துரைக்கு, விளக்கம் தெரிந்தது. செண்பகத்தின் மனதிலே தெரியாத அப்பாவி கோபால வாரியார் எதற்காக இங்கே வந்தார் என்று தவித்தார். செண்பகம் கேட்டது உண்மை. வாரியார் பொய் சொல்ல வந்தவரும் இல்லை;

இடையிலே புகுந்த மாயமான் ராமையாதான் வம்பு வளர்த்து விட்டவன்.

"செண்பகம்! நீ உன்னுடைய கோபத்தினால் பெரிய தீமையை அனுபவிக்கப் போகிறாய். பெண்களுக்கு இருக்க வேண்டிய பொக்கிஷம் நாணம்; அடக்கம்; தன் காதலனைப் பற்றி எது சொன்னாலும் தாங்கும் சக்தி இருக்கும் வரை அவள் பெண்; பொறுமை இழந்து கத்தியும் கலைக்கொட்டும் தூக்கினால் ஆணைப்போல மடமை நிறைந்தவள். சமயா சமயத்தில் சிறைக் கதவே வாழ்க்கைக்கு வழி திறக்கும்."

"என்னை மன்னித்து விடுங்கள். அந்த மலையாளத்தார் அவ்வாறு சொன்னது உண்மையா? சொல்லலாமா?"

"உண்மையோ பொய்யோ? தீர விசாரிப்பதை விட்டு அடிப்பதற்கும் உதைப்பதற்கும் உனக்கு மட்டுந்தானா ஆண்டவன் உடலில் பலம் கொடுத்துள்ளார்? ராமையா உன்னைவிட பலம் உள்ளவன். ஆனால், அவன் உன்னைத் தொட அஞ்சுவான். உன்னுடைய கோபத்தை எல்லா ஆண் மக்களிடமும் காட்டவேண்டாம்; நல்லவர்களே பெண் பேதமை உள்ளவள் என்று ஒதுங்குவார்கள்; அஞ்சுவார்கள். கோபால வாரியார் நல்லவர்; பெண்ணைத் தொட அஞ்சும் வீரன். அவரைப் போன்றவரே. அக்காள் தங்கையாக, அருமை தாயாக எண்ணுவார்கள். உனக்குள்ள துணிவு ஆடவன் மனசில் வந்தால் நீ என்ன கதியாக வேண்டும? பிடி பட்ட நாகம்; மிதிபடும் மலர்; கூண்டுக்கிளி.



நினைவில் வைத்துக் கொள்; கோபத்தால் எதுவும் சாதிக்க இயலாது, இயலாது, இய லாது.''

''ஐயோ, என் ஆவேசத் தால் தவறு இழைத்துவிட் டேனே'' பிழிபடும் துணியாக வருந்தினுள்.

''நீயே உன்னுடைய அருமை முத்தையனைக் கண்டுகொள். நாங்கள் பலமுள்ளவர்கள், இல்லை; நியாய அநியாயம் அறி யாத மூடர்கள், எல்லாம் அறிந்த மேதை நீ. நீ ஒருத்தியே உடல் பலம், உள்ளத்தில் ஆணவம் உள்ளவள். உன் பலம் எவ்வ ளவோ, சக்தி எவ்வளவோ அத்தனையும்கூட்டி முயற்சிசெய். வெற்றிக்கு வேண்டியது வீரம் மட்டுமன்று; பிறர் மீதும் நம் பிக்கை.''

செண்பகத்தின் கண்கள் மலர மலர விழித்தன. இது காறும் யாரிடமும் சுடுசொற்கள் பாயும் அம்பு போன்ற கூரிய மொழிகள் கேட்காத செவிகள் கேட்டன. நாரசமாகப் பாய்ந்து துளைத்தன. நெஞ்சம் பொங்கிப் பொங்கி கடலலைகள் போல ஆர வாரம் செய்தன. சொல்லுக்குச் சொல் எரி மலையின் ஹுங் காரம் பிளிறியது. இடியோசை போல வந்த அத்தனை சொற் களும் அவள் மனசிலே வாங் கிச் சேமித்தவள், செயலற்று மரத்தோடு சாய்ந்தாள்.

பாண்டித்துரை, கண்ணுடித் தூள்கள் சிதறியவற்றை வெகு கவனமாக கைக் குட்டையால் பொருக்கினுர். அவர் உள்ளம் எவ்வளவு கொதித்ததோ, அதற்கு எதிரிடையாக கை வேலை செய்தது. நெஞ்சிலே கசியும் ரத்தம் போன்று கையி லும் காயம் செய்ய விரும்ப வில்லை அவர்.

''இன்றுமுதல், நான் எதை யும் செய்ய மாட்டேன். நீங்கள் சொல்கிறபடி கேட்பேன்''.

''பொய்''

''உண்மை''

''எது உண்மை?''

''என் அத்தான் முத்தைய னுக்கு நீங்கள் எசமான்; நண்பர். உங்கள் வார்த்தைப்படி நான் நடப்பேன்.''

''நான் முத்தையனை மீட்டுக் கொண்டு வரும்வரை நீ எது வும் பேசக்கூடாது. பேசினுல் முத்தையன் அந்தரத்தில் விடப் படுவான். மீண்டும் மீண்டும் சொல்கிறேன். முத்தையனை நான் தேட விரும்புவது, என் தந்தையிடம் கொடுத்த வாக்கிற் காக; அவனுடைய அருமைத் தாய்க்காக; உனக்காக என் பதை நீ எண்ணலாம்; நான் எண்ணவில்லை''.

''அதையும் மனசில் எண் ணிக் கொள்ளுங்கள் என்று நான் கேட்கமாட்டேன். இந்த விநாடி முதல் நான் பாறை போல அசையாது நிற்கிறேன்.''

''காரணம்?''

''தமையனே, தந்தையோ சொல்லாத அன்பைச் சொன் னீர்கள். நெருப்போடு விளை யாடுவதை அறிந்தேன். செல்வ மில்லாத ஏழைப்பெண் நான் செல்வம் நிறைந்த தங்களைத் துரும்பாக எண்ணும்படி நடந் தது தவறு.''

''இல்லை, செண்பகம். நீ என் நண்பன் முத்தையன் உயிர்; அதனுல் உன்னிடம் எனக்கு மரியாதை வந்தது. வேறு

எவராக இருந்தாலும் என் கோபம் எல்லை மீறி இருக்கும். என்னை நீ நாலறை அறைந் தாலும், முத்தையன் மீது நான் கொண்ட நட்பிற்காக அதைப் பொறுப்பேன். மனிதர்களுக் குள்ள அற்பக் கோபத் தால் உன்னை எதிர்த்து அறை யும் கேவல புத்தி எனக்கு வராது. முத்தையன் காதலித்த பெண் என்பதால் உனக்கு மரியாதை, வணக்கம், பணிவும் கூட."

செண்பகம் மன்னிப்புக் கேட் கப் போக, இன்னும் அதிகப் படியான துயரச் சுமையை அவள் நெஞ்சம் பாரந்தாங் கிற்று. ஐயோ, அவள் இனி எதற்காக நிற்கிருள்? எந்த முகத்தோடு நிற்பாள்? விழுந்து வணங்கித் தெய்வமாக நினைப் பதைத் தவிர வேறு ஏதும் செய்ய முடியாத கட்டத்தை அடைந்தாள்.

கொலைகாரியாக வந்தவள் கோழையாகப் பின்வாங்கித் திரும்பினுள். கேள்வியோ, விக் கியெழும் குரலோ கேட்க வில்லை. தாழ்ந்த தலை கவிழ, செண்பகம் அங்கிருந்து மெது வாக மறைந்தாள். கண்ணுடித் தூள்களைத் தட்டிய பின்னர் நேராக பங்களாவிற்குள் வந் தால், கோபால வாரியார் குளித்து விட்டு உட்கார்ந்திருந் தார்.

"பாண்டித்துரை ஐயா, அந் தப் பெண்ணைப் பழிக்குப் பழி வாங்காமல் விடமாட்டேன்".

வாரியார் பேசி முடிக்கட்டும் என்று ஆழ்ந்த யோசனையில் இருந்தார். ஓடிச் செல்லும் தண் ணீர் வேகமாகப் போய் வற்றும் போது ஓட்டம் குறையுமே அதுபோல வாரியார் தமது பேச்சுக்கு எதிரொலி வராமற் போகவே தணிந்தார்.

"ஐயா, கோபால வாரியார் அவர்களே? தங்களைத் தாக்க வந்த கலைக்கொட்டு என் மீது தாக்கிற்று. மோட்டாரின் கண் ணுடியை உடைத்தது. செண் பகத்தை நீங்கள் வஞ்சம் தீர்ப் பதாக இருந்தால் தயை செய்து என்மீது தீர்த்துக் கொள்ளுங் கள்; நீங்கள் செய்யும் தீமை, வஞ்சம் இதனுல் எவ்வளவு, பெரிய தீங்கு வந்தாலும், நான் சாகத் துணிகிறேன். சம்மதந் தானே?."

வாரியார் அசந்து விட்டார்.

"தீமை செய்தவருக்குத்தான் தீமை செய்ய வேண்டும்."

"அது என் தலையில் விடியும். என் குடும்பத்திலே மலைப் பாம்பு போல சுற்றிவரும். நானும் என் மனைவி மக்களும் ஜன்ம ஜன்மாந்திரமாய் அவதிப் பட வேண்டும். செய்யுங்கள்; எந்தத் தீமை செய்தாலும் செய் யுங்கள்; எனக்குப் பொறுமை வேண்டும். இன்னும் வேண் டும். பின்னும் வேண்டும். குற்ருலநாதர் வற்ருத அருவி யைப் போல எனக்குப் பொறு மையைத் தரவேண்டும்."

உணர்ச்சிச் சுழிப்புக்குள் அகப்பட்டவர்கள் பேசும் சொற்கள் சிறிதாக இருந்தா லும், பூதக்கண்ணுடி வழியாக வரும் உருவம் போல பெரிதா கத் தெரியும்; உள்ளத்தை நேரில் சென்று தாக்கும்.

"உங்களுக்கு அந்தப் பெண் குணம் தெரியலாம். என்னிடம்

என்ன கோபம்? நல்லது செய்ய வந்த நான் சாகவா ?"

"நீங்கள் சும்மா இருங்கள்".

"துன்பம் செய்யாது சும்மா இருக்க மாட்டேன். பழி தீர்ப்பேன்"

"என் வீட்டில் உணவருந்திய பின்னர் நீங்கள் எவ்வளவு துன்பம் வேண்டுமானாலும் செய்யுங்கள்; பசியும் பட்டினியும் போட்ட பாவம் எனக்கு வரக் கூடாது."

பாண்டித்துரையின் செல்வச் செருக்கில்லாத, குழைவான பேச்சு, கோபால வாரியாருக்கு இன்பக் குளிகையாய் இதயத்தில் பரவியது. பணக்காரர்களும், இதய பாசம் இன்பச் சொல் உடையார்கள் உண்டென்பதைக் கண்டார். கண் இமைக்காது, பாண்டித்துரையைப் பார்க்கப் பார்க்க கோபமே இல்லாத குணக்குன்றின் உயர அகலம் புலப்பட்டது.

"பார்வையிலேயே கொல்வதற்கு, மலையாள வைத்தியத்தில் மருந்து இருக்காது, மாந்திரிகத்தில் இருக்கலாம்."

"உங்கள் அன்பு என்னை மயக்குகிறது."

"வைத்தியர் மயங்கினால் நோய் பிழைக்காதே?"

வாரியாரால் சிரிப்பை அடக்க முடியவில்லை. பாண்டித்துரைக்கு வரவேண்டிய கோபம் வராமல் அடங்கிச் சமாதியாக இருப்பதே ஆச்சரியத்தைக் கொடுத்தது.

"நான் இறந்து போயிருந்தால் எவ்வளவு நலமாக இருக்கும். களைக் கொட்டும், சிதறிய கண்ணாடிகளும் என் உயிரைக் குடிக்கவில்லையே".

"என்னைவிட, நீங்கள் தான் அந்தப் பெண்ணின் மீது வஞ்சம் தீர்க்க முனைய வேண்டும். அத்தனை துன்பம் அடைந்து விட்டீர்கள். உங்கள் முகத்திலுள்ள கண்ணாடிக் கீறல், முத்தையன் முகத்திலுள்ள புலி நகத்தின் கோடுகளை நினைவூட்டுகின்றன......"

"புலிக்கு நகமும் பல்லும் கொடுத்த ஆண்டவன், பெண்களுக்கு யௌவனமும் கர்வமும் பொறுமையும், கொடுத்துத் தொலைத்தானே?"

வாரியார் இதே வார்த்தைகளைச் சொல்லிச் சொல்லிப் பார்த்தார். வேத மந்திரம்போல சொல்லச் சொல்ல இன்னும் சொல்லலாம், பின்னும் சொல்லலாம் என்ற இனிமையை விளைவித்தது.

அத்தியாயம் 17

நம்பினோர் வெல்வதுண்டு.

காற்றும் மழையும், ஒளியும் நிழலும், பசுமையும் பச்சையும் தன் குடிலைச் சுற்றி எவ்வளவு நிச்சயமாக இருந்துவந்தனவோ, அப்படியே முத்தையனும் இருப்பான் என்று அகமும் புறமுமாய் எண்ணி வந்த லட்சுமிக்குட்டியின் இதயத்துள் வேதனை வேர்விடத் தொடங்கிற்று. கோபால வாரியார் கோபித்துக் கொண்டு போனவர் தன் கோபத்துக்குத் துணையாக இரண்டு நபர்களை அழைத்து வந்தார். அவர்கள் இருவரும் நல்ல குலத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் பொய் சொல்லாத கூட்டம். இனிமேல் அவர்கள் பேச்சுக்கு

எதிராகப் பேச முடியுமா? பாண்டித்துரையும், நானும் முத்தையனைக் கட்டிக்கொண்டு அழத் தொடங்கி விட்டோம். அவன் 'நீயார்'? உன்னுடைய அழுகை யென்ன? என்று கேட்டானே? இல்லை. அவன் எங்களை மறந்து அந்நியனைப் போன்று அமர்ந்திருந்தான். அவன் பார்வை, கவனம், கண் அனைத்தும் பொற் கொடியின் முக மண்டலத்தை வட்டஞ் சுற்றின; அவள் குரலைக் கேட்க செவிக்குத் தாகம்; அவளோடு சேர்ந்து உண்ண பசிக்குத் தோழமை.

பாண்டித்துரை குற்ருலத்தில் கோபால வாரியார், செண்பகம் இருவரையும் பேச்சுமாரி பொழிந்து பின்வாங்கச் செய்தாரே அதைவிட ஆயிரம் மடங்கு அவர் சாதுர்யம் வேலை செய்தது. மற்றவர்கள் அவர் பேச்சுக்கு அடங்கி ஒடுங்கி அறிவையும், அன்பையும் பயந்து உள்ளடக்கியது போன்று லட்சுக்மிகுட்டி ஊமையாக மாட்டாள். அவள் பேச்சிலே உரம் இருந்தது. உரத்துக்கும் அப்பால் அவள் உள்ளம் அல்லவா அவனேடு ஐக்கியமாகி இருக்கிறது? அசையாத நம்பிகைகை—தன் சொத்து தன் பொக்கிஷம், தனது அமிர்த கலசம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை. அந்த நம்பிக்கையை அசைப்பது இமயத்தைக் கல்லி யெடுப்பதற்குச் சமம். அவள் முடிவுவரை சொல்லிவிட்டாள்.

"ஐயா, ஜமீந்தாரய்யா, நான் விடமாட்டேன். உங்களுடைய அறிவுரைகள் எப்படி இருந்தாலும் சரி. நீங்கள் சொல்லும் செண்பகம் அவருடைய உயிரைக் காப்பாற்ற வில்லை. அவள் கொன்ற உயிரை நான் காப்பாற்றியது உண்மையா? இல்லையா? புலியோடு போர் செய்யப் போ என்ருளா இல்லையா? பிழைக்கிறவள் செய்யும் செய்கையா? போரிட்டு வாடிவதங்கிய சோளத் தட்டைக்குச் சோறு பிடித்தமாதிரி சற்று சதைப் பற்றுப் பிடித்திருக்கிறது. வாரியார் ஐயா சொன்னூர்கள் பித்துத் தெளியாது என்பதாக. தெளியாவிட்டாலும் போகட்டும். அவருக்கு நான் யார் என்ற ஒரு எண்ணம் இருக்கிறது, அது போதும், தயை செய்யுங்கள். கையெடுத்துக் கும்பிடுகிறேம். எனக்கு உயிர் ஒன்று உண்டானல் அது இதுவே. என்னையும் அவரையும் பிரிக்காதீர்கள். என் உயிரைப் பிரிக்காதீர்கள்."

லட்சுமிக்குட்டியின் சொல்லிலே கனிவு; முகத்திலே அடைக்கலம் கோரும் அன்பு பிச்சை; அவள் உள்ளத்தில் முழுக்க முழுக்கமுத்தையன் திருமாலைப் போல பள்ளிகொண்டிருந்தான்.

பாண்டித்துரையும் நானும் பலவாருக எண்ணினேம். பாண்டித்துரை தன்னுடைய சாதுர்யங்கள் அனைத்தையும் பிரயோகம் செய்தார். சற்று நடித்தார்; கடிந்தும் வளைந்தும் பேசினூர். விட்டுக் கொடுக்க விரும்பாது அசையாது இருக்கிருள். அவளை அசைப்பது எப்படி? அதுதான் எங்களுக்கு விடியாத புதிர். மாளாத யோசனை, யோசனை ஒரே யோசனைக் குமைப்பு.

முத்தையன் எங்களை அடையாளம் கண்டுகொள்ளவில்லை; ஆனால் அவன் பார்வை லட்சுமிகுட்டியின் பார்வைக்கு நாடி பிடித்தது. அவள் எங்களைக் கோபமாகப் பார்த்தால் அவன் கண்கள் சிவக்கும்: அவள் அன்பாகப் பேசினால் அவன் கண்கள் கனியும். அவளுடைய குரலுக்கும் உணர்ச்சிக்கும் எதிரொலியாக இருக்கிறான். அவள் நினைத்தால்தான் அவன் தெளிவடைவான். அவனைப் பரிபூரணமான பைத்தியமாக்கும் சக்தி, அவளுடைய குரலுக்கும், குணத்துக்கும், பாசத்துக்கும், பரிவுக்கும், பரவசத்துக்கும் இணைந்திருந்தன. நரியை வைத்து நரி பிடிக்க வேண்டிய தவறான மார்க்கத்தையே நாங்களும் கையாள இருந்தோம். சேர்ந்து உண்பது, சேர்ந்து உலாவப் போவது, சேர்ந்து அரட்டையடிப்பது என்பது நடைபெற்றாலும் எப்போது முத்தையன் கண் அயர்வானோ, அப்போ குடிலுக்குப் பின் பக்கமுள்ள தென்னை மரத்தடியில் நாங்கள் உட்கார்ந்து விவாதம் செய்வது பழக்கம் என்று வைத்துக் கொண்டோம். முத்தையன் முன்னால் நாங்கள் சர்ச்சை செய்வது நல்ல பாம்பின் முன்னால் விளையாடுவது போன்ற செயலாகும்.

"அம்மணி! தாங்கள் சொல்வதில் எங்களுக்கு முற்றிலும் இஷ்டம். இந்த முத்தையனோ அல்லது இவன் காதலித்ததாகச் சொல்லப்படும் அந்தச் சண்டாளி, சண்டாளியாக இல்லாது போனால் தன் காதலனை புலியைக் கொன்று வா பூமாலை சூட்டுவேன் என்று சொல்லுவாள்?"

பாண்டித்துரை சற்று 'நோட்டம்' கொடுத்தார். சண்டாளி என்றும், நீங்கள் போய் தாங்கள் என்ற மரியாதைப் பன்மையும் வந்து விட்டது. பிறரை வசப்படுத்த வார்த்தைகள் எவ்வளவு பெரிய விளக்கெண்ணெய் இயல்பு கொள்ளுகின்றன என்ற ஆச்சரியத்துள் மூழ்கியிருந்தேன்.

"அண்ணா, நீங்கள் எனக்குத் தெய்வம். நான் படித்தவள். என் வாழ்க்கையை நீங்கள் அறிவீர்கள். உங்களை நம்பித்தான் உண்மைகள் பலவும் சொன்னேன். நான் இளகிய நெஞ்சம் உள்ளவள். எனக்கு இவரைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்ச்சி இருந்தது. பின்னிட்டு அவர் குணமும், அவர் பேச்சும் என்னைப் பாசம் கொள்ளச் செய்தன. பாசத்தின் விளைவு நட்பாகும் என்பது தாங்கள் அறிந்ததே. பாசத்திலிந்து பற்றுதல் ஏற்பட்டு, அவர் இல்லாவிட்டால் என் உடம்பில் உயிர் இல்லை என்று முடிவு செய்துவிட்டேன். தாங்கள் எனக்காக செண்பகத்திடம் சொல்ல வேண்டும்" என்று பாண்டித்துரையின் நீண்ட விரல்களைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டாள்.

கயல் விழிக்கு அடியில் கண்ணீர்க் கடல் கண்டோம்.

எனக்கு எப்போதோ ஒரு சினிமாவில் பேரரசன் சலீம் கையைப் பிடித்துக் கொண்டு அனார்கலி கெஞ்சும் பாவம் மனவானத்தில் பின்னியது. அனார்கலியே துள்ளித் துவள்

For Complete Range of Cotton Spinning Plant

TEXTOOL

CARDING ENGINES
RING SPINNING FRAMES
DRAWING FRAMES
REELING MACHINES
FLY FRAMES
BUNDLING PRESS

TEXTOOL DIESEL ENGINES

For Agricultural purposes.

ENQUIRIES SOLICITED :

TEXTOOL COMPANY LIMITED

Post Box No. 221, COIMBATORE (South India)

Telephone : 409 & 1409 Telegrams : "TEXTOOLCO"

எங்கள் கம்பெனியில் நயம் அரைத்த உப்பு
நயம் பருமணி உப்பு (97% Nacl)
கல்கத்தா, பீகார், ஒரிஸா, மத்திய
பிரதேஷ், கேரளா முதலிய
இடங்களுக்குச் சப்ளை செய்து
கொண்டிருக்கிறோம்.

தேவைப்படுகிறவர்கள் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதி
தெரிந்து கொள்ளவும்:

மச்சாது சால்ட் கம்பெனி

18-A, பீச் ரோடு, தூத்துக்குடி.

Phone : 1 & 333 Tel. Address: MACSALT

Telephone: MADRAS 4890. MADURAI: 581

இன்பம் தரும்

31

301

3001

ஜவ்வாது பத்திகள்

சுகந்த மண்டலம்

உரிமையாளர்கள்:
S.V. பழனிமலை
S.V. ரெங்கசாமி

மதுரை . மதராஸ் . பெங்களூர் . விஜயவாடா

வதாக உணர்ந்தேன். கண்ணீரும் கம்பலையுமாக "அண்ணா அண்ணா, என்னை மறக்காதே அண்ணா" என்று பல்லூழி காலம் உடன் பிறந்தவனைப் போல அவரிடம் பிச்சை கேட்க ஆரம்பித்து விட்டாள். எந்த பேச்சினால் அவனை வெல்ல வேண்டும் என்று திட்டம் போட்டாரோ அந்தச் பேச்சு அவளுடைய வார்த்தை வாளுக்கு உறையாகி விட்டது. பளிச்சிட்டு மின்னவேண்டிய சொற்கள் உறைக்குள் அகப்பட்டுக் கொண்டன. அவளுடைய கண்ணும் கருத்தும் முத்தையன் தன்னை விட்டுப் போகக் கூடாது என்ற சுருதியில் பல்லவி பாடிக் கொண்டிருந்தன. வெட்கத்தையும் மறந்து சற்று விரக வேதனையைக்கூட அவள் கண்கள் சொல்லி விட்டன. பச்சையாக பெண்மைக்கு மாறாக உணர்த்திய காட்சி என்றாலும் அவள் தன் வாழ்வின் சூரியனைக் கொண்டு போகாதே என்று மன்றாடிக் கேட்கிறாள்.

இதற்காகவா பாண்டித் துரையும் நானும் குற்றாலத்து மலைக்காட்டு வழியாக வந்தோம்? எத்தனை சுனைகள், பள்ளத்தாக்குகள், பாழ் நிலங்கள் வழியாக கால் நோக காடும் மலையும் கடந்தோம்? வரும் போது எங்கள் ஆற்றல் வீரம் இரண்டிலும் வெகுவாக நம்பிக்கை. சிறுபிராயத்துக் குழந்தையின் கையிலே வைத்துள்ள திண்பண்டத்தைக் காகம் கொத்திக்கொண்டு போவது போல கொத்திக் கொண்டு வந்து விடலாம் என்ற மெத்தனத்தோடுவந்தோம். இதனால் எங்களுக்குத் துணையாக வந்த பண்ணையாட்களை மலையாளச் சீமை எல்லைக்குள் வந்ததும் நாங்கள் அனுப்பி வைத்தோம். அவர்கள் எங்களோடு வந்தால் லட்சுமிகுட்டி பயந்தோ, சந்தேகம்கொண்டோ முத்தையனுக்கு கேடு செய்யலாம்; அவள் மனம் பேதலிக்கலாம்; அவளைப் பயமுறுத்திக் காரியம் சாதிப்பதை வஞ்சனையாக வெற்றி கொள்வது எளிது; இவ்வாறு திட்டம் போட்ட நாங்கள் காட்டுக்குள்ளே பட்ட கஷ்டங்கள் எதற்கு? ஏமாந்து வீடு திரும்புவதற்காகவா?

உயிருக்கே ஆபத்து வந்து நடுக்காட்டில் சுட்டார்களே.

அந்தக் குண்டுகள் பட்டிருந்தால் எங்கள் கதி என்னவாயிருக்கும்? பாண்டித்துரையின் உயிர்கெட்டி. அவருக்குத் துப்பாக்கியின் நட்பும் பழக்கமும் அதிகமாக இருப்பதால் இவ்வாறு சுட்டால் இவ்வாறு தாக்கும் என்பதை அறிந்தவர். பிறவி வேட்டைக்காரர். அதனால், நாங்கள் பிறர் சுடுகின்ற துப்பாக்கி ஓசையைக் கேட்டுக் கொண்டே ஒதுங்கி ஒதுங்கி மறைந்து முடிவிலே சுட்டவர்கள் எங்கள் மீது நம்பிக்கை கொள்ள நடந்து கொண்டோம்.

அப்பொழுது நாட்டில் பயங்கர கலவரம் நடந்துகொண்டிருக்கும், ஆகஸ்டு விளைவுகள் ஆங்காங்கே கிளைத்துக் கொண்டிருக்கும் காலம். மலையாளத்தைச் சேர்ந்த ஒரு சிலர் உயிருக்குப் பயந்து அல்ல. பிறர் உள்ளத்திற்கு ஊக்கம் கொடுக்க அரசாங்கத்திற்கு

ஆப்புக் கொடுக்கும் ஆக்க எண்ணத்தில் மலைப் பள்ளத் தாக்கில் பதுங்கி யிருந்தார்கள். எங்களை அவர்கள் வேவுகாரர் கள் என்று எண்ணி விட்டார் கள். துப்பறிந்து அவர்கள் பகுதிக்கு வந்து விட்ட தூர்த்தர் கள் என்று எண்ணியதில் வியப்பில்லை. அவர்கள் மனம் திருப்திபடுவதற்கு நாங்கள் பத்து இருபது பேர் வந்ததும் அடைக்கலம் என்றோம். எங் களுக்குப் பாதை தெரியாது. அவர்கள் எங்களில் எவரைச் சுட்டாலும் இருசாராருக்கும் ஆபத்து. முடிவில் அவர்களு டைய யோசனையின்படி கீழ் படிந்தோம். நாங்கள் முத்தை யன நண்பர்கள் என்று கண்ட னர்.

முத்தையனும் அவர்கள் பார்வைக்கு இலக்காகி அவர் கள் அவனுக்கு ஒரு தினம் உணவு கொடுத்ததைச் சொன் னார்கள். அவர்கள் காட்டிலே இருந்தாலும் அவர்கள் மனம் நாட்டுக்குள் இருந்தது. அரசி யல் கொந்தளிப்புக்குள் துளியும் நாங்கள் சம்பந்தமில்லாத நபர் கள் என்பதை அவர்கள் நம்பியதால் எங்களை விட்டார் கள். இல்லா விட்டால் அரசி யல் போராட்ட வீரர்கள் எங் களை அந்தக் காட்டிலே சுட்டுப் பொசுக்கி சமாதி செய்து விட் டாலும் தெரியாது. காட்டுக் குள் புலிகளுக்கும் அப்பால் அரசியல் புலிகள் பல தங்கி இருப்பதையும் அறிந்து நாங்கள் விலகி வந்தோம். வீரர்கள் தான் எங்களுக்கு வழியைக் காட்டினார்கள். அவர்கள் முத்தையன் வீரத்தைப் புகழ்ந் தார்கள்.

தேகப் பயிற்சி செய்யும் ஆடவர்கள் போன்று காற்றிலே ஆடி நடமாடும் மரக்கட்டங் களையும் பார்த்தோம்; அயர்ந் தால் கிடுகிடு பள்ளங்களில் அகப்பட்டுச் சாகும் பாதைகளை யும் பார்த்தோம். இவ்வாறு வியந்தும் உயிரைக் காப்பாற்றி வந்தோமே, ஒரு பெண்ணிடம் ஏமாறுவதற்காகவா? இதை விட அரசியல் தியாகிகளான அவர்கள் கையாலேயே குண்டு பட்டு மடிந்திருக்கலாமே, இந்த ஒரு எண்ணமே மேலோங்கி நின்றது. நாங்கள் பிழைத்து வந்து பின் வாங்குவதும், அந்தப் பெண் எங்களைத் திணற அடிப்பதும் நின்ற பாடில்லை.

கோபாலவாரியார் இருதலைக் கொள்ளியாக விழித்தார். நாங் கள் பேசும்போது எங்கள் கட்சி நியாயம் உள்ளது; லட்மிக்குட்டி கண் கலங்க அழுது சொல்லும் போது அவள் சொல்வது அத்தனையும் நியாயம்.

"பாண்டித்துரை நீங்கள் செய்ய எண்ணும் உதவி பிறருக்காக. உங்களுக்கு எவ் விதமான லாபமும் இல்லை. முத்தையனை ஒரு விநாடி நீங் கள் தனியாக வைத்துக் கொள்ள இயலாது. என் வீட்டிலிருந்து ஒரே ஓட்டத்தில் இங்கே குடிலுக்கு வந்து விட்டான். அவனை ஆளவும் அடக்கவும் லட்சுமிகுட்டி ஒருத் தியால்தான் முடியும். அதனால் நீங்கள் குற்றாலத்திற்குத் திரும் பிப் போய் விடுங்கள். முத்தை யன் இறந்து விட்டான் அல்லது காணவில்லை என்று பொய் சொல்லி விடுங்கள். நாமும் ஒரு வாரமாக விவாதம் செய்

கிறேம். பலன் என்ன?'' வாரியார் சொல்லியது உண்மை.

''முடிவு இதுதான். இதை ஊர்ஜிதம் செய்யத்தானே இத்தனை கஷ்டமும் ஆபத்தும். நாளைக்கு இந்தப்பெண் முத்தையன் உண்மையான குணம் வந்த பின்னர் அவனைக் காப்பாற்றுவாளா? அவன் அரைகுறையான புத்தியில் இருக்கிறன். என் அருமை தங்கை சொல்வதைக் கேட்கிறன். நாளைக்கு அவன் 'நீயாவது ஆட்டுக்குட்டியாவது' என்று போய்விட்டால் என் தங்கையினுடைய கதி என்னுவது? அதற்காகத்தான் தயங்குகிறேன். எந்த விநாடி லட்சுமியின் முகத்தை என் கண்கள் பார்த்தனவோ, அந்தவிநாடியே என்னுடைய அகம்பாவம் அழிந்து விட்டது. எனக்குத் தங்கை ஒருத்தி இருந்தால் என்ற எண்ணம் பிறந்தது.''

லட்சுமிக்குட்டியின்கண்களில் நன்றி மலர்ச்சியாகப் படர்ந்தது. தங்கையாமே. அருமைத் தங்கை என்ற உறவு முறை.

இதனைக் கவனித்த பாண்டித்துரை வெற்றி தன் பக்கம் என்று தீர்மானம் செய்து மேலும் சொல்லுவார்.

''வாரியார் அவர்களே, நான் அந்நியன். மலையாளி இல்லை. தமிழன். தங்களுக்கு இந்த அபலைப் பெண் மீது எவ்வளவு அன்பு உண்டோ, அவ்வளவு அன்பு எனக்கும் உண்டு. என் இதயத்தைப் பிளந்து பார்த்தால் அங்கே உண்மை இருக்கும். எது சொன்னலும், நான் அந்நியனுகத்தான் லட்சுமிக்குட்டி மனதிற்குள் படுவேன். காரணம் உங்களைப் போல மலையாள மொழியில் சொல்லும் ஆற்றல் எனக்கு இல்லை. அவள் சொல்லும் அரைகுறையான மலையாளம் கலந்த தமிழ் என் நெஞ்சைத் தொட்டு துளை செய்வது போல எனக்குச் சொல்லத் தெரியவில்லையே தவிர உணர்ந்ததை உள்ளபடி சொல்ல எண்ணுகிறேன். ஆண்டவன் எங்கள் பக்கம் இருந்து, காட்டுக்குள் கலகக்காரர்களுக் கிடையே காப்பாற்றினர். சுடுகின்ற துப்பாக்கிகளுக்குத் தப்பி எதற்காக இங்கு வந்தோம்? நாங்கள் அங்கேயே மாண்டு மடிந்து போயிருந்தால்? இப்படிப்பட்ட ஒரு பெண்ணின் சோகக் கதையைக் கேட்டு, பார்த்து சோளத் தட்டைப் போல நின்றிருக்க வேண்டாம்.''

பாண்டித்துரையின் வாசகம், உச்சரிப்பு என்னைக் கலக்கி விட்டது. பாசத்தைவிட பாசம் இருப்பது போல நடிப்பதற்குத் தான் வலு அதிகம். பொய்யைச் சொல்லுகிறபடி, சொன்னல், அது மெய்யாக பிறர் நம்பும்படி ஆகுமாம்; மெய்யும் சொல்லமாட்டமையால் பொய்யாகப் போய்விடும் என்ற மூதுரையோடு, அன்பையும் காட்டும் வண்ணம் காட்டாது போனல் பொய் அன்பாகப் போய்விடும்; பொய்யான அன்பும் காட்டுகிற வன்மையோடு காட்டினல் நம்பிவிடலாம் என்பதைக் கண்டேன். எனக்கே சந்தேகம். ஒருவேளை பாண்டித்துரை மனம் மாறிவிட்டதோ. என்றுமே

தொல்லை செய்து வந்த செண்பகம் எக்கேடு கெட்டால் என்ன என்று அவர் உள்ளம் எண்ணி விட்டதோ? இவ்வாறு எனக்கே சந்தேகம் வரும்.

நாங்கள் தனித்துப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. ஒரு வாரமாக வாரியார், நாராயண மேனன், இருவரும் எங்களுடன் இருந்தார்கள். மலையடிவாரத்துக் காட்சிகள், பாய்ந்து ஓடும் வாய்க்கால், புதைபட்ட புலியின் சமாதி, தோப்பு துறவுகளின் குளுமை இவற்றையும் தனித்து அனுபவிக்க எங்களைவிடாமல் அவர்கள் கூட இருந்தார்கள். இதனால் பாண்டித்துரையின் எண்ணம் என்ன, போக்கு என்ன என்பதை நான் ஆய்ந்து தெரிய முடியாமற் போய்விட்டது. ஒரு சமயம் எனக்கே சந்தேகம் வந்துவிடும். முத்தையனுக்கு பரம விரோதியோ? அல்லது பால்ய நண்பனோ? என்னால் எதுவும் தீர்வு காண்பதற்குச் சக்தி யில்லை. சாமர்த்தியம் இல்லை. உருவத்தோடு ஒட்டிய நிழலாக இருந்தேனே தவிர, தனித்து இயங்கும் தன்மை என்னிடம் ஒரு வாரமாக விடை பெற்றுக் கொண்டது.

சோகக் கதை கேட்டு சோளத் தட்டை போல கையாலாகாத ஆண்பிள்ளையாக நிற்பதாகச் சொன்னதும், லட்சுமிக் குட்டி பரிபூரணமாக நம்பி விட்டாள் என்பதை அவள் வார்த்தைகள் தெரிவித்தன. ''அண்ணா, உன்னைத் தனிமையில் சந்தித்து ஒரு சில பேச வேண்டும்'' என்றாள்.

''இதைவிடத் தனிமை என்ன வேண்டும்? உன்னைப் பெற்றவர் இருக்கிறார். அவர் அறியாத காரியம் எதுவும் இருக்கக் கூடாது. உனக்கு வேண்டியவர் உன் காரணமாக எங்களுக்குத்தகவல் தெரிவித்த வாரியார் இருக்கிறார்; வைத்தியரை மறைத்து வாழ்க்கை நடத்தக் கூடாது. போயும் போயும் என் நண்பர் இவர். நான் வேறு அவர் வேறு அல்ல. அவரும் முத்தையன் மீது நெருங்கிய அன்பு கொண்ட சிநேக சீலர்.

பாண்டித்துரையின் பேச்சு இத்தனையும் நம்பிய நான் முடிவில் ஏமாந்தேன். எவரையும் விரோதிக்க விரும்பாமல் எல்லோரையும் நண்பராக ஆக்கிக் கொண்டு முத்தாப்பு ஒன்று கொடுத்தாரே பார்க்கலாம்.

''இவர்கள் சார்பாக தமையனிடம் தங்கை தனித்து என்ன சொல்லிவிட முடியும்? அதையும் கேட்டு வந்து சொல்லுகிறேன்'' என்று அவள் எழுவதற்கு முன் அவர் எழுந்து விட்டார். எங்களுக்கு அவர் பிரதிநிதியாம். 'பலே' நடிப்பு.

அவர் பின்னால் ஆட்டுக்குட்டி போல எழுந்து போனாள். தொலைவில் வேலிப்படலுக்கு அப்பால் அவர்கள் நின்று பேசினார்கள். அவரிடம் தனித்துப் பேசுவதற்கு அழைத்துச் சென்ற பெண், பேசினாளா? இல்லையே. அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருக்கிறாள். பாண்டித் துரையின் சொற்கள் ஒவ்வொன்றும் மெள்ளத்தான் கேட்டன; ஒவ்வொரு சொல்லுக் குள்ளும்

இதயம் புகுந்துவரும் கெட்ட ரத்தம் சுத்தமாவது போல அன்பிலே தேய்த்து, நம்பிக்கையில் காயவைத்து, கட்டில் வாட்டி எடுத்தது போன்றிருந்தது.

பெண்மையையும் வெல்லும் பேச்சுத்திறன் படைத்த எமன் பாண்டித்துரை. அரைமணி நேரம் அவர்கள் பேசினார்கள். நாங்கள் ஒருவருக்கொருவர் ஏதோ பார்த்தோம்; சிரித்தோம்.

வாரியார், "ஐயா கதாசிரியரே. நீங்கள் கற்பனை செய்து கொண்டிருப்பதை விட இது போன்ற உண்மைக்குள் நுழைந்து இன்ப துன்பத்தை எழுதுங்கள். நடக்க முடியாதது நடக்கிறது. நம்ப முடியாதது நிகழ்கிறது. இந்தப் பெண்ணுக்கு வஞ்சம் செய்ய குற்றுலம் வந்தேன்; முடிவிலே அங்கு செண்பகம் எறிந்த கல்லைக்கொட்டு எனக்குப் பாடஞ் சொல்லியது. இந்த மனிதன் பாண்டித்துரை என்ன வசியம் வைத்திருக்கிறார்? செண்பகமும் இவர் சொன்னால் 'ஆமாம்'போடுகிறாள். லட்சுமிக்குட்டியை 'ஆமாம்' போட வைத்து விட்டார்" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

"நமக்கு நேரிடையான பலன் இல்லாத காரியமாக இருந்ததால், பிறர் நம் பேச்சை நம்புவார்கள். பாண்டித்துரைக்கு என்ன லாபம்?"

"அந்த ஜாதகம் எல்லோர் வாழ்க்கையிலும் நடப்பதில்லை. சிலருக்குத்தான் பெண்களையும் அவர்கள் பேச்சையும் வெல்லும் சக்தி இருக்கிறது."

அங்கே வந்த பாண்டித்துரை, "வாரியார் அவர்களே? நானும் உங்களைப்போல மனிதன் தான். பெண்களிடம் தோல்வியைப் பெற்ற மனிதன். நம்புங்கள். என் தங்கை லட்சுமி என்னை ஏமாற்றி விட்டாள். அவள் சொற்படி ஆடவேண்டிய பொறுப்பை என்னிடம் கொடுத்து விட்டாள். உங்கள் பிரதிநிதி தோல்வி யடைந்தேன் என்றால், நீங்களும் தோல்வி யடைந்தீர்கள்" என்று சொன்னான்.

அவர் வாயைப் பார்த்தபடியே எல்லோரும் இருந்தோம். அவ்வழியாக லட்சுமிக்குட்டி வராமல் உள்ளே போய் விட்டாள். உள்ளே விழித்துக் கொண்ட முத்தையன்-அதாவது சுந்தரம் 'லட்சுமிக்குட்டி' என்று சொல்லும் வார்த்தை கேட்டது. அவன் துள்ளி ஓடும்போது மானின் நினைவு எனக்கு வந்தது.

"என்ன சொன்னாள் என் மகள் ?" என்றார் நாராயண மேனன்.

வாரியார் 'சொல்லுங்கள், வெற்றியா தோல்வியா?' என்று ஆவலைக் கொட்டினார். எங்கள் வார்த்தைகள் சரசர வெனப் பாய்ந்தும், பாண்டித்துரை சிரித்தபடியே இருந்தார். நடந்ததைச் சொல்லப் போகிறாரா, இல்லை கதைகட்டப்போகிறாரா? வாயைப் பார்த்தோம். வார்த்தைகள் மெதுவாக வந்தன.

(தொடரும்)

உலகப் பிரசித்திப்பெற்ற

டாடா - மெர்ஸிடிஸ் - பென்ஸ்

டீஸல் டிரக் - பஸ் சேஸிஸ்

உலகத்தின் முதலாவது டீஸல்

இன்ஜின்

ஜெர்மனி தேசத்தின் டெய்ம்லர்
பென்ஸ் தயாரிப்பு



மாடல் LP 312/48—5 டன்
"புல் பார்வார்ட்" கண்ட்ரோல் சேஸிஸ் 190" W. B.
பஸ் சொந்தக்காரர்களுக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும்
உகந்தது.

எல்லா மேக்குகளுக்கும் மாற்றி அமைக்க
தனி டீஸல் இன்ஜின்களும் கிடைக்கும்.
மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு
அதிகாரம்பெற்ற டீலர்ஸ்:

பாண்டியன்

ஆட்டோமோபைல்ஸ் பிரைவேட் லிமிடெட்,
5, ஸ்காட் ரோடு : : மதுரை.

வாழ்க்கை தெளிந்தது

— திருவிடைமருதூர் சேஷாத்திரி —

முதல் ஊர்வலம் சென்ற பொழுது அவன் ஒண்டிக்கட்டை, இரண்டாவது ஊர்வலத்தில் அவன் புது மாப்பிள்ளை, மூன்ருவது முறையிலே வாழ்க்கை புரிந்துவிட்ட 'குடும்பி'!

சுகமான பைரவி ராகம்—அழகு கொஞ்சும் வண்ணம் பாடிக் கொண்டு வந்தான் அந்த, நாதஸ்வரக்காரன். அவர்களைச் சுற்றிலும் அந்த ராகத்தின் பிரதிபலிப்பைக் காட்டுவது போல் ஒளிரும் 'கியாஸ்' விளக்குகள். கூட்டத்திலிருந்து கிளம்பிய மல்லிகையின் மணமும், அவற்றிற்குப் போட்டியாகத் தோன்றிய 'சென்ட்'களின் மணமும் பலரின் மனதைக் கவர்ந்திழுத்தன. நாதஸ்வர இசையால் இழுக்கப்பட்டு அவர்களைச் சுற்றிலும் ஒரு கூட்டம் நின்று கொண்டிருந்தது. அதை அடுத்து சில கெஜ தூரத்திற்கப்பால் ஊர்வலக் கார் ஒன்று நின்று கொண்டிருந்தது. அந்தக் காருக்குக் காவலாக ஒரே ஒரு 'கியாஸ்' விளக்கு மாத்திரம் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது. அந்தக் கார் ஏகாந்தமான பிரதேசத்தில் புதுத் தம்பதிகளுக்காகவே நிற்பதுபோல் தோன்றிற்று. அவர்கள் ஒருவரை ஒருவர் ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

அதற்குப் பின்னுல் பட்டுப் புடவைகள் 'சல, சல' க்க 'கல, கல' வென்று பெண்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்கென்று பிரத்தியேகமாக ஏதும் 'கியாஸ்' விளக்குகள் இல்லை. காரின் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த விளக்கின் வெளிச்சம் அக்கூட்டத்தில் மங்கலாக விழுந்ததைப் பார்த்தால், அந்தக் காருக்கும் அவர்களுக்கும் தொலை தூரம் என்று தோன்றிற்று. அவர்களின் தோடுகளும், டோலக்குகளும் மின்ன, பலவித மலர்களின் மணத்தை அள்ளித்தெளித்த வண்ணம் சுவாரஸ்யமான பேச்சுக் கச்சேரியில் ஈடுபட்டிருந்தார்கள்.

கல்யாணத்திற்குப் பெண்களை வைத்துக் கொண்டு தவிக்கும் பெற்றோர்கள், கல்யாண மார்க்கெட்டில் தங்கள் பிள்ளைகளுக்கு எவ்வளவு வரதட்சணை வாங்கலாம் என்று கனவு காணும் பெற்றோர்கள், இதையொன்றையும் லட்சியம் செய்யாது திருமணம் செய்து கொள்ளத் தயாராக நிற்கும் யுவ, யுவதிகள்—இவர்களின் மனதில் பலவித எண்ணங்களையும், கிளர்ச்சிகளையும் எழுப்பி விட்டுக் கொண்டு அவ்வூர்வலம் அத்தெரு வழியே போய்க் கொண்டிருந்தது.

இவ்வூர்வலங்களைப் பார்ப்பதில் தான், மக்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி! பாலர் முதல் விருத்தர் வரை தங்கள் மனதில் பலப் பல எண்ணங்களை ஓட விட்டுக் கொண்டு திருமண ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கிருர்கள்.

அப்படித்தான் அவ்வூர்வலத்தைப் பார்த்துக் கொண்டு நின்ருன் சந்துரு. இருபத்தேழு வயதைக் கடந்து நின்ற அவன் மனதில் தான் எத்தனை எண்ணங்கள் குமிழியிட்டுச் சென்றன!

'கம்' மென்று மல்லிகையின் மணம், விளக்குளின் ஒளி, இனிமையாகக் குழைந்து ஓடும் இசை, இவற்றில் யாருக்குத்தான் மனம்

பறிபோகாது? அதில் விளையும் இன்பம் மனதில் பொங்கி வழிகிறது. எல்லாம் அந்த இசையின் சக்தி தான். இசையும், மணமும் சேரும் போதுதான் அத்தகைய இன்பம் கிடைக்கிறது. வாலிப உள்ளங்கள் சீக்கிரத்தில் நெகிழ்வது இயற்கை.

இசையும், மணமும் அவன் எண்ணங்களை இழுத்துச் சென்றன.

அவன் வீட்டின் முன் அந்தக்கார் வந்து நின்றது. ஆவலுடன் அத் தம்பதிகளை நோக்கினான். மணப் பெண் குனிந்த தலையுடன், வெட் கம் கலந்த குறும்புப் புன்னகை ஒன் றை வீசியவாறு உட்கார்ந்திருந்தாள். அவள் தலையில் பூக்கூடையே இருந் தது எனலாம். மணப்பிள்ளை நல்ல அழகன். சுருள், சுருளான கிராப்பு. மேற்கத்திய பாணியில் உடை. அவளுடைய தலைப்பின்னலில் ஏதோ சேஷ்டை செய்து கொண்டு அவளைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தான்.

இதைக் கண்ட சந்துருவின் மனம் சிறகடித்துப் பறந்து, அங்கன் னை ஆவலுடன் எதிர் நோக்கியது. சற்றுக் கண்களை இடப் பக் கம் திருப்பினான்.

அங்கே பூமா நின்று கொண்டிருந் தாள்.

செந்தாமரை நிற முகத்தில் இலேசாகப் 'பவுடர்' ஒத்திக்கொண்டிருந்தது 'கியாஸ்' வெளிச்சத்தில் நன்கு தெரிந்தது. அவ்வெளிச்சத் தில் அவளுடைய அழகு பன்மடங்கு சோபித்தது. அவன் அவளுடைய முக அழகைப் பருகிக் கொண்டு நின்றான்.

'சட்' டென்று அவளும் அவனைப் பார்த்தாள். கலைந்த கிராப்பு அவனுடைய முன்னெற்றியில் அழகாகத் தொங்கிற்று. செந்நிறமில்லையானாலும் மாநிறம், முகத்தில் நல்ல களை.

அவள் இதழ்க் கடையில் ஒரு முறுவல் தோன்றி மறைந்தது. 'சட்' டென்று மறைத்து கொண்டாள்.

நாதஸ்வரக்காரன் பைரவியை முடித்து சங்கராபரணத்தைத் தொடங்கியவாறே நகர்ந்து கொண்டிருந்தான். அவ்வூர்வலமும் நகர்ந்து, அவ்விடத்தை வெறிச் சோடச் செய்தது

உள்ளம் என்னமோ சூன்யம் அடைந்தது போல் உணர்ந்தான். மணமாலையுடன் தம்பதிகள் அவனுடைய அகக்கண்களை விட்டு அகல வில்லை. மணப்பிள்ளைக்குப் பதில் அவன் மண மாலையுடன் உட்கார்ந் திருந்தான். அவனுக்குப் பக்கத் தில் பூமா, சந்தனக் குழம்பில் குங்குமத்தைக் கலந்த மாதிரி முகத்துடன், தலை குனிந்த வண்ணம் மலர் மாலையுடன் காட்சியளித்தாள். அகக் கண்களிலே தோன்றிய இவ்வாசை நடைபெறுமா என்று எண்ணினான். தூக்கத்திலும் அதே கனவு தான். ஒரு புறம் மணம் செய்து கொள்ள ஆசை—மற்றொரு புறம் வெளியில் சொல்ல வெட்கம்—இவ்விரண் டின் மத்தியில் நின்று தவித்துக் கொண்டிருந்தான் அவன்.

திரும்பவும் அவ்வூர்வலம் அவன் கண் முன் நின்றது. அது சென்றதும் அங்கே நிலவிய சூனியமும் தோன்றிற்று. 'இப்படித் தானே வாழ்க்கையும்?' என்று நினைத்தான். உலகில் எத்தனை மனிதர்கள் இல்லை. அவர்கள் வாழ்க்கை இப் படியா போய் விட்டது? இல்லையே?

திரும்ப, திரும்ப என்னென்னவோ கனவுகள்-ஆசைகள்-நினைவுகள். மனிதனுக்குத் தான் எத்தனை ஆசைகள்?

ஆபீஸில் அவனுடைய நண்பர்கள் வேறு அவனை கலாட்டாசெய்து கொண்டிருந்தார்கள்.

"என்ன மிஸ்டர், தை பிறந்து விட்டதே" என்பார்கள்.

"அதெல்லாம் நமக்குக் கட்டு படியாகாதைய்யோ" என்பான்.

உள்ளூர அவனுக்கும் ஆவல் தான்.

அன்று ஆபீஸ் விட்டதும் வீடு வந்து சேர்ந்த அவனுக்கு என்னவோ தந்தையும் தாயும் பேசிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது. கொஞ்சம் உற்றுக் கேட்டான்.

''எவ்வளவு செய்வா?''—இது அன்னே.

''ஐயாயிரம் வரை எதிர் பார்க்கலாம். ஆனு, அதெல்லாம் நமக்கென்னத்துக்கு? சந்துருவுக்கு பிடித்திருந்தால் சரிதான் தந்தையின் குரல்.

''ஆமாம். காலம்தான் மாறிப் போச்சு. எப்படியேனும் குழந்தைகள் சௌக்கியமாயிருந்தால் சரிதான்.''

அதற்குள் சந்துரு உள்ளே போய் விட்டான். அப்பேச்சு அத்துடன் முடிந்து போயிற்று. இரண்டு நாட்கள் கழித்து அவனைப் பெண் பார்க்கக்கூப்பிட்டார்கள். பூமாவைத் தான்; பார்த்தான்; சம்மதித்தான்.

★

ஊர்வலத்தின் போது இருவரும் அர்த்த புஷ்டியுடன் பார்த்துக் கொண்டனர்.

பக்கத்தில் அவன் மனதிற்குகந்தவள். எதிரில் இனிய நாதஸ்வர இசை. சுற்றிலும் சுகந்தமும், வெளிச்சமும் மெய் மறந்துதான் போனுன். அந்த உள்ள நிறைவு மூன்று நாட்கள் வரை அவனுடலிலேயும், உள்ளத்திலேயும் பரவியிருந்தது. அவன் வயிற்றைக் கூட நிரப்பி விட்டது

★

தனிக்குடித்தனம். ஆனந்தமான வாழ்க்கை. ஆபீஸ் வேலையை நினைத்தால் தான் அவனுக்கு வெறுப்பு ஏற்பட்டது. என்ன வேலே! என்ன ஆபீஸ்! பூமாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் ஏற்படும் ஆனந்தம் இதில் கிட்டுமா?

அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் சோறு? அந்த ஒன்றிற்காகத் தான் ஆபீஸ் [illegible] தொலைய வேண்டியிருக்கிறது. ஆபீ லா விட்டால் 'ஹாய்' யாக இருக்கலாம். என்ன செய்வது? பிழைப்பு இருக்கிறதே.

ஆபீஸ் போவதற்கே அவனுக்கு மனசு வராது. போக வேண்டுமே என்றுதான் போவான். திரும்பி வரும்போது கன குஷிதான். 'ஏர் சைகிள்' வசதியிருந்தால் பறந்தே வந்து விடுவான். கையில் தின்பண்டம், பூ, ரிப்பன், ரவிக்கைத் துணி—இப்படி ஏதாவது இல்லாமல் வீட்டிற்கு வரமாட்டான்.

மறு நாள் ஆபீஸ் போகும் வரை அவளைச் சுற்றித்தான் கும்மாளம் போடுவான். அவளுக்கு அதில் ஒரு பெருமை. அவளும் அவனுக்குச் சரியாகத்தான் கும்மாளம் போட்டாள்.

அவன் சட்டைக்கு பித்தான் முதற் கொண்டு போட்டுவிட்டு, கையில் டிபன், குடை எல்லாவற்றையும் திணித்து அவனை ஆபீஸுக்கு அனுப்புவாள். 'ஆபீஸ்' என்ற சூன்ய உணர்ச்சியுடன் போவான். அவன் நினைவு முழுவதும் பூமாவைச் சுற்றித்தான் இருக்கும். அவள் நின்ற பாணிகள், அவள் செய்த காரியங்கள் எல்லாம் அவன் மனதை நிரப்பிக் கொண்டிருக்கும். எதிரில் வருபவர்கள் கூட தெரியாமல் தான் போவான்.

ஒரு சமயம் எதிரில் ஒரு மாட்டு வண்டி வந்து கொண்டிருந்தது. அவன் அதைக் கவனிக்காமல் பூமாவை எண்ணிக் கொண்டு நடந்து கொண்டிருந்தான். வண்டிக்காரன் போட்ட சத்தம் பயனளிக்கவில்லை. அவன் வண்டியை ஒதுக்கி ஓட்ட இவன் வண்டியில் மோதிக் கொண்டான். நல்ல வேளை, வண்டிக்காரன் அனுபவசாலியாயிருந்ததால் சந்துரு பிழைத்தான். இல்லேயானல் அவன்பாடு ஆபத்தாக முடிந்திருக்கும். அவனுக்கு ஏக அவமானமாகப் போய்விட்டது. [illegible]மா தான் அவன் மனதை நிரப்பி[illegible]டிருந்தாள்.

17685

என்ன ஆனந்தமான வாழ்க்கை! இதுதான் வாழ்க்கையைப்பற்றிய அவனுடைய தற்போதைய கருத்து. வாழ்வே இன்பந்தான். உலகே இன்பம் தான்! என்று நினைத்தான்.

★

அன்று அவன் திரும்பிவந்த போது பூமா, அவனையும் லட்சியம் செய்யாமல் திரும்பி உட்கார்ந்து கொண்டு என்னவோ தையல் வேலை செய்து கொண்டிருந்தாள். மெதுவாகப் பூனைபோல் சென்று தான் வாங்கிய கதம்பத்தை அவள் தலையில் சொருகினான். அவள் சட்டென்று திரும்பிப் பார்த்தாள். அவன் அவளுடைய முகத்தை அவனுடன் சேர்த்துக் கொண்டான்.

'ஸ்' என்று உதட்டில் விரலை வைத்து எச்சரிக்கைசெய்தாள். எதற்காகச் செய்தாளோ அவளுக்கே தெரியாது.

இரவு எட்டு மணி இருக்கும் வாசலில் மேளச் சத்தம் கேட்டது. இருவரும் விழுந்தடித்துக்கொண்டு வாசலுக்கு ஓடினார்கள். திருமண ஊர்வலம் ஒன்று வந்து கொண்டிருந்தது. பிள்ளையும் பெண்ணையும் இருவரும் பார்த்தார்கள் இருவரும் தலையைத் தாழ்த்திக் கொண்டு நயன பாஷையில் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.



சந்துரு 'நறுக்' கென்று பக்கத்தில் நின்ற பூமாவைக் கிள்ளிவிட்டான். பதிலுக்கு பூமாவும் நறுக்கென்று கிள்ளினாள்.

ஊர்வலம் போய்விட்டது.

இருவரும் உள்ளே வந்தார்கள். சந்துரு பூமா கிள்ளிய இடத்தைத், தடவி விட்டுக் கொண்டான். அதைப் பார்த்துக் கொண்டிருந்த அவள் "நன்னா வேணும். ஊர்வலத்தின்போது என்னைக் கிள்ளினேளோன்னோ சேர்த்து வட்டியும் முதலுமா வாங்கிண்டேளா..." என்றாள்.

அதற்குள் அவன் கையிலிருந்து இரத்தம் வருவதைப் பார்த்து விட்டாள். ஓடிச் சென்று அவ்விடத்தைத் துடைத்து டிஞ்சர்போட்டாள். அதற்குள் தான் அவள் எவ்வளவு துடித்துப் போய்விட்டாள்!

"என் பூமா கிள்ளின இடம் எனக்கு வலிக்குமா? என்ன? இந்தமாதிரி எவ்வளவு வேணுமானாலும் கிள்ளு வாங்கலாமே" என்றான் சந்துரு அசடுவழிய.

"உம்...பேசுவேள்...பேச மாட்டேளோ?" என்றாள் குறும்புச் சிரிப்புடன்.

"இத்தனை நாளில்லாமல் என்ன இப்போது நினைத்துக் கொண்டாய் திருப்பிக் கொடுக்க?"

"இன்றைக்குத் தான் ஞாபகம் வந்தது. சந்தர்ப்பமும் கிடைத்தது."

★

பூமா குழந்தையுடன் உலாவ ஆரம்பித்தாள். இப்போது குழந்தை அவளுடைய உலகமாயிற்று. அவனுக்கும் குழந்தைதான் இப்போது உலகம்.

அவள் தாய்மை உணர்ச்சியின் பூரிப்பிலே அக்குழந்தையை நேசித்தாள். அவனோ தன் குழந்தை என்ற உணர்ச்சியுடன் நேசித்தான்.

என்னவோ ஓர் உணர்ச்சி இப்போது அவனை ஆபீஸுக்கு உந்தித் தள்ளியது. சூன்ய உணர்ச்சி மறைந்து கடமையுணர்ச்சி தலை தூக்கி நின்றது. தந்தை என்று கடமையில் தான் நிறைந்த அளவு சம்பாதிக்கவேண்டும் என்று தோன்றிற்று அவனுக்கு.

பூமாவிடம் ஏதோ கவர்ச்சி குன்றினாற்போல் தோன்றிற்று அவனுக்கு. இந்நாள் வரை இருந்த அவளுடைய தோற்றத்திற்கும், இப்போதைய அவளுடைய தோற்றத்



திற்கும் நிறைந்த வித்தியாசம் இருப்பது போல் தோன்றிற்று. இப்போதெல்லாம் அவள் அவனை அதிகமாக கவனிக்கவில்லைபோல் உணர்ந்தான். இப்போது அவளுடைய உலகம் குழந்தையைச் சுற்றி நின்றது. அதே சமயத்தில் கணவனிடத்தில் ஏதோ கவர்ச்சி குறைந்து ஏதோ புதிய தோற்றத்தில் காட்சி அளிப்பதாகத் தோன்றிற்று அவளுக்கு.

ஏதோ தெளிவு ஏற்பட்டதுபோல் இருவருமே உணர்ந்தார்கள்.

அன்று சந்துருவுக்கு என்னவோ ஆபீஸுக்கு அவசரம். அவசரமாக எங்கேயோ போய் விட்டு வந்ததும், ஏதோ சாப்பிட்டு விட்டு ஆபீஸுக்குக் கிளம்பலாம் என்று வந்தவன் அப்போது தான் சாவகாசமாகக் குழந்தையைக் குளிப்பாட்டிக் கொண்டிருக்கும் பூமாவைப் பார்த்தான்.

முன்னிருந்தவளா இவள்!

"பூமா, நாழியாய் விட்டதே, தெரியவில்லையா?"

"இல்லை, சற்று இருங்கள், இதோ"

"அவசரமாகப் போகவேண்டும்.

"சற்றுப் பொறுங்களேன்..."

கடிகாரம் அலறி அடித்துக் கொண்டு ஓடிற்று. அவனுக்கோ பரபரப்பு. அவளும் பரபரப்பாகத் தான் வேலை செய்தாள். அந்த பரபரப்பில் தாறுமாருக காரியங்களைச் செய்தாள்.

அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது.

"ஏய், சொல்லறது காதிலே விழல்லே? நாழியாயிடுத்து... சரி, சரி... உன்னை நம்பி இனிப் பயன் படாது..."

அவள் வருவதற்குள் அவன் அவசரமாகப் போய்விட்டான்.

'சொரே' ரென்று அவளுக்கு; முதலடி—முதற்போர். சமயத்தில் உதவி செய்யாததற்காக தன்னைத் தானே நொந்து கொண்டாள்.

அதற்குப் பிறகு அவள் குழந்தையை ஏனோ, தானோ என்றுதான் கவனித்தாள். அவன் கோபமாக ஆபீஸுக்குச் சென்றது அவளை உறுத்திற்று.

எவ்வளவு மதியீனமாக நடந்து கொண்டு விட்டாள் அவள்!

சிறிது, சிறிதாக அவளுடைய குற்றம் பெரிதாக தோன்றிற்று அவளுக்கு.

'அவர்' தான் சற்று இருந்து சாப்பிட்டு விட்டுப் போகக் கூடாதா? ஆனல், அவளுக்கென்னவோ அவசரம் இன்றைக்கு. 'என்ன பெண் நான்' என்று நினைத்தாள். என்னவோ அவள் மனதில் உற்சாகம் குறைந்து விட்டது. ஒரு சோர்வு உடலெல்லாம் பரவிற்று. அன்றைய தினம் காரியங்களெல்லாம் சரிவர ஓட வில்லை அவளுக்கு.

இன்று தனிமையை அதிகமாக விரும்பினுள். முதலில் பார்த்த மண ஊர்வலம், அதன்பின் நடந்தது, அதன்பின் பார்த்தது எல்லாம் அவள் மனக்கண் முன் நின்றது. அவ்வப்போது தோன்றிய உணர்ச்சிகளை நினைத்துப் பார்த்தாள். அவருடன் நடத்திய உல்லாசமான வாழ்க்கையை நினைத்துப் பார்த்தாள். இன்றைக்கு நடந்ததை நினைத்துப் பார்த்த போது மனதில் வேதனை நிரம்பி நின்றது. கணவன் சாப்பிடவில்லையே என்ற ஏக்கம் அவளை வதைத்தது. அவளுக்கு அன்று சாப்பிடவே பிடிக்க வில்லை. சோர்வின் காரணமாக நடுப் பகலில் நன்கு உறங்கினுள். எழுந்திருந்ததும் சற்று உற்சாகமாக இருந்தது போல் தோன்றிற்று.

சாப்பாட்டை யாரிடமாவது கொடுத்தனுப்பியிருக்கலாம் என்று நினைத்தாள். 'யாரிடம் கொடுத்தனுப்புவது?' என்னென்னவோ நினைத்துப் பார்த்தாள். நெஞ்சில் சூன்யம் படர்ந்திருந்தது.

அவனுக்காக-மத்யானம் டிபன் செய்தாள். இதையாவது மனதார சாப்பிடட்டும் என்று நினைத்தாள்.

அன்று அவன் திரும்பும் போது நிரம்ப நாழியாகிவிட்டது. இரவு எட்டு மணிக்குத் தான் வந்தான்.

வாசலில் நின்று, நின்று அவளுக் குக் கால் கடுத்து விட்டது.

கண்களில் ஏக்கம் பிரதி பலித் தது. இரவு எட்டுமணிக்கு அவன் திரும்பினன். தூரத்தே அவனைப் பார்த்தாள். அவள் கண்களில் நீர் முட்டியிருந்தது. சமையலறையில் ஏதோ மும்மரமான காரியத்தில் ஈடுபட்டிருப்பது போல் காட்டிக் கொண்டாள்.

வாசலில் அவள் இல்லாதது சந்து ருவுக்கு என்னவோ போலிருந்தது. உள்ளே சென்ருன். கூடத்தில் அவள் பிரசன்னமாகவில்லை. அவசரம், அவசரமாக உள்ளே சென்று பார்த்தான். உள்ளே இருந்த நிலமை அவனை திக் பிரமை யடையச் செய்தது.

"பூமா, இன்னும் சாப்பிட வில்லை?"

"..........."

அவள் வேண்டுமென்றே காரி யங்களில் ஈடுபட்டிருப்பது அவன் கண்களுக்கு நன்கு புலப்பட்டது.

"பூமா ......"

அவள் தலை நிமிர்ந்தாள், கண் களில் நீர் நிரம்பியிருந்தது.

"என்ன பூமா ?......

அவள் அருகில் சென்று ஆதர வுடன் அணைத்தான். அவன் மார் பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு 'விம்மி விம்மி' அழுதாள். நாள் முழுவதும் அடக்கி வைக்கப் பட்டிருந்த துக்கம் இப்போது பீறிட் டெழுந்தது.

"பைத்தியம், எதற்காக அழு கிருய் ? ஏதோ அவசரமாக நான் போய்விட்டேன். அதற்காக சாப் பிடாமல் கூட இருப்பாளா? உட் காரு, நான் போடுகிறேன்" என் ருன்.

துக்கத்திலும் அவளுக்கு வெட் கம் வந்தது.

"நீங்க முதல்லே சாப்பி டுங்கோ..."

"நீ சாப்பிடு. நான் ஹோட்டல்லே நன்ன தின்னுப்புட்டேன்..."

"நீங்க ஒரு தரம் சாப்பிடுங் கோன்ன..."

அவன் சாப்பிட்டான். அவ ளுக்கு ஒரு நிறைவு.

சாப்பிட்டு விட்டு அவனுக்கு வெற் றிலை மடித்துக் கொடுத்தாள்.

"பூமா, இங்கே வாயேன்..."

அருகில் வந்தாள்.

"நீ இனிமே, இந்த மாதிரி இருக் கப் படாது"

'ஏன்? என்ன?' என்பது போல அவனைப் பார்த்தாள் அவள்

"சின்ன விஷயத்துக் கெல்லாம் மனசை அலட்டிக்கப் படாது."

அவளை இழுத்து காதோடு காதாக 'இது வரை மயக்கம். இனி தான் வாழ்க்கை' என ருன்.

வாசலில் மேளச் சத்தம் கேட்டது. இருவரும் விழுந்தடித்துக் கொண்டு ஓடினர்கள். ஏதோ ஒரு தெளி வுடன் இப்போது அவ்வூர் வலத்தைப் பார்த்தார்கள்.

Phone: 713 Tel. ANANDJOTHI

சிற்றுண்டிகளுக்குச்சிறந்த இடம்.

ஜோதீ

ஆனந்த பவான்

காபி ஓட்டல் & போர்டிங் ஹவுஸ்

கீழமாசி வீதி, மதுரை.

N.B.—ஜோதி ஆனந்தா காபி ஒர்க்ஸ் காபி பவுடரையே உபயோகியுங்கள்.

த. பெ. நெ. 297

S. சந்தோச நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

83-85, குமாரவீதி :: கொழும்பு-11.

அலுமினிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், எனுமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகார வகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத் திரவியங்கள், பவுண்டன் பேனு, சிலேட் பென்சில் வகைகள், ஷாப்பு சாமான்கள், மற்றும் உணவு சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விலை சகாயமாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிராஞ்சு:

போன்: 333

19, கொட்மலே ரோடு,

நாவலப்பிட்டிய.

ஏஜன்ட்ஸ்:

போன்: 3262 த. பெ. நெ. 2345

S. சந்தோஷ நாடார் & சன்

1/4. ஈவனிங் பஜார் :: :: P. T. மதராஸ்.

&

37, ஹைரோடு,

திருநெல்வேலி ஜங்ஷன்.

சிறுவர் பகுதி

கல்லடிக்குக்காசுகள்!

- தெ. சண்முகசுந்தர பாண்டியன் -

ஏழைக்கு இரங்குவார் யார்? பாவம்! முத்துவும் நான்கு நாட்கள் பட்டினி கிடந்து விட்டான். ஆனபோதிலும் அவன் அதைப் பற்றி கொஞ்சம் கூடக் கவலைகொள்ளவில்லை. அவனுடைய கவலை யெல்லாம் தன் தாய் விரைவிலேயே குண மடைந்து எழுந்திருக்க வேண் டும் என்பதிலேதான்.

முத்துவுக்கு இருந்த ஒரே ஆதரவு அவனது தாய் தான். அவளுக்கு அம்மை நோய் கண் டிருந்தது. நான்கு நாட்களாகக் கண் விழிக்காமல் படுத்த படுக் கையாகக் கிடந்தாள். வீட்டில் சமையல் செய்வதற்கு வேறு யாரும் இல்லை; கையில் காசும் கிடையாது; கொடுத்து உதவு வாரும் யாரும் இல்லை. என்ன செய்வான் முத்து?

பக்கத்துத் தெரு பாட்டிதான் அடிக்கடி வந்து பார்த்து விட் டுப் போவாள். அவள் முத்து வைக் கூப்பிட்டு, எப்படியாவது நான்கு அல்லது ஐந்து இளநீர்க் காய்கள் கொண்டுவர வேண்டு மென்றும், அம்மை நோய்க்கு இளநீர்தான் மருந்து என்றும், வேறு எதுவுமே சாப்பிடக் கூடாது என்றும் சொல்லி விட் டாள். "இளநீர் சாப்பிட்டால் உடனே உன் தாய் குண மடைந்து எழுந்து விடுவாள்" என்ற அந்தக் கிழவியின் வார்த்தை, முத்துவுக்கு எவ்வ ளவோ ஆறுதல் அளித்தது.

ஆனால் இளநீர்க்காய்கள் வாங்க காசு வேண்டுமே? கடைத் தெருவில் வண்டி வண் டியாக இளநீர்க் காய்களைக் குவித்துத்தான் வைத்திருக் கிறார்கள்! காசில்லாமல் யாரா வது கொடுப்பார்களா?

முத்து தனக்குத் தெரிந்தவர் கள், அக்கம் பக்கத்தார், பணக் காரர்கள் அனைவரையும் அணு கிக் காசு கேட்டுப் பார்த்தான். யாரும் கொடுக்க முன்வர வில்லை. அந்தப் பிஞ்சு மனம் நைந்து நொந்துபோய்ச்சோர்ந்து விட்டது. வீட்டின் ஒரு மூலை யில் வந்து உட்கார்ந்து விட் டான்.

திடீரென்று ஒரு எண்ணம் உதயமாயிற்று. ஊர்ப்புறத்தி லுள்ள தென்னந் தோப்பு நினை வுக்கு வந்தது. எழுந்து நடந் தான். வழியில் கிடந்த—கைக்கு அடக்கமான—கற்கள் நான்கை எடுத்து வைத்துக்கொண்டான். தோப்பு வேலியைத் தாண்டி உள்ளே புகுந்தான். குலை குலை யாகத் தொங்கிக் கொண்டிருந்த இளைநீர்க் காய்களைக் குறி பார்த்து ஒரு கல் எறிந்தான். அடிபட்டு குலை அசைந்தது; காய் விழவில்லை. இரண்டாவது கல்லிலும் ஒன்றுகூட விழ வில்லை. மூன்றாவது கல் எறிந் தான். இரண்டு காய்கள் விழுந் தன; எடுப்பதற்காக விரைந் தான். அதற்குள்......?

"யாரடா அவன், கல் எறிந்தது?'' என்றொரு குரல்

வந்தது. தோப்பு காவல்காரன் தான் அவ்வாறு கர்ஜித்தான். முத்து அவனைப் பார்த்து விட்டான்.

தென்னை மரத்தில் எறிந்த கல், தோப்பின் மற்றொரு பக்கத்தில் நின்று கொண்டிருந்த தோப்பு சொந்தக்காரரின் தலையில் விழுந்து காயமேற்படுத்திவிட்டது. அதனால் தான் காவலாளி பலத்த கர்ஜனையுடன், கல்லெறிந்தவனைத் தேடி தோப்புக்குள் இங்கு மங்குமாக அலைந்தான். முத்துவும் அவன் கண்ணில் படாதபடி ஓடியோடி ஒளிந்தான். ஓரிடத்தில் தென்னை மட்டைகள் குவித்து வைக்கப்பட்டிருந்தன. அந்தக் குவியலுக்குப் பின்புறத்தில் போய் ஒளிந்துக் கொண்டான் முத்து,

அங்குமிங்கும் தேடியலைந்த காவல்காரன் தென்னை மட்டை குவியல் பக்கமும் வந்துவிட்டான். அவனை முத்து கவனிக்கவில்லை. பின்புறமாக வந்து அவனை "லபக்" கென்று பிடித்து விட்டான். அப்போது முத்துவின் கையில் நாலாவது கல் இருந்தது. கல்லெறிந்தவன் அவன் தான் என்று சாட்சி கூறியது அந்தக்கல். எஜமானரின் முன் இழுத்துச் சென்றான் காவல்காரன். 'என்ன செய்வாரோ' என்ற பயம் தான் முத்துவுக்கு; இருந்த போதிலும் அஞ்சாதவன் போல் நிமிர்ந்தே நின்றான்.

"ஏன் தம்பி, என்னைக் கல்லால் அடித்தாய்?" என்று சாந்தமாகத்தான் கேட்டார் எஜமானர்.

"தென்னை மரத்திலேதான் கல்லெறிந்தேன்......" என்று பதிலளித்தான் முத்து.

"எதற்காக எறிந்தாய்..."

"என் தாயாருக்கு அம்மை கண்டிருக்கிறது. அதற்கு இளநீர்க்காய்கள் வேண்டுமாம்..."

"வேண்டுமானால் கடைத் தெருவிற்கல்லவா போய் வாங்கிவர வேண்டும்" என்று இடையிலே புகுந்து பேசினான் காவல்காரன்

"கடைத் தெருவில் போய் வாங்கிவர என்னிடம் காசு இல்லை" என்று உடனே பதிலளித்தான் முத்து.

"அதற்கு......" என்று இழுத்தான் காவல்காரன்.

"அதற்குத்தான் இங்கே வந்தேன்" என்று முடித்தான் முத்து.

அதற்கு மேல் 'பேச வேண்டாம்' என்று சைகை காட்டி காவல்காரனைத் தடுத்து விட்டார் எஜமானர்.

"எஜமான்! இந்தச் சுட்டிப் பயலைக் கட்டிவைத்துதான் உதைக்க வேண்டும்" என்று கூறி விட்டுத்தான் நகர்ந்தான் காவல்காரன்.

முத்துவையே உற்றுப் பார்த்தார் எஜமானர். அவரை எதிர்த்துப் பார்க்க முத்துவால் முடியவில்லை. தலை குனிந்தே நின்றான். சிறிது நேரம் அமைதி நிலவியது.

கல்லடியில் கீழே விழுந்திருந்த இளநீர்க் காய்களை எடுத்து வந்து எஜமானரின் காலடியில் வைத்தான் காவல்காரன். முத்துவுக்கு கடுமையான தண்டனை வாங்கிக்

கொடுக்க வேண்டு மென்பது அவனுடைய அவா.

எஜமானர் திடீரென்று மணி பர்சை திறந்தார். ஐந்து வெள்ளி ஒரு ரூபாய் நாணயங்களை எடுத்து முத்துவின் முன்பாக நீட்டினார். அவன் தயங்கினான். பணத்தை வாங்கிக் கொள்ளும் படி வற்புறுத்தினார். ஆச்சரியத்தோடு நடுங்கிக் கொண்டே பணத்தைப் பெற்றுக் கொண்டான். அந்த இரண்டு காய்களையும் எடுத்துக் கொள்ளும் படி கூறினார். தயக்கத்தோடே அவற்றையும் எடுத்துக் கொண்டான்.

" போய்வா தம்பி! உன் தாயாரை நன்றாக கவனித்துக் கொள் " என்றார்.

அவன் திகைத்தான்.

" உம்! போய் வா தம்பி!" என்றார் மீண்டும்.

மெதுவாக நடந்தான். தோப்பின் எல்லையைத் தாண்டிச் சென்று மறைந்தான். இதெல்லாம் காவல்காரனுக்கு பெருத்த ஆச்சரியத்தை உண்டு பண்ணிவிட்டது

" கல்லால் அடித்தவனுக்குக் காசுங் கொடுத்தனுப்பி விட்டீர்களே?" என்று வியப்புடன் கேட்டான்.

" கேவலம், இந்தத் தென்னை மரம் கல்லடிக்குக் கைமாறாக அந்தச் சிறுவனுக்கு இரண்டு காய்களைக் கொடுத்திருக்கும் போது, நான், நான்பட்ட கல்லடிக்கு என்னிடமிருந்த காசுகளில் சிலவற்றைக் கொடுத்தது, தவறா?" என்றார்

காவலாளியின் இதயம் கொஞ்சம் விரிந்து கொடுத்தது.

" தீமை செய்தவனுக்கு தீமையேதான் திருப்பிச் செய்ய வேண்டுமென்ற மனப்பான்மை மனித வர்க்கத்தில் தான் இன்னமும் வாழ்ந்து வளர்ந்தும் வருகிறதப்பா " என்று கூறி ஒரு மூச்சுவிட்டார் அந்தப் பெரியார்.

காவலாளி 'மௌனி' ஆனான்.

சிறுவன் முத்து இளநீர்க்காய்களை வெட்டி தன் தாய்க்கு ஊட்டினான். அவள் குணமடைந்து எழ வேறு என்ன மருந்து வேண்டும்?

கல்லடிக்குக் காய்கள் உதிர்த்த தென்னை போல், கல்லடிக்குக் காசுகள் உதிர்த்த அச்செம்மலின் உருவம் சிறுவன் முத்துவின் மனத்திரையில் மறையாத உயிரோவியமாய் படிந்து விட்டது. வித்தொன்றிட விளைவ தொன்றாமோ?

பிற்காலத்தில் சிறுவன் முத்து அந்தப் பெரியவரைப்போலவே ஆனான்.

பாண்டியன் லாட்ஜ்

பெஸ்ட் பிரியாணி சாப்பாடு ஹோட்டல்

8, வெங்கலக்கடை தெரு,

மதுரை.

N. B: கோழிப் பிரியாணி, கோழிச் சாப்ஸ்,

புருச் சாப்ஸ்

தினசரி கிடைக்கும்.

திங்கள், சனிக்கிழமைகளில் வான்கோழிப் பிரியாணி, வான் கோழிச் சாப்ஸ் கிடைக்கும்

Prop- P.K.S.S.

தீ பாலராமவர்மா
டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்.,

செங்கோட்டை.

தற்சமயம் உள்ள கதிர்கள்: 14,384

மேற்கொண்டு நிர்மாணிக்கும்
கதிர்கள்: 3,472

கைத்தறித் தொழிலின் மகோன்னத வளர்ச்சி
உயர்ந்த ரக நூலையும், மிக நேர்த்தியான
துணியையும் பொறுத்திருக்கிறது.
எங்கள் ஆலை மிக நேர்த்தியான
உயர்ரக நூல்களை
விநியோகிக்கிறது.

மானேஜிங் ஏஜண்டுகள்:

மெஸர்ஸ் கரையாளர் &
ரங்கசாமிநாயுடு ஸன்ஸ்கம்பெனி

காதல் வினாத்தாள்!

இறைவன்

[உலகம் ஒரேயடியாக மாறிக் கொண்டிருக்கிறது. கலியுகம், 'காதல் யுக'மாக மாறிக்கொண்டிருக்கிறது. காதலன்-காதலிகளும் வரவரப் பெருத்துக்கொண்டே (?) வருகிறார்கள். எங்கு திரும்பினாலும் காதல், காதல், காதல்!...... 'திருமகளூர் காதலர் சங்க'த்தின் சார்பில், அதன் தலைவர் ஸ்ரீ...... ஒரு வினாத்தாள் தயாரித்தார். ஏராளமான அன்பர்கள் (காதலர்கள்) பரீட்சைக்கு ஆஜரானார்கள். அந்த வினாத்தாளே கீழே கொடுக்கப்படுகிறது!]

குறிப்பு :- முழு வருடப் பரீட்சை முடிந்து, சும்மா இருந்த சில கல்லூரி மாணவர்களும் இதில் பங்கெடுத்துக் கொண்டுள்ளனர். மாணவிகள் கலந்து கொள்ளாத காரணம், சங்கம், 'காதலர் சங்கம்' என்பதேயாகும்!

* * *

தமிழ்

I. 1. உனக்கு மாமன் மகள் உண்டா? உண்டானால் பெயரென்ன? உன் வரவை எதிர்நோக்கி, அவள் காத்துக் கிடந்தாளா?

2. காலேஜ் பெண்ணொருத்தியைக் காதலிப்பதாக, உன் மாமன் மகளிடம் சொன்னபோது, அவள் என்ன கூறிப் புலம்பினாள்? கம்பராமாயணப் பாடல் எவற்றுடனாவது ஒப்பிடுக.

3. விடுமுறையில் ஊருக்குச் சென்றபோது, 'காலேஜ் காதலி'யிடம் எப்படி விடை பெற்றுக் கொண்டாய்? 'ஐயகோ, என் மன்னா, உம்மை நான் பிரிந்து வாழ்வது எங்ஙனம்?' என்று, காதலி உன் மார்பில் வீழ்ந்து புரண்டு அழுதாளா? அப்படி அழவில்லை எனில் காரணங்கூறு.

4. விடுமுறையில் எத்தனை பெண்களை காதலிக்க முயன்றாய்? எவ்வளவு கைகூடின? (தோராயமாக மதிப்பிட்டுச் சொல்லவும்)

5. யாரையும் காதலிக்கவில்லை என்றால், ஏன் காதலிக்கவில்லை? என்பதற்குக் காரணம் கூறு. 'வசிய லேகியம்' ஏதேனும் சாப்பிட்டு, தகுந்த ஏற்பாடுகள் செய்துகொள்ள முடியாதா? என்பதையும் விரிவாகக் குறிப்பிடு.

II. பொருள் தருக:

கண்ணே, மணியே, கட்டிக் கரும்பே!
விண்ணே, பண்ணே, விந்தைப் பெண்ணே!
பண்ணே, பாவையே, பணிந்தேன் உன்னை!
தண்ணென் உடலாலே, தாங்குதி என்னையே!

III. இடஞ் சுட்டிப் பொருள் விளக்கு:

1. "ரகு, நீயுமா அவளைக் காதலிக்கிறாய்?"

2. "என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் காதலை ஏற்றுக் கொள்ள முடியாதவளாக இருக்கிறேன். எனக்காக என் அத்தான் காத்துக் கொண்டிருக்கிறார்."

3. "இன்னொரு தரம் அவளை அப்படி முழிச்சுப் பார்த்தே, அவ்வளவுதான், அப்புறம் முழி இரண்டும் உன் கண்ணுலே தக்காது, ஆமாம்!"

4. "மாமா, அக்கா உங்ககிட்டே இந்தக் கடுதாசைக் குடுத்துட்டு வரச் சொன்னா!"

IV. பொருத்துக:

1. சுகுணா 1. கதலி
2 பௌர்ணமி 2. முறிந்த காதல்
3. அமாவாசை 3. காதலி
4. 'அன்லக்கி' 4. "கண்ணே, அதோ வானத்தில் பார்!"
5. வாழைப்பழம் 5. சோக இரவு

கணக்கு

1. உனக்கு 22 வயதாக இருக்கும் போது, உன் காதலிக்கு 18 வயது. உனக்கு 44 ஆனால், உன் காதலிக்கு எவ்வளவு? (ஓர் எண் சுத்தமாகச் சொல்லவும்.)

2. 22-ஆம் வயதில் கல்யாணம் செய்து கொண்ட ஒருவனுக்கு, 26 வயதிற்குள் மூன்று குழந்தைகள் பிறந்தன வென்றால், அவனது நாற்பதாவது வயதிற்குள் எத்தனை குழந்தைகள் பிறக்கும்? 'கூட்டு வட்டி' சூத்திரத்தைப் பயன்படுத்திக் கண்டு பிடி. அத்துடன், அவனது 29, 34, இரண்டு வருடங்களிலும் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன வென்றால் மொத்தம் எத்தனை?

3. 1954-ஆம் வருடம் மார்ச்சு மாதம் 24-ஆம் தேதி சாயந்திரம் 5-45க்கு, 'வாஸந்தி'யைக் கண்டு நீ காதல் கொண்டாய் என்று வைத்துக் கொள். 1957 டிசம்பர் 29-ம் தேதி காலை 8-30 மணியளவில் உன் காதல் முறிந்தது. (அதாவது அந்தக் காதலிக்கு வேறொருவன் 'முடி' போட்டுவிட்டான்) அப்படியானால், இது வரை காதலித்து எத்தனை மணி ஆகியிருக்கிறது? அத்துடன், 'காதல் பேச்சு × இன்பக் கனவு ÷ விதி = வேண்டாத முடிவு' என்ற இந்த 'சூத்திரத்தை' ஒழிப்பது எங்ஙனம் என்பதையும் கூறு. (இங்கு வாஸந்தி என்று குறிப்பிட்டிருப்பது உதாரணத்துக்காகத்தான். அப்படி, 'வாஸந்தி' யென்ற பெண்ணைக் காதலிப்பவர்களின் காதல் முறிந்துவிட வேண்டு மென்பது எங்கள் விருப்பமல்ல!)

4. ஓர் ஊரில் ஜனத்தொகை 4,800. அதில் 30% ஆண்கள். மீதி பெண்கள். ஆண்களில் 20% காதலர்கள். பெண்களில் 25% காதலிகள். மொத்த ஜனத்தொகையில் காதலன்—காதலி சதவிகிதம் என்ன?

5. உன்னைக் காணாவிடில், உன் காதலி எத்தனை தரம் பெருமூச்சு விடுவாள்? எத்தனை தரம் இதயம் கிடந்து 'அடித்து'க் கொள்ளும்? எது அதிகம்? 806 தரம் பெருமூச்சு விட்டவளுக்கு 103 தரம் இதயம் கிடந்து 'அடித்து'க் கொண்டால் அவளுக்கு என்ன கோளாறு? பெருமூச்சு + இதயத் துடிப்பு ÷ காதலன் வருகை = 3 என்றால், 'காதலன் வருகை' எவ்வளவு?

6. உன் உயரம் 7'. உன் காதலியின் உயரம் 3½'. நீ அவளுடன் குனிந்து பேசும்போது எத்தனை டிகிரி கழுத்தை வளைக்க வேண்டும்? அவள் 28° யில் நிமிர்ந்து பார்த்தால், அது என்ன கோணம்? படம் வரைந்து காட்டு.

7. 'A' என்னும் நீ, 'B' என்னும் ஒரு பெண்ணை, உன்னிடமிருந்து 20 கஜ தூரத்தில் பார்க்கிறாய். 'C' என்னும் ஒருவன் அவளையே 16 கஜ தூரத்திலிருந்து பார்க்கிறான். உன் விழிக்கோணம் 48° கனிவாகவும், அவள் விழிக் கோணம் 44° கனிவாகவும் இருந்தால் அவள் யாருக்குக் கிடைப்பாள்? 36° காதல்பொங்கப் பார்க்கும் 'D' என்னும் ஒருவனுக்கும் அவள் கிடைக்கவில்லையென்றால், அவளிடமிருந்து எவ்வளவு தூரத்தில் நின்று, அந்த 'D' பார்த்திருக்க வேண்டும்? படம் வரைக. (ஸ்கேல்: 1" = 5 கஜம்)

விஞ்ஞானம்

1. கிராமத்து பெண்ணொருத்தி உன்னைக் காதலிக்கிறாள் அல்லது காதலிக்கவில்லை என்பதை எவ்வாறு கண்டுபிடிப்பாய்? பரிசோதனை என்ன?

2. 'தலைப் பின்னலை' முன்பக்கம் போட்டுக் கொண்டு, நகத்தை

பற்களால் கடித்தால் 'காதல்' என்கிருர்களே, இது உண்மையா? எப்படி நிரூபிப்பாய்? ரொம்ப ரொம்பப் பழசாகிவிட்ட இந்த 'லவ்ஸ்லா'வைத் தற்காலக் காதலர்கள் ஒப்புக் கொள்வார்களா?

3. "பூமி × கால் கட்டை விரல் நகம் = காதல்" என்ற 'திருவள்ளுவர் விதி'யை நிறைவேற்றுவதெங்ஙனம்? படம் வரைந்து விளக்கு.

4. நீ காதலிக்கும் ஒருத்திக்கு உன்னைப் பிடிக்கவில்லையென்ருல், அதை பின் வரும் எவற்றுடன் ஒப்பிடலாம்?

1. கொதிக்கும் சுண்ணும்பு நீர் 2. கார்பன்-டை-ஆக்சைடு 3. ஹைடிரோ குளோரிக் அமிலம். 4. அமெரிக்காவில் ரஷ்யச் சந்திரன்.

5. வாசலில் யாராவது போனல், முடிந்த மட்டும் கழுத்தை நீட்டி, ஜன்னல் வழியாகப் பார்த்து பலர் ரஸிக்கிருர்களே, அதற்கும், 'ஹூக்ஸ் லா'வின் 'மின்சக்தி'க்கும் என்ன சம்பந்தம்? மின் சக்தியின் விதிப்படி, ஒரு குறிப்பிட்ட அளவு நீண்டு விட்ட கழுத்தை, அதற்கு மேலும் நீட்டிப் பார்த்து, அதைச் சுருக்கிக் கொள்ள முடியவில்லையெனில், உன் கழுத்தின் 'கதி' என்ன? திடீரென்று 'அப்பா—அம்மா' யாராவது வந்து விட்டால், நத்தை மாதிரி தானுகக் கழுத்துச் சுருங்குகிறதே, அது அனிச்சைச் செயலா?

6. வட்டமான பெண்ணின் முகம் ஒன்று வரைந்து, அதில் கீழ்க் கண்ட பாவனைகளைக் குறிப்பிடு:

"கண்ணே!"

"ஹூக்கும், எப்போதும் பரிகாசம்தான்!"

"என்ன சொன்னீர்கள்!?"

"ஐயோ, உன்னை விட்டு எப்படிப் பிரிவேன்?"

"அத்தான், வாருங்கள்!"

"வானத்தில் பார்த்தாயா, வெண்ணிலவை"

சமூகம்

1. 'காதல்பாடி' என்னும் ஊர் எங்கிருக்கிறது? அந்த ஊரின் விசேஷம் என்ன?

2. கொடைக்கானலின் குளிர்ச்சிக்கும், காதலியின் கடைக் கண் குளிர்ச்சிக்கும் ஒப்பிடலாமா? ஒப்பிடலாமெனில் அவை பற்றி குறிப்புகள் வரைக. இரண்டும் சரிசமமாக இருக்கவேண்டுமெனில், கொடைக்கானல் இன்னும் எவ்வளவு உயரத்தில் இருக்கவேண்டும் என்பதையும் கண்டுபிடி.

3. பதினேழு தடவை முயன்று, பதினெட்டாவது தடவையில் தான் உனக்குக் காதல் 'முளைத்தது' என்ருல், அதைப் பின்வரும் எவருடன் ஒப்பிடலாம்?

1. ரஷ்யா 2. அலாவுதீன் 3. கஜினி முகம்மது 4. கோரி மகம்மது 5. அக்பர்.

4. 'காதலிக்க உரிமையுண்டு'—இந்தியக் குடியரசுச் சட்டத்தின் எந்தப் பகுதி, இதை வற்புறுத்திக் கூறுகிறது? ஷரத்து என்ன?

5. 'காதலன் — காதலி, அரச மரத்தடி (அல்லது பீச், பஸ்-ஸ்டாண்டு, குழாயடி) உடன் படிக்கைத் திட்டத்துக்கு, 'லார்டு வெல்லெஸ்லி'யின் 'துணைப்படைத் திட்டத்'தால் ஏதாவதுபயனுண்டா? இரண்டின் ஷரத்து வித்தியாசங்களையும் குறிப்பிடு.

6. கொடுக்கப் பட்டிருக்கும் வட்டத்தில், கீழ்க் கண்டவைகளைக் குறிப்பிடு:

1. மாம்பழக் கன்னங்கள்.
2. கெண்டை மீன் விழிகள்.
3. பிளக்கவரும் செந்நாசி.
4. சிலிர்க்கச் செய்யும் சாந்துப் பொட்டு.
5. ஒற்றைக் கல் மூக்குத்தி.
6. லிப்ஸ்டிக். ★

தந்தி: 'ஜுவல்லர்ஸ்' போன்: 49



பவுன், தங்கம், வெள்ளி,

வைர நகைகளுக்கு

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

திருச்சிராப்பள்ளி.

கிளைகள் : சென்னை, காயல்பட்டணம்,
யாழ்ப்பாணம் & கொழும்பு.

Telegrams : 'RANGAVILAS' Telephone : 17 & 817

SRI RANGA VILAS
GINNING, SPINNING & WEAVING MILLS LIMITED.

(Incorporated in 1922)

PEELAMEDU P.O. COIMBATORE

SPINDLES : : 36,368

LOOMS : : 88

SPINNERS OF:

Superior kinds of yarn from 2^s to 80^s counts

&

WEAVERS OF:

Grey Gada and Dhoties.

Managing Partner :—

G. N. VENKATAPATHY.

தொடர் கதை :

கு. ப. சேதுஅம்மாள்

அத்தியாயம் 19

அக்கினிப் பரீட்சை.

வள்ளிக்கு அன்று மனநிலை உற்சாகமாக இல்லை. சற்று நேரம் வெளியே போய் தன் சிநேகிதியான நாகுவின் சகோதரி மங்களத்துடன் பேசிக் கொண்டிருந்து வரலாமென்று நினைத்து தகப்பனாரிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

ஒற்றையடிப் பாதையிலிருந்து சாலைக்கு வந்ததும், மறு திருப்பத்திலிருந்து துரை அவள் முன் எதிர்ப்பட்டான்.

நடுங்கிப்போய் நின்றாள் வள்ளி. அவள் உடல் பயத்தால் நடுங்கியது முகம் விகாரமாக மாறியது. அடியெடுத்து வைக்கக்கூட காலெழாமல் ஆணியறைந்ததுபோல நின்று போனாள்.

துரைக்கு மனதுக்குள் எக்களிப்பு. ஆனால் அதைச் சிறிதும் காண்பித்துக் கொள்ளாமல் மிகக் கனிவுடன், "ஏன் வள்ளி என்னைக் கண்டு இப்படி நடுங்குகிறாய்? ஏதோ அன்று என் புத்தி பிசகி விட்டது. அதோடு நான் பக்குவமாகி விட்டேன். இனிமேல் நீ என்னைக் கண்டு மிரளவே வேண்டாம். நடு நிசியில், நிர்மானுஷ்யமான இடத்தில் உன்னைக் கண்டாலும் என் மனம் மாறுபடாது, அதனால் தைரியமாக நீ எங்கு போகணுமோ போ," என்று கூறி விட்டுச் சென்றான்.

வள்ளியின் மனம் படபடத்தது. ஸ்தம்பித்த நிலைமையிலேயே அவன் போவதை நின்று கவனித்தாள். பிறகு அமைதி பெற்றவளாக, மெதுவாக நடந்து நாகுவின் வீட்டை அடைந்தாள்.

தைபிறந்து பத்துத் தேதிகளாகிவிட்டன. துரை வீட்டில் அன்றொருநாள் இரவு, பாம்பு வந்து சென்றதைத் தவிர வேறு விசேடமில்லை. பொன்னகரத்தைச் சூழ்ந்து இருந்த வடபாதி, தென்பாதி பண்ணைகளில் அறுவடை ஆரம்பமாகியிருந்தது.

கண்ணுக்கெட்டிய வரையில் ஒரே பொன்னிறமாகத் தென்பட்ட வயலில் ஆட்கள் இறங்கி அறுவடை செய்துகொண்டிருந்தார்கள்.

"ஏ பம்பையோவ்" என்று கத்தினான் ஆறுமுகம்.

அடுத்தாற்போல கூப்பிடு தூரத்திலிருந்த வடபாதி வய

வில் அறுப்பறுத்துக் கொண்டிருந்த பம்பையன் கையில் அரிவாளுடன் ஆறுமுகத்தின் அருகில் வந்து, "ஏம் மாமா?" என்றான்.

"ஏதுடா இது? கிழக்கோடியிலே குடிசை ஒன்று முளைச்சிருக்கே புதுசா!"

"அட! நான்கூட இப்பத்தான் பாக்கிறேன்! விசாரிப்போம்; அதைப்பற்றி ..."

"நாகு இன்னிக்கி வேலேக்கி வல்லியா,?"

"வந்தாரே. தெக்காலே போயிருப்பாரு. பாத்தா வரச் சொல்லவா?"

"பாத்தா என்ன? பாத்து-கண்டுபிடிச்சு உடனே வரச் சொல்லு" என்றான் ஆறுமுகம்.

"சரி" என்று கூறிவிட்டு அப்பால் சென்றான் பம்பையன்.

பொதுவாக ஆறுமுகத்திற்கு கல்வியறிவு அதிகமாக இல்லேயே ஒழிய அவனுடைய மூளை மிக்க கூர்மையானது. நுட்பமான விஷயங்களையும் நொடிப்பொழுதில் கிரகித்துக் கொள்ளும் சக்தி அதற்கிருந்தது. ஆகையால், வயலுக்கெல்லாம் தள்ளி ஜன சஞ்சாரமற்ற அதாவது நடைபாதைக்குச்சற்று ஒதுக்கமாக இருந்த மாமரத்தடியில் சிறு குடில்போல நாற்புறமும் மண்சுவர்களும், ஒரு நிலேக் கதவும் வைத்து மேலே தென்னம் ஓலேவேய்ந்திருந்ததைக் கண்டதும், ஆறுமுகத்தின் மூளை சுரு சுருப்பாக வேலே செய்யத் தொடங்கியது. அவன் கைகள் கதிரை அறுத்தன. மனம் துரையின் சூழ்ச்சிகளில் புகுந்து துழாவிக் கொண்டிருந்தது.

சற்று நேரத்திற்கெல்லாம் "என்ன மாமா கூப்பிட்டிங்களாமல்லவா?" என்ற நாகுவின் குரல் கேட்டு சுயநினேவடைந்து தலேநிமிர்ந்தான் ஆறுமுகம்.

"ஆமா, எங்கே ரெண்டு நாளா உன்னேக் கண்ணுலே காணலியே," என்று கேட்டான் ஆறுமுகம்.

"காணுமா என்ன, இருக்கிறனே; என்ன தகவல்?"

"அதா அந்த கீழக்கோடி மாமரத்தடிலே ..."

"ஆமா, மைனரு போட்டிருக்காரு குடிசை."

"ஓஹோ, எதுக்காம்?"

"ஏதுக்குன்னு கேட்டால் வெய்ய வேளைக்கி இளைப்பாறிக்க, படுக்க கொள்ளன்னு பதில் சொல்லுவாரு!"

"சொன்னுரா அப்படி?"

"யாருபோய் கேட்டாங்க? நமக்குத் தெரியாதா என்ன பதில் வரும்னு?"

"அப்போ, இதிலேருந்து நமக்குப் புரியலியா விஷயம்?"

ஆறுமுகத்தின் இந்தக் கேள்விக்கு உடனே நாகு பதில் சொல்ல வில்லே. அவன் மனதில் இனம் தெரியாததொரு வேதனே உண்டாயிற்று. துரையின் ஈனமான சூழ்ச்சியும் பருவவேட்கையின் சூட்டையே இன்னும் உணராத வள்ளிக்கு நேரவிருப்பதாகத் தோன்றும் ஆபத்தும், அதையொட்டி நடைபெறவிருப்பதையும் எண்ண எண்ண அறிவு தடுமாறியது. ஸ்தம்பித்த படி வாய் திறவாமல் நின்ற நாகுவைக் கண்டு "என்னடா, வாயே துறக்கக்காணுமே? என்ன யோசனே?

மேலே என்னென்ன நடக்க விருக்குன்னு? ''

நாகு ஒரு பெருமூச்செறிந்து விட்டு. ''நான் என்ன நினைக்கிறேன்னு மாமா — நாம் நினைக்கிறபடி இல்லாம — வேறே ஏதும் உபயோகத்துக்காக இருந்து — ஐயருமகன் நல்ல பேரோடே இருக்கட்டுமேன்னுதான்! '' என்று சிரித்தான் நாகு.

ஆறுமுகம் ஒரு பலத்த சிரிப்பு சிரித்து விட்டு, ''அப்பனே, நான் அப்படி நெனைக்கல்லே! விசப் பூண்டு — மருந்துப் பச்சிலையாவுமா எங்கியாவது? அதனாலே, அனுமத்தா ஒரு குடிசை எப்ப முளைச்சுதோ — அதோட கூடவே ஆபத்தும் முளைச்சிடுச்சு மைனர் தொரைக்கி! கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே! உனக்கும் பம்பையனுக்கும் அந்தக் குடிசை மேலே எப்போதும் ஒருகண்ணு இருக்கணும்! ஆபத்து எந்த சமயத்திலே எப்படி வாய்க்கும்னு சொல்ல முடியாது! ''

இதைச் சொல்லும் போது ஆறுமுகத்தின் கண்கள் சிவந்தன. மீசை துடித்தது!

அதைக்கண்ட நாகு ''எனக்கும் இதே சம்சயம் தான், ஆனால்-... ''

'' ஊம், சொல்லு! ''

'' பம்பையன் சொல்றுப்பலே, நிசம்மாவே மனிசன் மாறிட்டானோன்னு... '' நாகு பேச்சை முடிக்குமுன்பு ஆறுமுகம் படபடப்புடன் ''இல்லே, என்னப்பனே அவன் கழுத்திலே தாவடம், மனசிலே அவகடம்! எனக்கு நல்லாத் தெரியுது. உனக்கும் தெரியும், ஆனா அதை நீ மதிக்க!... ''

'' கோவிக்காதிங்க மாமா... பொம்பளையாளுங்க கிட்ட அளவு கடந்த சௌசன்யமாப் பழகறத்திலேயே தெரிஞ்சு போயிடலையா அதிலே எதோ இருக்குதுன்னு? ''

'' பின்னே, எங்கோவத்தை ஏன் கிளப்பறே? அதோ உம் முதலாளி வர்ருரு பாரு, நீ போ. பம்பையனே, உசார் படுத்திவை '' என்று கூறி நாகுவை அனுப்பி விட்டு வயலில் இறங்கினான் ஆறுமுகம்.

நாகு விசையாக நடந்து வடபாதிப் பண்ணையை நெருங்கினான். களத்து மேட்டின் அருகிலிருந்த புளியமரத்தடியில் வந்து நின்றார் வடபாதி மிராசு ராமநாதய்யர்.

நாகு அருகில் வந்ததும், '' இன்னிக்கி, எவ்வளவு பேர் இறங்கி இருக்கா வயல்லே? '' என்று கேட்டார் மிராசு.

'' நாப்பத்தஞ்சு பேருங்க '' என்றான் நாகு.

'' அடுத்த வாரம் நடவு முடிஞ்சுடு முல்லியா? ''

'' இன்னும் இரண்டு நாள் கூட ஆனாலும் ஆகலாமுங்க ஏன்னா ... ''

'' அது இருக்கட்டும். தென்பாதி பண்ணையிலே மைனருட மணியமாமே, நிஜந்தானா நாகு? ''

'' ஆமாங்க, பெரியவருதான் படுக்கையிலே இருக்கிறாரில்ல?''

''பாவம் அவருக்கு வியாதி கால்பங்கு, விசனம் முக்கால் பங்கு. நிஜமாச் சொல்றேன் நாகு. எனக்கு ஜன்ம சத்துரு தான் அவரு, ஆனால் அவருக்கு இந்தமாதிரி ஒரு 'அஸத்து'

வந்து பிள்ளையாய்ப் பொறக்க வேண்டாம்! ஆனல் இப்ப என்னவோ ரொம்ப சாதுவா இருக்கானுமே!...''

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று திணறினுன் நாகு. திருந்திவிட்டான் என்று பொய் சொல்லவும் நா எழும்ப வில்லே. வெளி வேஷம் எல்லாம், என்றுகுட்டை உடைக்கவும் அவனுக்கு மனமில்லே. இரண்டுக்கும் பொதுவாகச் சிரித்து மழுப்பினுன்.

''என்ன சிரிக்கிறே நாகு ?'' என்ருர் மிராசு.

''இப்படி சந்தி சிரிச்சபுறம் தான் அதுக்கு புத்தி வந்தது என்னு நினேச்சேன். சிரிப்பு வந்திட்டது!'' என்ருன் நாகு.

''இப்பவும் கூட போக்கிரித் தனம் அடியோட போகலேன்னு தான் நான் நெனேக்கிறேன்...'' என்று அவர்சொன்னதும் நாகு திடுக்கிட்டவனுக ''ஏன் சாமி அப்படிச் சொல்லுறீங்க?' என்று கேட்டான்.

''ஏனு? குட்டிச் சுவர்லே முட்டிக்க வெள்ளெழுத்து என்கிற மாதிரி, தலேமுறை தலேமுறையா, பண்ணே பார்க்கிரேும்—இந்த மாதிரி—களத்து மேட்டுக்கு ஒத்திப்போயி—ஒரு குச்சு வீடு கட்டி அதிலே, தென் பாதியானும் குடி பூந்ததில்லே—வட பாதியானும் குடி பூந்ததில்லே! கூப்பிடு தூரத்திலே வீடு இருக்கிறபோது—குச்சு வீடு எதுக்கு? நீயே யோசிச்சுப் பாரு!''

நாகுவின் முகம் வெளுத்து விகாரமாகியதைக் கண்டு ''என்ன சங்கதி நாகு? இதைக் கேட்டதும் உம்மூஞ்சியிலே சவக்களே தட்டிப்போச்சே!'' என்று கிண்டினுர் ஐயர்.

''இதெப்படி நீங்க கண்டிக்கிட்டீங்க சாமி? எங்களுக்கு யாருக்கும் இது தோணவேயில்லேயே?'' என்று அதிசயித்தவன் போல அபிநயித்து தனது உள்ளத்துணர்வை மறைத்துவிட்டான் நாகு.

''யோசிச்சுப் பார்த்தா தன்னலே புரிஞ்சுடும்! நீ வேணும் பாரு, அந்த கந்தப்பன் மகள் கிட்ட அவன் காட்டிய கை வரிசையை மறுபடியும் காட்டப் போருன் யாரிடமோ''

''காட்டினு, வாங்கிக்கட்டுமே பதிலுக்கு!'' என்று கூறிவிட்டு. மேற்கொண்டு அங்கு நிற்கப் பிடிக்காமல் வயலில் இறங்கச் சென்ருன் நாகு.

ஆச்சரியத்திலாழ்ந்துபோனுர் ஐயர்! நாகுவுக்கும் தென்பாதி பண்ணே சலசலப்புக்கும் என்ன சம்மந்தம்? எந்த ஒரு சங்கதியிலும் தன்னேடு உற்சாகமாகப் பேசும் நாகு, இன்று பேச்சைத் துண்டித்துக் கொண்டு சென்றது அவருக்குப் புரியாத புதிராக இருந்தது! மேலும் நாகுவின் முக மாறுதலேயும் கவனித்ததால் உள்ளூர நாகு—தென்பாதி ஆட்களோடு குலாவுவது போலப்பட்டது அவருக்கு.

அதிலிருந்து அவர் நாகுவின் நடவடிக்கைகளே கவனிக்க வேண்டும் என்று தனக்குள் நிச்சயித்துக் கொண்டார்.

ஆறுமுகம், நாகு, வட பாதி மிராசு ஐயர் மூவருடைய கண்களிலும் உறுத்திக் கொண்டிருந்த குடிசை மற்ற ஆண்

பெண்கள் எல்லோருக்கும் வித்தியாசமாக எதுவும் தெரியவில்லே.

வெய்யில் வேளேக்கு இளேப்பாறிக் கொள்ளவென்று மைனர் சொன்னதை 'சரிதான்' என்று ஒப்புக் கொண்டவர்கள் போலக் காணப்பட்டார்கள்.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன; நடவு முடிய இரண்டொரு நாட்கள் தான் இருந்தன.

தினசரியாக நடவுக்கு வரும் பெண்களில் யாராவது சென்று அந்தக் குடிசையைப்பெருக்கிச் சுத்தம் செய்து விட்டு வருவார்கள். பெரும்பாலும் அந்த வேலே செய்பவர்களுக்கு இனமாக, சில்லறையோ, தின்பண்டமோ, மனமுவந்து தருமம் வழங்குவது துரையின் வழக்கம்.

"நடவு முடிகிறதே, நமது திட்டம் நிறை வேற வில்லேயே, சந்தர்ப்பம் கிடைக்க வில்லேயே ?" என்று வருந்திக் கொண்டிருந்தான் துரை.

பசுத்தோல் போர்த்த புலியாக நடமாடும் துரையை வஞ்சம் தீர்க்கத் தருணம் வாய்க்கவில்லேயே என்று துடித்தான் ஆறுமுகம்.

வள்ளிக்கு எந்த சமயம் என்ன தீங்கு நேருமோ என்று திகில் பட்டுக் கொண்டிருந்தான் நாகு.

அன்று நடவின் இறுதி நாள்.

காலே இளங்காற்று சுகமாக வீசிக் கொண்டிருந்தது! இரவெல்லாம் இசிவினுல்பாதிக்கப் பட்டு அப்பொழுது தான் சற்று வலி குறைந்திருந்தது கந்தப்பனுக்கு.

"சித்தப்பா, வயலுக்கு இன்னிக்கி..." என்று வள்ளி ஆரம்பித்ததும், கந்தப்பன் தலேயைத் தூக்கிப்பார்த்து, "இன்னிக்கோட நடவு திருதுல்ல?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்முன் ஆறுமுகம்.

"தெனம்போல போயி வந்திடுங்க" என்முன் கந்தப்பன்.

"உன்னேத் தனியா உட்டுட்டு எப்படிப்போறதுன்னு பாக்கறேன்..."

"ஒண்ணுமில்லெ போய் வா. என்னிக்கும் தான் எனக்கு தீராத நோவு, தொலேயாத வலி. என்னபண்றது?" என்முன் கந்தப்பன்.

வழக்கம் போல, கஞ்சி சுடு தண்ணீர் எல்லாம் எடுத்து கந்தப்பனுக்கருகில் வைத்துவிட்டு ஆறுமுகமும், வள்ளியும் வயலில் இறங்கும் போது மணி எட்டாகி விட்டது. அவளே எதிர் பார்த்துக் கொண்டிருந்த மருதி ஆவலோடு ஓடி வந்து, கை கோர்த்து அழைத்துக் கொண்டு போய் பெண்களின் கூட்டத்தில் கலந்து கொண்டதும் "வள்ளிம்மா, ஒரு சங்கதி சொல்லணும் உன்கிட்ட, சின்னய்யிரு போட்டுக்கல்லே ஒரு சிமிட்டி போட்ட குடிசை வீடு-"

"ஆமா"

"அதிலே எங்களே இருக்கச் சொல்லிட்டாரு அவரு!"

ஆச்சரியம் பொங்க "நிசம்மா வாடீ?" என்முள் வள்ளி.

"நிசம்மா தான் வள்ளிம்மா! என்னு நல்லாருக்கு தெரியுமா, உள்ளற; பெரிய ஜன்னலு இருக்கு. தெக்காலே, நல்ல காத்து வரும். பாய் கூட வாணும். தரை அவ்வளவு சொகுசா இருக்கு!"



“நீ பாத்தியா?”

“ஆமாம். சின்னய்யருக்கு உடம்பு சரியில்லையாம். அங்கே இருக்கிற சாமானெல்லாம் எடுத்து வீட்டிலே கொண்டு போட்டிடச் சொல்லிட்டு அவரு ஊட்டுக்குப் போயிட்டாரு. சாயந்திரம் கூலி போடத்தான் வருவாராம். அப்பன்னா போய் பாத்துட்டு வருவோம். வர்றியா மருதி?” என்று கேட்டாள் வள்ளி. ‘வா போவோம்’ என்று இருவரும் புறப்பட்டு குடிசையை நோக்கிச் சென்றார்கள்.

வடபாதி பண்ணையிலிருந்தாலும், கண் கொத்திப் பாம்பு போல குடிசை மீதே கண்ணாக இருந்த நாகு, வள்ளியும், மருதியும் அந்தப் பக்கம் செல்லுவதைக் கண்டு திடுக்கிட்டான். உடனே கையிலிருந்த நாற்றுகளைக் கீழே போட்டுவிட்டு வரப்பில் ஏறி தடத்தோடு மண் ரோட்டுக்காக நடந்தான்.

துரையின் குடிசையை சமீபித்து விட்ட வள்ளியை தற்செயலாக குடிசைக்குள்ளிருந்த துரை ஜன்னல் வழியே கவனித்து விட்டான்—அல்ல, விதி அவன் கழுத்தைப் பிடித்துக்கொண்பித்தது!

‘சபாஷ்! கந்தப்பன் மகளே! கிணற்றில் குதித்த கற்பரசீ, நான் விரித்த வலையில் சிக்க வருகிறாயா, வா! தெரியும் எனக்கு—நீ வருவாய் என்று” என்று குதூஹலித்தது

அவன் உள்ளம். கதவு மூலையில் சுவரோடு சுவராக ஒட்டிக்கொள்ள வேண்டும் என்று நினைத்தான். ஆனால் இருவருமாக உள்ளே வந்து விட்டால்?

'உம், தெரியாதா நமக்கு மரியாதையாகப் பேசி அனுப்பி விடுவது! தனியாக வள்ளி வந்தால்?'

ஒரு குதி குதித்தது அவன் உள்ளம். உடம்பில் 'ஜிவ்' வென்று ஒரு உணர்ச்சி பரவி அவனைத் தவிக்கச் செய்தது!

குடிசையைச் சமீபித்ததும், வள்ளி தயங்கி நின்று, "மருதி, நான் இங்கே வந்ததை சித்தப்பாரு பார்த்தா திட்டும்! நீ இந்த மரத்தடியிலே நின்று அவரு வர்றாரா என்று பார்த்துக்க. உள்ளே போய்பாத்துட்டு ஓடியாந்துடறேன் என்ன?" என்றாள் வள்ளி "சரி" என்றுவேப்ப மரத்தடியில் நின்று நாலா புறமும் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள் மருதி.

மருதியால் வர்ணிக்கப்பட்ட குடிசையின் சிறப்பைக் காணும் ஆவலுடன் பறக்கப் பறக்க ஓடி வந்து, சாத்தி வைக்கப்பட்டிருந்த வெறும் கதவைத்தள்ளிக் கொண்டு உள்ளே அடி வைத்து இரண்டடி நடந்தாள்.

கதவின் பின்னுலிருந்து ஓசையின்றி கதவைச் சாத்தி விட்டுத் தாளிடும் போது, 'டக்' என்ற சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தாள் வள்ளி.

எமஸ்வரூபமாக எதிரே நின்ருன் துரை!

கதிகலங்கியவளாக ஒரு க்ஷணம் மிரண்டு நின்ருள் வள்ளி.

துரையின் மனதில் கோபமும் பழி தீர்க்கும் உத்வேகமும் பொங்கி எழுந்தது வெறி உணர்ச்சியால் உந்தப் பட்டு ஒரே பாய்ச்சலில் வள்ளியை நெருங்கி, "ஏ பத்தினிப் பெண்ணே! அன்னி தினம், 'என் பிராணன் போனலும் போகட்டும். உன் பேரை சந்தி சிரிக்க வைக்கிறேன்' னு கிணத்திலே குதிச்சியால்லியா, இதோ இன்னிக்கு என் பிராணன் போனலும் சரி, உன்னை மானபங்..." என்று அவள் கையைப் பிடிக்கப் போனன்.

"சீ, எட்டி நின்னு பேசு, என் மானத்தைக் காப்பாத்திக்கதான் நினைச்சேனே யொழிய உம்பேரைப் பத்தி எனக்கு அக்கறை யில்லை. மரியாதியா கதவைத் திறக்கறியா, இல்லையா?"

"மாட்டேன், படிஞ்சு வந்தியானு—பேரு வெளியே வராமல் போயிடும் .."

"ஐயையோ, ஐயையோ... சித்..." என்று கத்த ஆரம்பித்த வள்ளியின் வாயை 'கப்' பென்று அழுத்தப் பொத்தினன் துரை. மறு கை அவளுடைய இடுப்பைச் சுற்றியது!

வள்ளியின் கூக்குரலைக் கேட்டு திடுக்கிட்ட மருதி ஓடி வந்தாள். கதவு தாளிடப்பட்டிருப்பதும், உள்ளே வள்ளி அலறுவதும்கேட்டு"ஐயையோ. ஆத்தாடி... ஓடியாங்க" என்று வயிற்றிலும்,வாயிலும் அடித்துக் கொண்டு அலறினள். கதவை மோதித் திறக்க முயன்று பலம் கொண்ட மட்டும் உதைத்தாள்.

ரோடுவழியாக வந்த நாகு, மருதி செயலும், கூக்குரலும் பார்த்து, "பம்பையா, மூக்கா, மாமா...!" என்று கத்திக் கொண்டு ஓட்டமாக ஓடி வந்து கூரையின் மீது தாவியேறி ஆவேசத்தோடு கூரையைப் பிய்த்துப் பிடுங்கினன்.

மூக்கன் தலைதெறிக்க கந்தப்பன் குடிசையை நோக்கி ஓடினன்.

வயலிலிருந்த ஆண் பெண் அடங்கலும் 'தப தப' வென்று ஓடிவந்து சூழ்ந்து கொண்டார்கள்.

நாகு, அதற்குள் கூரையைப் பிரித்துக் கொண்டு குடிசைக்குள் குதித்து, துரையைப் பேயறை அறைந்து வள்ளியின் கூந்தலையும், சரத்தையும் அவனிடமிருந்து மீட்டுக் கொண்டு கதவின் தாளை நீக்கியதும் கூட்டம் உள்ளே புகுந்தது!

பம்பையன் மூர்க்கத்துடன் துரையை தாக்கியதும், துரையின் பக்கத்து ஆட்கள் பம்பையனை இழுத்துப் போட்டு அடிக்க-இரு தரப்பாரும் கை கலந்து, அடி தடி பலத்தது.

காலாந்தகனைப் போன்ற அகங்காரமும், ஆவேசமுமுடையனாக அரிவாளும் கையுமாக ஓடி வந்த ஆறுமுகம், "பாவிப் பயலே, இதோடு ஒழி" என்று ஓங்கி வாளை துரையின் தலையில் போட்டான்!

கூட்டம் அலறியது!

உதிரப்பெருக்கால் அபிஷேகம் செய்யப்பட்டு கீழே சாய்ந்தான் துரை.

கூட்டத்தின் கவனம் முழுவதும் துரைமீது திரும்பியது.

ஆறுமுகம் ஓடிவந்த ஆவேசத்தோடு திரும்பி ஓடினான்...ஓடினான்...ஓடியே போனான்—ஆயுளின் இறுதியைக் காண!

மருதியின் அணைப்பில் நின்ற வள்ளியை அழைத்துக் கொண்டு வேலம்மாள் வெளியே நடந்தாள். மண்டையில் அடி பட்டதாலும்—ரத்தநஷ்டத்தாலும் மூர்ச்சையடைந்து விட்ட துரையைக் கயிற்று கட்டிலில் எடுத்துப் படுக்க வைத்து நான்குபேராக எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

தென்பாதி பண்ணையார் மகன் மண்டை பிளந்து விட்டது என்ற செய்தி நொடிக்குள்ளாக ஊர் முழுவதும் பரவி விட்டது.

ஊர் இரண்டு பட்டது. ஒரு சாரார் துரையை சபித்தார்கள். மற்றொரு சாரார், வள்ளியை ஏசினார்கள். பாதிகூட்டம் துரையைத் தொடர்ந்து சென்றது. மூக்கன் துணையுடன் வேலம்மாளோடு வள்ளியை வீட்டுக்கு அனுப்பிய நாகு ஆத்திரமும், வேதனையும், துக்கமும் கொண்டு செயலிழந்தவனாக வேப்பமரத்தடியில் உட்கார்ந்து விட்டான். நினைவுகள் எழுந்தன!

'ஆறுமுகம் எங்கே போயிருப்பான்? போலீசில் செய்ததைச் சொல்லிவிட்டு அகப்படவா? இல்லை—கண்காணாமலே போய்விடவா?'

யோசனை நீண்டது.

துரையைச் சுமந்து சென்ற ஆட்கள் பாதிதூரம் செல்லு முன்பே, ஐயரும், அன்னம்மாளும், கமலமும் அலறியடித்துக் கொண்டு எதிரே வந்தார்கள்.

ரத்தம் சொட்ட மகன் கிடக்கும் கிடையைக் கண்டு 'ஐயோ' என்று தலையிலடித்துக்கொண்டு கீழே சாய்ந்தார் தந்தை. பெண்கள் இருவரும் அலறினார்கள். ஆட்கள் துரிதமாக நடந்து வீட்டையடைந்து கட்டிலை இறக்கி வைத்து விட்டு நின்றார்கள்.

கருப்பையா, ஐயரை மூர்ச்சை தெளிவித்து கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு வீடு வந்து சேரும் சமயம் அந்திமயங்கி விட்டது. அடுத்த கிராமம் போயிருந்த கலியன் செய்தி கேட்டு ஓடோடியும் வந்தான்!

"வேண்டாம், அவனை களத்துக்கு அனுப்பாதேயுங்கோ, அக்கினிப்பரிட்சை பண்ணப் படாதுன்னு முட்டிக் கொண்டேனே-என்பேச்சைக் கேட்டாளா யாராவது!" என்று அழுதாள் அன்னம்மாள்.

என்ன நடந்து இந்த விபரீதம் நிகழ்ந்திருக்கிறது என்பதை யாரும் சொல்லாமலே ஊகித்துக் கொண்ட ஐயர்

மனைவியின் பிரலாபத்தைக் கேட்டு "போதும், வாயைமூடு" என்றார் வெறுப்புடன்.

கலியன் செய்த சைத்யோபசாரத்தினால் நினைவு திரும்பி துரை கண்விழித்துப் பார்த்த பொழுது மணி எட்டடித்தது.

"டேய் ஆறுமுகம்" என்று வீரிட்டுக் கொண்டு எழுந்தான் துரை. "படுங்க சாமி. எந்திரிக்கக்கூடாது" என்று கூறி படுக்கவைத்தான் கலியன்.

கூடத்தில் கருப்பையாவும் அடுத்தவீட்டுமுத்துவும், போலீசுக்குத் தகவல் கொடுப்பதைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதைக் கேட்ட ஐயர் வேதனைக்குரலில் "முத்து," என்று கூப்பிட்டார்.

அவள் அருகில் வந்ததும். "அப்பா, உங்களுக் கெல்லாம் ரொம்பப் புண்ணியம், மானம் போனவரைக்கும் போதும். நம்ம சரக்கு அஸத்து. எதிரிமேலே பாயறத்திலேதான் என்ன பிரயோசனம்? என்ன நடந்திருந்தால் அவன்கள் இப்படி மண்டையை உடைச்சிருப்பா? போலீசு, கோர்ட்டுன்னு போய் ஊர் சிரிக்கவேண்டாம். அவனுக்கு வைத்தியம் பார்க்க வேண்டியது என் கடமை, அதைச் செய்துடறேன், கலியன் பார்த்து தேவலையாகாது என்றால்—கண்ணமங்கலம் ஆஸ்பத்திரி, அங்கேயும் முடியாதுன்னால்-மெட்ராசுக்குக் கொண்டு போய் பெரிய ஆஸ்பத்திரியிலே சேர்த்து சிகிச்சை பண்ணலாம். பிழைச்சால் அவம்மாவுக்குப் பிள்ளையாக"

"ஏன் மாமா அப்படிச் சொல்றேள்? உங்களுக்கு மட்டும் பிள்ளையில்லையா அவன்?"

"இல்லேடா அப்பா! கந்தப்பன் பெண் என்னிக்கி நம்மாத்துக் கிணத்திலே விழுந்தாளோ அன்னிக்கே என் பிள்ளை போயிட்டானே—!"

"சிவா! என்ன நீ, வாயிலே வந்ததை எல்லாம் பேசிண்டு? குழந்தை கிடக்கிற கிடை என்ன?" என்று சினந்தபடி பேச்சை மாற்றினாள் கமலம். ஐயர் ஒன்றும் பேசவில்லை.

முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு அப்பால் சென்றான் முத்து. கருப்பையா முன் வந்து "அப்பன்னா, பிள்ளை மண்டையைப் பிளந்தவனை உட்டுடறதா?" என்று கேட்டான்.

"எனக்குத் தெரியும் எல்லாம். உன்வேலையை நீ பாரு போய்" என்று கூறிவிட்டுபடுக்கையில்சாய்ந்தார் ஐயர்.

அம்மியை அலம்பிவிட்டு கலியன் கொடுத்த பச்சிலைகளை வைத்து அரைத்தாள் அன்னம்மாள். வேதனையால் உள்ளம் வெதும்ப கையிலுள்ள ஈரத் துணியால் துரையின் உடம்பில் உறைந்திருந்த ரத்தக் கறையைத் துடைத்துக் கொண்டிருந்தாள் கமலம்.

"எந்த வேளையிலே புறப்பட்டு வந்தேடா அப்பா. சண்டையும் பூசலுமா வீடு இரண்டு படறதேன்னு விசாரப் பட்டத்துக்கு-ரத்தக் களறியாக்கிண்டு வந்துட்டியே, பகவானே, பழனியாண்டீ! துஷ்டனோ" துரோகியோ வம்சத்துக்கு ஒரு குழந்தையைக் குடுத்திருக்கே, அதுக்கு ஆயுசை நிறையக்குடு, குடியை விளங்கவை அப்பனே" என்று கண்ணீர்வடிய பிரார்த்தித்தாள் கமலம்.

(தொடரும்)

பாண்டியன் காத்த பதினாறு தூண்கள்

-அழகரசன்-

ஊரையே எரித்த பகை மன்னன், அந்த மண்டபத்தை மாத்திரம் விட்டுச் சென்றான். ஏன்?

செந்திப் பிழம்புகள் நாற்றிசையிலும் பரவி, பயங்கரமாக எரிந்து கொண்டிருந்தது, சோழர்களின் தனிப் பெருந்தலை நகரம். மாட மாளிகைகள், மக்கள் மன்றங்கள், கூடகோபுரங்கள், குடிசைகள் அனைத்துமே நன்றாக தீக்கதிர்களுக்கு இரையாகிக் கொண்டிருந்தன. செக்கச் சிவந்த தீ நாக்குகள், வானோக்கி எழும் பிரம்மாண்டமான காட்சி, "வானுலகத்தையும் எரித்து விடும் பெரும் ஆற்றல் நமக்கு உண்டு" என்று பறை சாற்றுவது போலிருந்தது. அருகிலே "சல, சல" வென இசை பரப்பிஓடிக் கொண்டிருந்த காவிரி நதி, அந்தக் காட்சியை மிகக் கோரமாகப் பிரதிபலித்து, ரத்த வெள்ளமாகத் தோற்றமளித்தது.

எங்கும் மரண ஓலமே கேட்டுக் கொண்டிருந்தது. நட்ட நடு நிசியில், பேயுறங்கும் நள்ளிரவில் யாருமே எதிர்பாராதபடி ஒரே சமயத்தில் நகரம் அனைத்துமே எரியுண்ணத் தொடங்கியதைக் கண்ட மக்கள், என்ன செய்வதென்றே அறியாமல் திகைத்தார்கள்.

பயந்தவர்கள் அலறினார்கள்; பதவியிலிருப்பவர்கள் ஆராய்ந்தார்கள். "சோழர்களுக்கும், பாண்டியர்களுக்கும் சென்ற ஒரு வார காலமாக நடந்து வந்த உக்கிரமான பெரும் போரின் முடிவுக்காட்சியோ இது" வென பலர் ஐயுற்றார்கள்; "சோழ மண்டலமே மீண்டும் தலையெடுக்கவொட்டாதபடி பூண்டற்றுப் போய் விடுமோ" என்று சிலர் பதறினார்கள். அத்தனை பேரையும் "விட்டேனா பார்" என்று சூழ்ந்து அழித்துக் கொண்டிருந்தான் அக்கினி தேவன்.

ஆற்றங்கரையிலே, புரவிமேல் ஆரோகணித்தபடி இந்த அழகுக் காட்சியைக் கண் குளிர, முகம் மலர கண்டு ரசித்துக் கொண்டிருந்தான், முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன். அவன் உள்ளம் ஆனந்தத்தால் பொங்கிக் கொண்டிருந்தது. அவன் கண்கள் வெற்றிப் பெருமிதத்தால் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

அருகிலே தீப் பந்தங்கள் ஏந்தியவாறு பத்துப் பதினைந்து பேர்கள் அவனைச் சூழ்ந்திருந்தார்கள். அனைவரையும் பெருமையோடு ஏறிட்டு நோக்கினான் மாறவர்மன்.

"ஏன் நிற்கிறீர்கள்? எல்லாம் முடிந்ததா?" என்ற கேள்வி, அரசனின் விழிக்கோணத்தில் படிந்திருந்ததைக் கண்ட, அந்தக் கூட்டத்திலே ஒருவன், குதிரையை

நோக்கி இரண்டடி முன்னே வந்தான்.

"என்ன?" என்று அவனை ஏறிட்டுப் பார்த்தான் சுந்தர பாண்டியன்.

"மண்டபம் ஒன்று பாக்கியிருக்கிறது மன்னவா?" என்றான் எதிரிலிருந்தவன்.

"இன்னுமா பாக்கி! ஆகட்டும் சீக்கிரம்!" என்று கர்ஜித்தான் பாண்டியன்.

"மன்னிக்கவேண்டும் மன்னவா! அந்த மண்டபத்தை நீங்கள் பார்வையிட வேண்டும்!"

"அப்படியா! அதென்ன அதிசய மண்டபம்?" —மன்னனின் குறுநகையில், கேலி தொனித்தது.

"தயவு செய்து வந்து பாருங்கள்! நீங்கள் பார்ப்பதற்கு முன் அதை நாங்கள் எரிக்கக் கூடாதென்று தீர்மானித்திருக்கிறோம்."

"வீண் வேலை! சரி, நடவுங்கள் சீக்கிரம்!"

தீப்பந்தங்கள் வரிசையாக முன்னோக்கி நடந்தன. குதிரையை மெதுவாகச் செலுத்திக் கொண்டு அவர்களைப் பின் தொடர்ந்தான் மாறவர்மன் சுந்தர பாண்டியன்.

சுற்றிலும் அநேக கட்டிடங்கள் இன்னும் எரிந்து கொண்டிருந்தன. அந்தச் சுவாலையின் வேகத்தைத் தன்னால் தாங்க முடியாத சிற் சில இடங்களில் குதிரையைச் சற்று வேகமாக முன்னோக்கிச் செலுத்தினான் மாறவர்மன்.

நகரமே பற்றி எரியும் அந்தப் பெரு ஒளியில், முன் நடந்தவர்களின் கரங்களிலிருந்த தீப்பந்தங்கள் பெருமை இழந்து மங்கலாகத் தோன்றின.

உறையூரின் தெற்குப் பகுதியில், விழுதுகள் தாங்கிய பெருத்த ஆல் போல் காட்சியளித்துக் கொண்டிருந்தது, அந்தப் பதினாறு கால் மண்டபம். வெள்ளை வெளேரென்று காட்சியளிக்க வேண்டிய அந்தப் பளிங்குக் கல் மண்டபம், சுற்றிலும் பரவி நின்ற தீ யொளியால் சுங்கச் சாவடி போல் செந்நிறக் கட்டிடமாகத் தோற்றமளித்தது.

குதிரையை விட்டிறங்கிய மாறவர்மன் மண்டபத்தினுள் நடந்தான்.

"இங்கே பாருங்கள், மன்னா!" என்று எதிரில் நின்றிருந்த அந்த மண்டபத்தின் தூண் ஒன்றின் அடியில், தீப்பந்தத்தை நீட்டினான் ஒருவன்.

அந்தத் தூணின் அடிப்பாகத்தில் கல்வெட்டு ஒன்று பதிக்கப்பட்டிருந்ததை அரசன் கண்டான். குனிந்து தன் கண்களால் அதில் பொறிக்கப்பட்டிருந்த வார்த்தைகளைக் கிரகித்த பாண்டிய மன்னன், பெருவியப்பு எய்தினான். கற்சிலையாக மாறினான்.

அந்த வியப்பை அறிந்தும் அறியாதவன் போல் அருகிலிருந்தவன் பேச ஆரம்பித்தான்.

"இனி, இதையும் எரித்து விடலாமா, அரசே!"

வியப்பினால் வாயடைத்து நின்ற மன்னவன், சட்டென்று அவன் பக்கம் திரும்பினான்.

"எரிப்பதா? ஒரு சிறு துரும்பு கூட இதன்மேல் வந்து விழ, நான் அனுமதிக்க மாட்டேன். சுற்றிலும் இதை நெருப்பு அணுகாதபடி ஜாக்கிரதையாகப் பாதுகாத்து நில்லுங்கள்"

அரசனுடைய இத்த உத்தரவைக் கேட்டு, யாரோ ஒன்றிரண்டு பேர்கள் அந்தக் கூட்டதில் லேசாகச் சிரித்தார்கள். புத்திசாலியான மாறவர்மனும் அதைப் புரிந்து கொண்டான்.

"அந்த மண்டபத்தையும் எரித்து விடுங்கள்" என்று அறியாமல் ஆணையிட்ட தன் மதியீனத்தை எண்ணி அவனே வெட்கப்பட்டான்.

* *

ஆம். ஆரம்பத்தில் அறிவித்தபடி, சோழன் மூன்றும் இராச ராசனுக்கும், பாண்டியன் முதல் மாற

வர்மன் சுந்தர பாண்டியனுக்கும் நடந்து முடிந்திருந்த போரின் இறுதிக் கட்டம் தான் இந்த கோரக் காட்சி. பாண்டியனின் தீவிரமான பழிவாங்கும் திட்டம், சோழனை வெற்றி கண்டு, அவனை அறுத்து விட்டதால் மட்டும் தணிந்து விடவில்லை. உறையூரையும் தஞ்சாவூரையும் நெருப்பு மூட்டி அழித்துப் பொசுக்கிய பின்பு தான் அவனது ஆத்திரம் அணைந்தும் அடங்கியது. தன் தந்தையின் காலத்து நிகழ்ச்சியினால், தானடைந்த மாசைத் துடைத்துக் கொள்ள இந்த அழிவு வேலையைத் தவிர வேறு வழியில்லை என்று அவன் முடிவு கட்டியிருந்தான்.

சோழ நாட்டை அப்போது ஆண்டு கொண்டிருந்த மூன்றாம் இராச ராசனைப் போரில் வெற்றி கண்டு விட்டது, மாற வர்மனுக்கு ஒரு பெருஞ் செயலல்ல! ஏனெனில், அவனை வெற்றி கொள்ள மன்னன் ஒருவன் தேவையில்லை; கத்தி வீசத் தெரிந்த சாதாரண ஒரு பெண் கூட அவனை வென்று விட முடியும்! அவ்வளவு தோள்வலி படைத்தவன் அவன்!

என்றாலும் தனக்கு முன்பு, தன் தந்தை யாண்ட மண்டலத்தை அரசாண்ட காலத்தில், இந்த மூன்றாம் இராச ராசனின் தந்தை மூன்றாம் குலோத்துங்க சோழன், பாண்டிய நாட்டின் மேல் படை யெடுத்து வந்து அதை அழித்த தோடல்லாமல், தன் தந்தையையும் போரில் கொன்று விட்டானே என்ற ஒரே காரணத்தினால் தான், தகுந்த சமயம் பார்த்திருந்த மாற வர்மன் இப்போது படையெடுத்து வந்து சோழ மண்டலத்தை அழித்துத் தன் நெடு நாளைய எண்ணத்தை நிறை வேற்றிக் கொண்டான்; பழிக்குப் பழி வாங்கியே தீர்த்தான்.

தந்தையர்களின் காலத்து நிலை அப்படியே தலை கிழாக மாறி நின்றது, தனயர்களின் காலத்தில்.

ஆனால்—

"தந்தையின் அரசாட்சியின் போது நடந்த ஒரு அக்கிரமச் செயலுக்காக, மகன் பழி வாங்கி விட்டான்" என்ற புகழைக் காட்டிலும், மற்றொரு பெரும் புகழ் இந்த நிகழ்ச்சியால் மாற வர்மனுக்குக் கிடைத்திருக்கின்றது?

அது என்ன?

பொழுது விடிந்தவுடன் சாம்பல் மேடாகக் காட்சியளித்த சோழப் பேரரசின் தலை நகரம், நெற்றிக்குத் திலகம் போல் ஒரே ஒரு மண்டபத்தை மாத்திரம் தன்னகத்தே அழியாமல் கொண்டிருந்தது.

ஆம். இரவு நடந்த அந்தக் கொடிய தீச் சூறுவளியில், பாண்டியன் மாற வர்மனால் விட்டு விடப் பட்ட அந்த மண்டபத்தினால் தான் அவனுடைய புகழ் பாரெங்கும் பரவலாயிற்று! பகைவனையும் அவனுடைய நகரத்தையும், அணுவுக்கு அணு அழித்து விட வேண்டுமென்று ஆத்திரம் கொண்டிருந்த மாறவர்மன் அந்தப் பதினாறு கால் மண்டபத்தை மட்டும் எரிக்காமல் விட்டு வைத்ததின் மர்மம் என்ன?

அதுதான் தென்னகத்து வேந்தர்களின் உயரிய பண்பை, உலகுக்கே உணர்த்திய நல்லதொரு எடுத்துக் காட்டு!

சோழர்களின் தலைசிறந்த அரசன் கரிகாற் பெருவளத்தானின் காலத்தில், அவனுடைய அரசாட்சியின் சிறப்பைப் புகழுமுகத்தான், கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் பெரும் புலவர் ஒருவர், அவன் மேல் "பட்டினப் பாலை" என்ற அற்புதமான நூல் ஒன்றைப் பாடினார். அதனால் பெரு மகிழ்ச்சியுற்ற கரிகாலன், அந்தப் புலவருக்கு பதினாறு இலட்சம் பொற்காசுகளைப் பரிசிலாக ஈந்து, அவருடைய நினைவுச் சின்னமாக தன் தலை நகரிலே, பதினாறுகால் மண்டபம் ஒன்றையும் நிறுவினான். அந்தப் பழம் பெரு புலவரின் நினைவுச் சின்னத்தைத் தான் அன்றிரவு மாற வர்மன் எரிக்காமல் விட்டு விடச் சொன்னான்.

அந்தப் பதினாறுகால் மண்டபம்— எதிரியின் வழிவந்த அரசனால் நிறுவப்பட்டது தான் என்றாலும்— எதிரியின் நிலத்தில் தான் அந்த மண்டபம் இருந்தது என்றாலும்— "புலவருக்காக---புலமைக்காக---அமைக்கப்பட்ட நினைவுச்சின்னம்" என்ற ஒரே காரணத்துக்காக" தன்னுடையபகைமையையும்மறந்து, பக்திப் பெருக்கோடு அதை அழிக்காமல் அந்த மண்ணிலேயே மாறவர்மன் விட்டு வைத்தான் என்றால், அதைத் "தமிழரசர்களின் தனிப்பெருஞ் சிறப்பு" என்று குறிப்பிடுவதைக் காட்டிலும் வேறு என்னவென்று சொல்வது?

குறிப்பு: இந்த நிகழ்ச்சி திருவெள்ளறையில் உள்ள சுந்தர பாண்டியன் கல் வெட்டு ஒன்றின் மூலம் நமக்கு அறியக் கிடக்கின்றது.

கி. பி. 1219-ஆம் ஆண்டில் நடை பெற்ற இந்த அருஞ்சம்பவத்தைக் கீழ்க்கண்ட பாடல் ஒன்றும் நமக்குத் தெளிவாக அறிவிக்கின்றது.

"வெறியார் தளவத் தொடைச் செய மாறன் வெகுண்ட
அறியாத செம்பியன் காவிரி நாட்டு லரமியத்துப்
பறியாத தூணில்லை கண்ணன் செய் பட்டினப் பாலைக் கன்று தோன்றும்
நெறியால் விடுந்தூண் பதினாறுமேயங்கு நின்றனவே!"



முதலாளி:— ஏண்டா! இவ்வளவு நாழியா கூப்பிடறேன்? ஏன் உடனே வரலே ?

பையன்:— புடவை கட்டிண்டுருந்தேனுங்க!...

முதலாளி:— என்னது? என்னடா உளர்றே?

பையன்:— நிஜமாத்தானுங்க! அந்த "ஷோ கேஸ்"லே இருக்கிற பொம்மைக்கு புடவை கட்டிண்டிருந்தேனுங்க !



பார்ஸலை குழந்தை போல்
அணைத்துச் செல்வோம்

எந்த லாரியும் சாமான்களைச் சுமந்து செல்லும். ஆனால் டி. வி. எஸ். லாரி தான் குறிப்பிட்ட நேரத்திற்கும், பாதுகாப்பிற்கும் பெயர் போன்றது. பதினான்கு வருட முதிர்ந்த தேர்ச்சியில் பண்படைந்த 2750 (எமது) சிப்பந்திகள் உங்கள் சாமான்களை கவனித்து காப்பாற்றிச் செல்கிறார்கள். லாரி செல்லும் இடங்களில், இடவசதிக்கு ஏற்றாப்போல், நமது பண்டக சாலைகள் உங்கள் சாமான்களை பாதுகாக்கின்றன.

ஸதர்ன் ரோட்வேஸ்
ப்ரைவேட் லிமிடெட், மதுரை

TVS-SR 677a

தென்னாட்டின் தலைசிறந்த அச்சகம்

நேஷனல் லித்தோ பிரஸ்

ரயில்வே பீடர் ரோடு, :-: சிவகாசி.

தபால் பெட்டி நெ. 30

போன் : 58 & 75 தந்தி : "லித்தோகிராப்"

அழகான முறையில் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு எங்களது அச்சகத்தில் தீப்பெட்டி, பீடி, மில், சோப், பயர் ஒர்க்ஸ், ஜவுளி, காபி, டீ, மிட்டாய், சோடா முதலியவைகளுக்குரிய லேபிள்கள், வால் போஸ்டர்கள் மற்றும் கார்டூன்களும், லித்தோவிலும், ஆப்செட்டிலும் பிரிண்டு செய்து கொடுக்கக்கூடும். காலண்டர்கள், பலவர்ணப் படங்கள், போட்டோ ஆப்செட்டில் தயார் செய்து கொடுக்கிறோம். சுவர்ச்சிகரமான பல வர்ணங்கள் கொண்ட பூ பார்டர்கள் உள்ள கலியாண பத்திரிகைகள் ரெடிமேடாக ஸ்டாக் வைத்திருக்கிறோம்.

கிரீஸென் பிரிண்டிங் இங்க் பேக்டரீ

'கிரிஸென்' லித்தோ & ஆப்ஸெட் இங்க் தயாரிப்பாளர்கள்,

"இங்கோகிராப்" :: சிவகாசி

தந்தி : 'குமரன்' டெலிபோன் : { மில் 98 / ஆபீஸ் 533

குமரன் மில்ஸ் லிமிடெட்,

பூளைமேடு P. O. கோயமுத்தூர்.

நிறுவப்பட்டுள்ள கதிர்கள் ... 19,044

மேற்கொள்ளப்பட்டுள்ள விஸ்தரிப்பு ... 5,900

நாங்கள் உயர்தரமான 20s 36s 40s 60s 80s நிர். பருத்தி நூலும், 20s நிர். ஸ்டேபிள் பைபர் நூலும் தயார் செய்கிறோம்.

எங்கள் நூலை

சென்னை, ஆந்திர மாகாணங்களில்

மிகுதியாக உபயோகப்படுத்துகிறார்கள்.

Sri G. V. RAMASWAMY NAIDU &

Sri G. V. MUTHUSWAMY NAIDU

Committee of Directors.

சினிமா விமர்சனம்

கலைப்பகுதி

கண்ணதாசன் பிலிம்ஸ் :—

மாலையிட்ட மங்கை

திராவிட நாட்டிலே தொடங்கி, சுடுகாட்டிலே முடிகிறது 'மாலை யிட்ட மங்கை'யின் கதை.

ஆம்; படம் ஒரு 'டிராஜடி'. கதாநாயகி கடைசியிலே மடிவதால் தான் சுடுகாட்டிலே முடிகிறது என்று சொல்கிறேன்.

சந்திரன், இலண்டன் 'ரிடர்ன்ட்', (அந்த பாகத்தை ஏற்றுள்ள மஹாலிங்கமும், திரையுலகத்திற்கு மீண்டும் திரும்பியிருக்கிறார்!) பணக்காரன்; சென்னையில் வேதநாயகர் வீட்டில் சரஸ்வதியைச் சந்தித்துக் காதலித்து மணம் செய்து கொள்கிறான்; பிறகு ஊர் அபவாதத்திற்கு பயந்து அவளை விரட்டுகிறான். முடிவில் மனந்திருந்துகிறான்; ஆனால் சரஸ்வதிதான் மறைந்து விடுகிறாள்.

'விந்தியம்—குமரியிடை விளங்கும் 'திரு நாடே' என்று துவங்குகிறது படம். விந்தியம்—குமரியிடை திராவிட நாடு இருக்கிறதாம்! என்னே பூகோள அறிவு!

சினிமாவிலாவது திராவிடப் பெண்களை — தமிழ், தெலுங்கு, மலையாள, கன்னடப் பெண்களை கூட்டி வைத்திருக்கிறார்கள், அனுதாபத்திற்குரியவர்கள்!

கறுப்புப் புடவை...சிகப்பு பார்டர் வசனங்களால் வாழ்க்கை மலருமா? இல்லை, அரசியல் தான் மாறுமா?

பொழுது போக்க வரும் பொது மக்கள், இவர்கள் கொள்கை விளக்கம் கேட்கவா வருகிறார்கள்?

அதையாவது விட்டுவிடுவோம்; படத்திலாவது புதுமை ஏதாவது 'மூச்'... அந்தப் பேச்சே கூடாது... எல்லாம் உளுத்துப்போன சரக்கு.

பண்டரி—மகாலிங்கம் பொருத்தமான ஜோடி. வயது, தோற்றம்-அதைத்தான் குறிப்பிடுகிறேன்! சுருக்கமும், பள்ளமும் பவுடரை மீறிப் 'பளிச்' அடிக்கின்றன.

பண்டரி நன்றாக அழுகிறார்; உணர்ச்சி ததும்ப நடிக்கிறார்.

மகாலிங்கம் பாடல்கள் சுவைக்கின்றன; நடிப்பு நகைப்பைத் தருகிறது.

திராவிடநாட்டுக் குடும்பம்-அவர்கள் எண்ணுவது நடந்தால் எப்படி இருக்கும் என்பதைக் காட்டுகிறது!

மாலையிட்ட மங்கையில் மகாலிங்கமும்—பண்டரியும்

தோன்றும் ஒரு காட்சி.

மைனவதி உப பாத்திரத்தை நன்கு நிரப்பி இருக்கிறார்.

காகா 'போடு போடு' என்று போடுகிறார்.

பாரி வள்ளல் நாடகம் சலிப்புத் தருகிறது; இராமாயண நாடகம் கொட்டாவியை வரவழைக்கிறது. திருமதி கமலா-லெக்ஷ்மண் நடனம் 'உச்' கொட்டச் செய்கிறது.

மாலையிட்ட மங்கையின் ஒரே சிறப்பு அம்சம்-பாடல்கள்; பொருள் ததும்பும், சுவை கொப்புளிக்கும், பண் இனிக்கும் பாடல்கள்.

டைரக்ஷன் செய்யப்பட்டிருப்ப தாகவே தெரியவில்லை; பிரசவ வேதனையோடு கட்டிலைப் பிடிக்கும் கரம் துள்ளக் காட்டுவதைத் தவிர பிற இடங்களில்.

மொத்தத்தில், 'மாலையிட்ட மங்கை'யைப் பொழுது போக்கிற்காக நம்பிக் கொட்டகைக்குள் செல்வது, மண் குதிரையை நம்பி ஆற்றிற்குள் இறங்குவதைப் போல; பாடல்கள் மலிந்து மார்க்கெட்டில் அடிபடும் பொழுது கேட்டுக் கொண்டால் போகிறது!

—"ரசிகன்"

வளரும் படங்கள்:

'செங்கோட்டை சிங்கம்'

காட்டில் உருவான வீரம் செறிந்த படம்

காட்டு மிருகங்கள் பலவற்றுடன் கதாநாயகன் நேருக்கு நேர், தத்ரூபமாகப் போர் புரியும் வீரம் செறிந்த காட்சிகளை "செங்கோட்டை சிங்கம்" படத்தில் ரசிகர்கள் விரைவில் காணப்போகிறார்கள்.

1000 அடி உயரத்தில் தேன் அருவி. செங்குத்தான மலையின் இடுக்கிலிருந்து தேன் எடுத்து கதாநாயகன் உதயகுமாரும், தங்கையாக நடிக்கும் மைனாவதியும் திரும்புகையில், மரங்கள் தாக்கி முறிக்கப்படும் சப்தம் கேட்கிறது. அந்த திசையில் பார்க்கிறார்கள் உதயகுமாரும், மைனாவும். மரங்களை முட்டி வீழ்த்தியது பயங்கர காண்டாமிருகம்! கதாநாயகனைத் தாக்க அந்த மிருகம் விரைந்து வருகிறது. 'அந்தப் பக்கம் போ' என்று தங்கையிடம் கூறிய கதாநாயகன், காண்டாமிருகத்துடன் சண்டை போட்டு, அதைக் கொல்லுகிறான்! இதற்குமுன் உலக வெள்ளித்திரையே கண்டிராத பிரமிக்கத் தக்க காட்சி இது!

இப்படத்தின் வெளிப்புறக் காட்சிகளில் பெரும்பாலும் உதக மண்டலத்திலும், அங்கிருந்து 46 மைல் தூரத்தில் உள்ள முதுமலைக்காட்டிலும் எடுக்கப் பட்டுள்ளன. காட்டு மிருகங்களுக்கு பெயர் பெற்றது முதுமலை. உலகைச் சுற்றி பார்க்கிறவர்கள், முதுமலையைக் காணுமல் இருக்க மாட்டார்கள்.

கதாநாயகனும், கதாநாயகியும் (சரோஜா தேவி) காட்டில் வருகையில், ஒரு இடத்தில் சிறுத்தை குறுக்கிடுகிறது. சரோஜா பயப்படுகிருள். ஆனுல் உதயகுமாரோ, அதன் வாலைப் பிடித்து சுழற்றிச் சுழற்றி கீழே வீசி எறிந்தார். சிறுத்தை பாயவில்லை; நடுங்கி ஓட்டமெடுத்தது!

மற்ருெரு சந்தர்ப்பத்தில், ஒரு கரடியின் பிடியிலிருந்து ஒரு கிராமப் பெண்ணை கதாநாயகன் காப்பாற்றி, கரடியுடன் மூர்க்கமான சண்டை போட்டு வீழ்த்துகிருன்!

கதாநாயகி ஒரு சமயம் இயற்கையை ரசித்துக்கொண்டு ஜீப்பில் செல்லுகையில், குறுக்கே மரம் விழுந்து கிடந்ததைப் பார்த்து இறங்குகிருள். பக்கத்தில் ஒரு மரத்திலிருந்து 17 அடி நீள மலைப்பாம்பு சரோஜா தேவியை நெருங்குகிறது. பயந்து போய் சரோஜா பின்னுல் நடந்து செல்லும்போது, சகதியில் சிக்கி 'ஹோ!' என்று அலறுகிருள். உதவிக்கு வருகிருன் கதாநாயகன். அவன் தனக்கு சகாயமாக இருக்க யானையை அழைக்க, யானை வந்து கதாநாயகியை சேற்றிலிருந்து மீட்கிறது.

காட்டு ராஜா யார்? சிங்கம் தான் என்பார்கள் எல்லோரும், ஆனுல் இந்தப்படத்தை அவர்கள் பார்த்து, "காட்டு ராஜா யானையே" என்ற முடிவுக்கு வருவர். இங்கே சிங்கத்தை யானை தோற்கடிக்கிறது! காலால் மிதித்து துவம்சம் செய்கிறது! அதிசயமே; ஆனுல் உண்மை!

காட்டுப்பன்றி-சிறுத்தை சண்டை, பாம்பு-நரி சண்டை முதலியவற்றையும் படத்தில் காணலாம்.

இந்தப்படத்தில் ஒரு காட்சிக்காக 5,000 உதவி நடிகர்கள் அமர்த்தப் பட்டார்கள்! ஒரு பெரிய மைதானத்தில் கதாநாயகனுக்கும் ஒரு மல்லனுக்கும் சண்டை நடக்கிறது. போட்டா—போட்டி குதிரைச் சவாரி நடக்கிறது. பிரமிக்கத்தக்க வாள் போரும் நடக்கிறது.

பரபரப்பான சண்டைகளை பார்ப்பதோடு, இயற்கை இன்பத்தையும் இந்தப்படத்தில் ரசிகர்கள் பருகலாம். குந்தா நீர்வீழ்ச்சி அடியிலிருந்து கதாநாயகி ஆடுகிருள், பாடுகிருள்—"சிங்கக்குட்டி, அந்தத் தங்கக்கட்டி" என்று. இந்தப் பாட்டு, ஒரு பெரிய ஹிட்! அந்த சிங்கக்குட்டி, செங்கோட்டை சிங்கம், ஜூலை 4-ம் தேதி வெள்ளித் திரைக்கு வருகிருன்!

பாட்டு வேணுமா? உனக்கொரு பாட்டு வேணுமா?
ராயல் பிலிம்ஸாரின் 'நீலாவுக்கு நிறைஞ்ச மனசி'ல் ஒரு காட்சி.

சித்ரா மூவிஸ் 'அதிகாரி'யில் பாலாஜி, சரோஜா, ராஜம் தோன்றும் காட்சி.

வீர விக்ரமாதித்தனும் வேல் விழிக்கு அஞ்சுகிருனே ?

பாரத் புரொடக்ஷன்ஸ் 'விக்ரமாதித்த'னில் எம். ஜி. ஆர்., ஈ. வி. சரோஜா

பொல்லாத சாமியார் என்ன செய்கிருர் ? என்பது

விஜயாவின் 'கடன் வாங்கிக் கல்யாண'த்தில் தெரியும்.

நாட்டியம்

ரஞ்சன், பி.ஏ., எம்.லிட்.,

“விபாவம், அநுபாவம், வ்யபிசாரி பாவம் ஸாத்விகபாவம் ஆகிய இவைகள் ஒன்று சேர்வதால் நலம் உண்டாகிறது” என்பதாக ரஸத்திற்கு இலக்கணம் கூறுகிருர் பரதர். ரஸம் என்பதற்குச் ‘சுவைத்தல்’ என்பது பொருள். சுவைக்கப்படுவது சுவை இதன் விரிவைக் கவனிப்பதன் முன்பு பழக்கமான சுவையைப் பற்றி-நாவின் மூலம் அறியப்படும் சுவையைப் பற்றி ஓர் உண்மையை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

“துவையல்” என்ற பதார்த்தத்தைத் தயாரிப்பதற்கு உப்பு, மிளகாய், புளி, தேங்காய் முதலியன தேவையாகும். இவைகளின் கூட்டுக் கலவையால் துவையல் தனக்கென ஒரு சுவை கொண்டதாக அமைகின்றது அல்லவா?

துவையலின் சுவையில் உவர்ப்பு புளிப்பு, காரம், இனிப்பு ஆகிய இவைகள் கலந்துள்ளன, ஆயினும் கலந்து ஒன்ருகிவிட்ட பின்பு இவைகள் தம் தனி நிலையை இழந்து துவையலின் கூட்டான சுவையுடன் ஒன்றுபட்டுப் போகின்றன.

கூட்டுச் சுவைகிடைப்பது எவ்வாறெனில் உப்பு, புளி, மிளகாய், தேங்காய் இவைகளின் கூட்டான பரிணாமத்தால் பெறுகிறோம். பரிணாமமாவது பாலுடன் கலந்த மோர் தயிராவதுபோலத் தனிச்சுவை கொள்வதாம்.

வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு என்ற முப்பொருள்களும் தனித்தனியான வர்ணமுடையனவாக இருந்து கலந்தவுடன், சிவப்பான வர்ண பரிணாம மடைகின்றன அல்லவா?

மேற்கூறிய இரண்டு உதாரணங்களின் மூலம் நாம் அறிந்து கொள்வது என்ன?

"தனித்தனியாகத் தோன்றும்பல பொருள்களும் பக்குவமாக ஒன்று சேரும்தன்மைவாய்ந்திருக்கின்றன. அவ்விதமாக ஒன்றுசேரும்பொழுது அவைகளின் அச் சேர்க்கையே பொருள்களுடைய தன்மையை மாற்றிப் புதியதொரு நிலையையும் அடைவிக்கின்றது'' என்பது தெறியப்பட வேண்டும்.

வெளிப்படையான கண், நாக்கு முதலிய இந்திரியங்களால் உணரப்படும் இச்சுவையைக் காட்டிலும் நுட்பமான முறையில் மேம்பட்ட சுவை யொன்றை விபாவம், அனுபாவம், வயபி சாரிபாவம், ஸாத்வீக பாவம், ஸ்தாயீ பாவம் இவைகளின் கூட்டு நிலையாலே உள்ளம் சுவையை உணர்வதே ரஸானுபவமாகும்.

மனிதன் முக்குணங்களாலே இயங்குகிறான். அக்குணங்களை ஸத்வ குணம், ரஜோ குணம் தமோ குணம் என்று அழைக்கிறோம். இம் மூன்று குணங்களுக்கு ஏற்பவே மனம் வேலை செய்கின்றது. கண்ணன் கீதையில் கூறியது போல ஸத்வ குணம் இன்ப மூட்டுகின்றது ரஜோ குணம் செயலைத் தூண்டுவதாகும்—தமோ குணம் பிழையும் மயக்கமும் உண்டாக அடிகோலுகிறது.

அதாவது ரஜோ குணமும் தமோ குணமும் குறைந்து ஸத்வ குணம் மேலிடும் பொழுதுதான் இன்ப உணர்ச்சி உண்டாகின்றது. இன்பமடையுங் காலத்தில் அவ்வின்பம் பெருத்தோ, சிறுத்தோ காணப்படுவதும் ஸத்வ குணத்தின் பெருக்கம் சுருக்கம் காரணமாக நிகழும் சம்பவமே யாம். இன்பத்தின் பெருமையும் சிறுமையும் இன்பத்திற்குக் காரணமாக அமையும் பொருளின் பெருமை-சிறுமையைப் பொறுத்திருக்கின்றன. பொருள் எந்த அளவு உயர்ந்ததோ அந்த அளவிற்கு ரஜோ குணமும் தமோ குணமும் குறைவு படுவதோடு, ஸத்வ குணமும் பெருகி மிக்கதொரு பேரின்பத்தை யளிக்கும் வசதியும் வலிமையும் பெற்றதாகின்றது.

இம் முறையாகக் கலையெனும் கருவி காரணமாக அமையும் பொருள்—ரஸம் எனும் பேரின்பத்திற்கு இணையான இன்பத்தைத் தந்துவிடுகிறது-சிறப்பான ந்ருத்ய காவியக்கலையான ந்ருத்யம் என்னுமிது, மனத்தின் ஸத்வ குணத்தை மிகுவித்து அது ஆன்மாவுடன் கலக்க வழி செய்வதன் மூலம் பேரின்பமாம் ரஸத்திற்குச் சிறந்த காரணமாக ஆகின்றது என்பதை உணரலாம்.

ஏன்ஸார்? பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு எப்படிப் போகனும்?

ஏன்! நீங்க இப்ப இருக்கிற மாதிரியே போகலாமே!

'இசைக்குயில்கள் வரிசை'

பி. சுசீலா

'' அமுதைப் பொழியும் நிலவே!''

இந்தப் பாட்டு இன்று தமிழகத்தில் கேட்கப் படாத இடம் ஏதாவது இருக்கிறதா? பட்டி-தொட்டி, பட்டணம்-நாட்டுப்புறம் எல்லா இடத்திலும், தேர்த்திருவிழா முதல் திருவல்லிக்கேணித் திலகர் கட்ட பொதுக்கூட்ட ஆரம்ப இசைவரை நிலவு பொழியும் அமுதை நினைவூட்டி நம்மைப் பரவச மூட்டுகிறது இந்த இசைத்தட்டு.

கேட்கத் கேட்கத் தெவிட்டாத இத்தென்னமுதை இசைத்த தீஞ்சுவைக் குரல் படைத்த குயில் தான் குமாரி பி. சுசீலா.

சென்னையிலே சிறந்த மயிலாப்பூர்; மயிலாப்பூரின் நாயகமான கச்சேரி ரோடு; அக் கச்சேரி ரோடில் கச்சிதமான ஓர் காலனி விநாயக நகர்.

விநாயக நகரின் நான்காவது எண் வீடுதான், இசைக் குயில் பி. சுசீலாவின் கூடு!

அழகிய 'பியட்' கார் வாசலை அணி செய்கிறது. வீட்டின் கதவிலே 'பளிச்' என்ற வெள்ளை ப்ளாஸ்டிக் எழுத்துக்களில், 'பி. சுசீலா, பின்னணிப்பாடகி' என்று ஓர் கதவிலும், 'பி. ஆர். மோகன்' என்று மறு கதவிலும் இரண்டு போர்டுகள். ஆம்; இந்த இசைக்குயிலின் கணவர் தான் மிஸ்டர் மோகன். இந்த இரண்டு போர்டுகளும், எப்பொழுதாவது வெகு அபூர்வமாகத் தான் 'உள்ளே' இருவரும் இருப்பதாகச் சொல்கின்றன!

கதவைக் கடந்து உள்ளே சென்றால்-விருந்தினர்களை வரவேற்கும் அறை; கச்சிதமான இரண்டொரு சோபாக்கள், வந்தவர்கள் குறிப்பு எழுதி வைக்க ஒரு சிறு நோட்டுப் புத்தகம்; அதைத் தாங்கிய ஒரு முக்காலி; பிறகு, ஒரு நாற்காலி.

அதோ! ஒன்று, இரண்டு, மூன்று, இருபது வரிசையாக, விதம் விதமான இருபது ஜோடி செருப்புகள். ஸ்லிப்பர்கள், செருப்புகள், பூட்ஸுகள் எத்தனை வண்ணம்! எத்தனை வகைகள்!

இதோ! மிஸ்டர் மோகன் வந்து விட்டார். பரந்த மார்பு, விசாலமான இருதயம், புன்னகை பொலியும்வதனம்.

தெளிவாக ஆந்திரமும், ஆங்கிலமும் பேசுகிறார். அறிமுகம் முடிந்தது.

'சுசிலா' என்று அழைத்தார். உடன் இசைக்குயில் பறந்துவந்தது; வள்ளுவர்-வாசுகி நினைவு எனக்கு வந்தது; சினிமா உலகில் ஓர் அபூர்வமான குடும்பம் இது!

ஆந்திர நாட்டு விஜயநகரத்தில் முகுந்தராவ் என்ற வழக்கறிஞரின் புதல்வியாகப் பிறந்தவராம், இந்த இசைக்குயில். திரு. முகுந்த ராவ் தனது நகரத்தில் ஓர் தலை சிறந்த

வழக்கறிஞர். குமாரி சுசீலாவைத் தவிர ஐந்து பெண்களும், மூன்று பையன்களும் அவரது செல்வங்களாகத் திகழ்கிருர்கள்.

குமாரி சுசீலாவின் இளமைப்பருவத்திலேயே இசை மீது அவருடைய பற்று வெளிப்பட்டதைக் கண்ட அவரது தந்தையார் சங்கீதக் கல்லூரிக்கு அவரை அனுப்பினுர். அங்கு 'டிப்ளமா' வாங்கியிருக்கிருர் இந்த இசைக்குயில்.

பிரபல 'வித்துவான் துவாரம் வெங்கிடசாமிநாயுடுவிடமும்முறைப்படி குமாரி சுசீலா இசை பயின்ருர். பிறகு சென்னை வந்து அடையாறு சங்கீதக் கல்லூரியில் சேர வந்தார். ஆனுல் கல்லூரியில் காலடி வைப்பதற்கு முன்பே கலேஉலகம் அவரை இழுத்துவிட்டது!

'அகில இந்திய ரேடியோ நிலேயத்தில்அவ்வப்பொழுதுபாடிவந்தேன். சென்னையில் கல்லூரியில் சேர்ந்து படிக்க வந்த இடத்தில், டைரக்டர் பிரகாஷ்ராவ் என்:இசையைக் கேட்டார்; சினிமா உலகிற்கு என்னை அழைத்தார்; ஏற்றுக் கொண்டு, சங்கீத டைரக்டர் நாகேஸ்வர ராவ் டைரக்ஷனில் முதன் முதலில் 'கன்னதல்லி' என்ற தெலுங்குப் படத்தில் 1953-ல் பாடினேன். சினிமா உலகில் நான் திட்டமிட்டு பிரவேசிக்கவில்லை; என்னை அறியாமலே அது திடீரென்று நிகழ்ந்து விட்டது' என்றுசொன்னுர், குமாரி சுசீலா.

'கணவனே கண்கண்டதெய்வ'த்தில் 'உன்னைக் கண் தேடுதே என்ற பாடல் இவருக்குப் புகழைத் தேடிக் கொடுத்தது. அதற்குப் பிறகு நூற்றுக் கணக்கான பாடல்களை தமிழ், தெலுங்கு, கன்னடம், மலேயாளம், இந்தி, சிங்கள மொழிகளில் இவர் பாடி விட்டார்.

'எங்கள் வீட்டு மகாலக்ஷ்மி'யில், 'பட்டணம்தான் போகலாமடி', என்ற பாடல் இவருடைய புகழை உறுதிசெய்துவிட்டது.

'அமுதைப் பொழியும் நிலவே' என்ற பாடலோ, 'தங்கமலே இரகசியத்தை'யே வெற்றிப் படமாக்கியதோடு, இவருக்கும் அதிர்ஷ்டத்தைப் பொழிந்து விட்டது!

'நௌஷாத்', ஸி. ராமச்சந்திரா, ஹேமந்தி குமார் ஆகிய எல்லா பிரபல இந்தி சங்கீத டைரக்டர்களின் மேற்பார்வையிலும் பாடியாகி விட்டது. 'சினிமா உலகைப் பொறுத்த அளவில் எனக்கு இனி எவ்வித இலட்சியமும் ஆசையும் கிடையாது' என்று குமாரி பி. சுசீலா சொல்கிருர்.

சினிமா உலகில் இப்படி ஆசை இல்லாத ஒரு அடக்கமானவரும் இருப்பது பற்றி எனக்குப் பெருவியப்பு!

'சரி... தனிப்பட்ட வாழ்விலாவது ஏதாவது இலட்சியங்கள் உண்டா?' என்று கேட்டேன்.

குமாரி சொன்னுர்: "நல்ல, இலட்சிய மனைவியாக விளங்குவது தான் என் இலட்சியம்."

மிஸ்டர் மோகன் முறுவலித்தார், பெருமையோடு. சுவற்றிலே கிடந்த இரண்டு காலண்டர்களிலும்'கொழு கொழு' என்று இரண்டு குண்டுக் குழந்தைகள் குறும்புப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தன. அவற்றைக் காட்டி,

'உங்களுக்கு, குழந்தைகள் என்ருல்...' என்று இழுத்தேன்.

'ரொம்ப ரொம்பப் பிடிக்கும்' என்று குமாரியும், குமரனும் ஏக காலத்திலே ஒரே குரலில் எதிரொலித்தார்கள்!

"ஆங்கில சினிமாப்படங்களுக்குத் தான் அடிக்கடி போகிருேம். 'ஆட்ரி ஹெப்பர்ன்' நடித்த 'ரோமன் ஹாலிடே' 'சுசீலாவிற்கு மிகவும் விருப்பமான படம்" என்ருர் திரு.மோகன்.

o o o

குமாரி திரு. பி. லீலாவிற்கு ஒரு அருமையான, அன்பே உருவான தந்தை வாய்த்திருப்பதைப் போல, குமாரி பி. சுசீலாவிற்கு அழகும்,

அன்பும் நிறைந்த கொழுநன் அமைந்திருப்பது அவருடைய நல் வினை.

சினிமா ரசிகர்களின் இசை மருந்தை வழங்கி இன்பம் தரும் இந்த சங்கீத வைத்தியரின் கணவரும் ஒரு டாக்டர்.

'மனம்போல நீடு வாழ்ந்து கலைத் தொண்டு செய்வார்களாக! அத்துடன் 'டுமெக்ஸ்' குழந்தைகள் பல உயிரோடு இவர்கள் வீட்டில் அமுதை ஒத்த மழலை மொழிகளைப் பொழிந்து கொண்டு நடமாடுவதாக என்று' துங்கமணிக்கர முகத்தோன் தும்பிக்கை விநாயகன் தூய கழல் பணிந்தபடி விநாயக நகர் நீங்கினேன்.

—“ஆரெஸ்லஸ்”

நம்பிக்கை நிறைந்த எதிர்காலம் இருக்க நகைப்பிற்கா பஞ்சம்!
('நாட்டுக்கொரு நல்லவள்' ராஜேந்திரன், விஜயகுமாரி.)

நவயுவதிகளும் நாகரீகமும்

நாகரிகம் என்பது ஒரு புதிய புரட்சி!

நாகரிகமில்லாவிட்டால் வாழ்க்கையிலே அழகு இருக்க முடியாது. இந்தப் புரட்சி அதிகப்பட, அதிகப்பட மக்களின் தேவைகளும் அதிகமாகிக் கொண்டே போகின்றன. இன்று சமையலைச் செய்வதற்கு ஒரு சாதனம் கண்டுபிடிக்கப்பட்டது என்றால் நாளை சமைத்து அதை எடுத்து எல்லோருக்கும் பரிமாறுவதற்கு மற்றொன்று கண்டு பிடிக்கப்படுகிறது. உலகத்தின் ஒரு கோடியில் ஒருவர் பேசினால் மறு கோடியிலிருப்பவர் அவர் குரலைக் கேட்கிறார் என்ற அதிசயம் நீங்குவதற்குள் பேசுபவரை நேராகவே பார்க்கும்படியான 'டெலிவிஷன்' போன்ற சாதனங்கள் தோன்றுகின்றன.

'நாகரிகமும் விஞ்ஞானமும் ஒன்றுக்கொன்று அஸ்திவாரம் போன்றவை என்றார் ரவீந்திரநாத தாகூர். நான் கூறுகிறேன் : "**நாகரிகமும் பெண்களும் ஒருவருக்கொருவர் நெருங்கிய நண்பர்கள்**' என்று! ஏன் தெரியுமா? நாகரிக உலகிலே நவயுவனுக்கு அதிக இடம் இல்லை. நவயுவதிக்குத்தான் முதலிடம். பிரெஞ்சு நகரத்தின் தலைநகர் பாரிசில் தினம் ஒரு நாகரிகம் தோன்றினால் அந்த நாகரிகம் பெண்களால்தான் கையாளப்படுமாம்! அதே போல நமது நாட்டிலே இன்று புதிய மோஸ்தர்சோலிபோட்டுக்கொண்டு ஒரு பெண் போனால் அவளைப் பல பெண்கள் பின்பற்றுவார்கள். இந்த மாங்காய் மாலை இன்றையநாகரிகம், இந்த புல் புல்...ஜில் ஜில்...வளை நாளைய நாகரிகம். இந்த முத்துச் சரங்கள் இனி வரப்போகும் நாகரிகத்தின் அறிகுறி! இந்த உதட்டுச் சாயங்கள், காதணிகள், நகக்குழம்புகள் யாவும் பெண்களுக்குரிய நாகரிகச் சின்னங்களேயாகும்!

இன்றைய நாகரிகத்திலேமூழ்கிய நாம் புதுப்புது அழகுக் குறிப்புகள், ஆபரணங்கள் புது நாகரிக சமையற் குறிப்புகள் யாவற்றையும் தவறாமல் படிக்கிறோம். எழுதிக்கொள்கிறோம். அதே மாதிரியாக அனுஷ்டானத்திற்கும் கொண்டு வருகிறோம். அந்தக் காலத்திலே கைகேயி சம்பாசுர யுத்தத்தில் தசரதருக்கு சாரதியாகத் தேரை நடத்தினால், இந்தக் காலத்து நாகரீக உலக யுத்தத்தில் வெற்றி பெற நினைக்கும் பெண்களாகிய நாம் நம் வீட்டு மோட்டார் காரை நாமே செலுத்தி 'நாகரிகமான பெண்' என்று பெயரெடுக்கிறோம்.

நாகரிகத்தின் மோகத்திலே சிக்கிய நமக்கு அழகுச் சாதனங்கள் பெருகுகின்றன. ஸ்னோ, பவுடர் உதட்டுச் சாயங்கள், நகக்குழம்பு

கிரீம்களை உபயோகிப்பதால், அவற்றை செய்வதற்கு தொழிற்சாலைகள் ஏற்படுகின்றன. தொழிலாளிகளும் நாகரீகத்தினுல் ஜீவிக்கிருர்கள்.

இந்தக் காலத்திய நாகரிக யுவதிகளையும், அந்தக் காலத்து மாமிகளையும் பாருங்கள்! எவ்வளவு வித்தியாசம்? அந்தக் காலத்து க்ளியோபாட்ரா போன்ற அழகிகள் இந்தக் காலத்து ஹாலிவுட் எக்ஸ்ட்ராவாகக் கூட இருக்க முடியாது என்ருராம் பெர்னுட்ஷா! உண்மையில் நீங்களே சிந்தித்துப் பாருங்கள்! நாகரிகம் எப்படி நம்மை அழகுபடுத்துகிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள்!

சகோதரிகளே! சற்று சிவந்தநிறமுள்ளவர்கள் உதட்டுக்கு லேசாக வர்ணமோ அல்லது வெற்றிலைக்காவியோ ஏற்றிக் கொண்டால் அழகாக இருக்கும்! கருப்பு நிறமுடையவர்களுக்கு சிவப்பு நிறத் துணிகள் எடுப்பாக இருக்கும். பருமஞக இருப்பவர்களுக்கு சோலி போட்டால் ஒல்லியாகத் தெரிவார்கள். மாநிறமாக இருப்பவர்களுக்கு லேசாகப் பவுடரைப் பூசினுல் சோபிதமாக இருக்கும்.

நாகரிகம் நமககு இன்றியமையாதது. முடிந்தவர்கள் நாகரிகத்தை

வளருங்கள். பண வசதியுள்ளவர்கள் நகக்குழம்பு உதட்டுச் சாயங்களை வாங்கி உபயோகியுங்கள். பண வசதி இல்லாத சகோதரிகள் மருதாணியையும், வெற்றிலையையும் உபயோகியுங்கள். நாகரிகம் நமக்கு அவசியம்! நாகரிகத்தில் தான் நாம் அழகு பெறுகிருேம் என்பதை மறந்து விடாதீர்கள்! வாழ்க நாமும் நாகரிகமும்!!

197695

இயற்கை வைத்தியம்

என். எஸ். சுப்பையர்

இயற்கை வைத்தியம் மூன்று அடிப்படைத்தத்துவங்களில் அடங்கியது. சென்ற நூற்றுண்டில் இந்த முறையை கையாண்டவர்கள் பலர் உண்டு. இவர்களுக்குள் வின்ஸன்ஸ் பிரஸ்நீட்ஸ் (Vincenz Bresneitz), ஜொஹான்ஸ் ஷ்ராத் (Johannes Schroth), ஆர்நால்ட் ரிக்லி (Arnold Rehli), ஜஸ்ட் (Just), பாதர் நீப் (Father Kneip), லீயி கூன் முக்கியமானவர்கள். பாதர் நீப் தண்ணீர் சிகிச்சை மூலம், வியாதிகளை குணப்படுத்தி ஐரோப்பா கண்டம் பூரா விலும் கீர்த்தி பெற்று விளங்கினுர். மேற்படியாளர்கள் அனே வரும் வைத்தியப் பட்டம் பெற்றவர்களோ (Medical Degrees) அல்லது தங்கள் வாழ்க்கையில் வைத்தியத் தொழிலில் ஈடுபட்டவர்களோ அல்ல. இயற்கை வைத்தியத்திற்கு தெளிவான உருவம் கொடுத்து விஞ்ஞான ரீதியில் விளக்கம் தந்த பெருமை ஸ்ுயாக் கூனுக்கே உரித்தானது. இவர் ஜெர்மனியில் லீப்ஸிக் (Leipsic) என்ற நகரத்தில் ஒரு லாபகரமான தொழிற் சாலையின் அதிபராய் இருந்து வந்தார். ஆனுல் புத்து நோயாலும், க்ஷயரோகத்தினுலும் பீடிக்கப் பட்டு, பல டாக்டர்களிடம் சிகிச்சை பெற்று குணம் காணுமல் இயற்கை வைத்தியத்தின் பால் தன் கவனத்தை செலுத்தி, தன் வியாதிகளை குணப்படுத்திக் கொண்டு, அதிலிருந்து தன் தொழிற்சாலையை விட்டு விட்டு, தன் ஆயுளையும் இந்த முறைக்கு அர்ப்பணித்து, பல இடங்களில், பிரசாரங்களும் பிரசங்கங்களும் செய்து, பலரக வியாதிகளை (குஷ்டம், புத்துநோய் உள்பட) குணப்படுத்தி, மக்களின் மதிப்பையும் நன்றியையும், பெற்றதோடு கூட, மற்ற வைத்திய முறைகளை விட இயற்கை முறை மேலானது என்பதையும், நிரூபித்தார்.

முதல் தத்துவம்.

எல்லா வியாதிகளுக்கும் மூல காரணம் ஒன்றேதான். நம் தேகத்திலுள்ள அணுக்களால் உபயோகப் படுத்தப்படாமலும் அவைகளுக்கு தேவைப் படாததுமான சில கழிவுப் பொருள்கள் நம்ரத்தத்தில் (Toxic impurities) கலந்திருக்கின்றன. ரத்தத்திற்கு தன்னைத்தானே சுத்திகரித்துக் கொள்ளும்சக்தி இருக்கிறது. (Anti Bacterioeotic power) உதாரணமாக ஓடும் ஆற்று நீரின் ஒரு முனையில் சாக்கடைத் தண்ணீரை ஊற்றினுல் இதிலுள்ள கெட்டி பாகத்தை தன் படுகையில் (bed) படியவைத்தும் திராவகத்தைக் கரைத்தும் செய்து, தண்ணீர் சிறு தூரத்திற்கப்பால், மறுபடியும், சுத்தமாகவும், தெளிவாகவும் ஓடுகிறது. இம்மாதிரி, நம் ரத்தம் தேகத்தினுள் சுற்றிவரும் பொழுது பலவீனமாயும் எதிர்ப்பு சக்தி குறைந்ததாய் இருக்கும் உறுப்புகளின் மேல் தன் கழிவு பொருட்களை படிய வைத்து விடுகிறது. இந்த படிவம் ஏற்படும் உறுப்பின் பெயரால், டாக்டர்கள் வியாதிகளை குறிப்பிடுகிறுர்கள். அதாவது படிவம் இருதயத்தில் அமர்ந்து உபாதை கொடுத்தால் இருதய நோய் என்றும் (Heart disease), மூத்திர கிராதிகளிலானுல் கிரந்தி நோய் (Kidney disease) என்றும் சொல்லுகிறுர்கள். கடவுளை அவர் பல சாதனைகளைக் கொண்டு பல பெயர்களால் நாம் எப்படி பூஜிக்கிறோமோ அதேபோல் பாதிக்கப்பட்ட உறுப்புகளின் பெயர்களால் டாக்டர்கள் நூற்றுக்கணக்கான வியாதிகளை சிருஷ்டித்திருக்கிறுர்கள்.

மக்கள் விரும்பும்
ராமகிருஷ்ண
பீடிகள்

P.R. ஆறுமுக நாடார் & சன்ஸ்
முக்கூடல், திருநெல்வேலி ஜில்லா.


சீமான்களும்
சீமாட்டிகளும்
என்றும் விரும்புவது
சீமாட்டி
ஸ்டோர்ஸ்
துணிகளையே!
சீமாட்டி ஸ்டோர்ஸ்
சாலை பசார், திருவனந்தபுரம்.

Edited and Published by K. T. Kosalram and Printed by G. Rengiah, Manager, Mohan Ram Press, at 202, J. J. Khan Road, Madras-14.